இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 214 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 14 புதன்கிழமை 28.06.2017

## கொழும்பில் திரண்டனர் கேப்பாபிலவு மக்கள்

### அரச தலைவர் செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 28
இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்கள் நேற்று கொழும்பில் அரச தலைவர் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.
கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட இவர்கள் அரச தலைவர் அலுவலகம் நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அரச தலைவர் செயலகத்துக்குள் செல்ல அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டு பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர். விரிவு பக் .02

## ஒக்ரோபர் 2 இல் தேர்தல் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 28
செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபரில் ஆயுட்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பு ஒக்ரோபர் 2ஆம் திகதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்றுத் தெரி >> 26

## ஜப்பான் பொலிஸார் மீது இலங்கையர்கள் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 28
ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இலங்கைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் ஜப்பானிய பொலிஸார் சிலர் தாக்கப் >> 26

## 2016இல் குற்றங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 28
இந்த ஆண்டு நாட்டில் குற்றச் செயல்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகச் சட்டம் ஒழுங்கு அமைச்சு ஒப்புக் கொண்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் பதி >> 04

## கடும் வறட்சியால் 8 லட்சம் பேர் பரிதவிப்பு

கொழும்பு, ஜூன் 28
கடும் வறட்சி காரணமாக 11 மாவட்டங்களைச் சேர்ந்த 8 இலட்சத்து 58 ஆயிரத்து 837 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள் >> 04

## டெங்கு தலைவிரிப்பு 70 ஆயிரம் பேர் பாதிப்பு

### இருவார ஒழிப்புப் பணி இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 28
நாடளாவிய ரீதியில் இரண்டு வார டெங்கு ஒழிப்புத்திட்டம் இன்று முதல் ஆரம்பமாகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
வெள்ளப்பெருக்கையடுத்து நாட்டில் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக அதிகளவான மழை பெய்துவருவதால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள் >> 26

## தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு முதல்வர் ஏன் அச்சப்படுகிறார் ?

### கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூன் 28
அமைச்சர்கள் மீதான விசாரணைக்கு, சட்டரீதியான - சுதந்திரமான தெரிவுக் குழு அமைத்து விசாரணைகள் மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதற்காக அச்சப்படுகிறார் தயங்குகின்றார். இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண >> 26

## கருணாநிதி வழியில் வடக்கு முதல்வரும்

### ஊடகங்களுக்கு கேள்வி – பதில் அறிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 28
தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, தானே கேள்வியைத் தயாரித்து அதற்குப் பதிலையும் குறிப்பிட்டு பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதைப் போன்று, >> 26

## முதல்வரின் அமைச்சு மீதும் விசாரணைவேண்டும்

### தெரிவுக் குழுவைக் கோரும் பிரேரணை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
முதலமைச்சரின் அமைச்சு உள்ளிட்ட 5 அமைச்சுக்கள், திணைக்களங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பில் தெரிவுக் குழுவை அமைத்து விசாரித்து, விசாரணை அறிக்கையை மாகாண சபைக்குச் சமர்ப்பிக்க >> 26

## பொனிபஸ் பெரேராவை இராணுவத் தளபதியாக்க பிக்குகள் கடும் அழுத்தம்



கொழும்பு, ஜூன் 28
அடுத்த இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவை நியமிக்கவேண்டும் என்று பௌத்த மதகுருமார் பலரும் அரச >> 26

## 27 ஆண்டுகளின் பின் மயிலிட்டித் துறை திங்களன்று விடுவிப்பு




யாழ்ப்பாணம், ஜூன் 28
இலங்கையின் மொத்த மீன்பிடியில் மூன்றிலொரு பங்கை தன்னகத்தே கொண்டிருந்த மயிலிட்டித் துறைமுகம் மற்றும் அதனோடு இணைந்த 54.6 ஏக்கர் நிலப்பரப்பு என்பன எதிர்வரும் 3 ஆம் >> 26

## கிளிநொச்சிக்கு இன்று வருகிறார் ருவான் விஜயவர்த்தன

யாழ்ப்பாணம், ஜூன் 28
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமாதா நகருக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ளார். இரணைதீவை விடுவிக்குமாறு கோரி போராட் >> 26

## பல்கலை. மாணவர்கள் கொலை: உண்மையை மறைத்து பொலிஸார் அறிக்கை

### முதலாம் சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை தொடர்பில் நடந்தவைகள் உடனடியாகவே பொலிஸ் பதிவுப் >> 04

## வித்தியா படுகொலை: மூன்று நீதிபதிகள் தீர்ப்பாயத்தின் தொடர் அமர்வு இன்று ஆரம்பம்

### சட்டமா அதிபர் தொடக்க உரையாற்றுவார்



யாழ்ப்பாணம், ஜூன் 28
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயத்தின் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இன்று தொடர் விசாரணைக்கு வருகிறது.
வழக்குத் தொடுநர் சார்பில் பதில் சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா தீர்ப்பாயம் முன்னிலையில் >> 26

## செல்போன், ரப் எதுவுமில்லாது நேற்று அமைச்சரவைக் கூட்டம்

### மைத்திரியின் உத்தரவால் அடங்கினர் அமைச்சர்கள்

கொழும்பு, ஜூன் 28
அமைச்சரவைக் கூட்டத்தின்போது, அமைச்சர்கள் கையடக்கத் தொலைபேசி, 'ரப்' உள்ளிட்ட இலத்திரனியல் உபகர >> 26

## வயோதிபப் பெண்ணைக் கொன்ற குடும்பத்தலைவருக்குத் தூக்கு

### யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
வயோதிபப் பெண்ணை கொலை செய்து நிலத்தில் குழிதோண்டிப் புதைத்த குடும்பத் தலைவருக்கு தூக்குத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் >> 04






# கொழும்பில் திரண்டனர் கேப்பாபிலவு மக்கள்

## நிலத்தை விடுவிக்க வலியுறுத்தி அரச தலைவர் செயலகம் முற்றுகை

யாழ்ப்பாணம், ஜூன் 28

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கொழும்பில் திரண்ட கேப்பாபிலவு மக்கள் நேற்று அரச தலைவர் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் கேப்பாபிலவு மக்களுடன் சம உரிமை இயக்கம், முன்னிலை சோசலிசக் கட்சி என்பன இணைந்திருந்தன.

மு.ப. 10.30 மணியளவில் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக கூடிய கேப்பாபிலவு மக்கள் அங்கு கவன வீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். வடக்கு மாகாண மக்களுடன், தென்பகுதியைச் சேர்ந்த மக்களும் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

அங்கிருந்து அவர்கள் ஊர்வலமாக அரச தலைவர் செயலகம் நோக்கிச் சென்றனர். அரச தலைவர் செயலகத்துக்குள் செல்வதற்கு அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. கலகம் அடக்கும் பொலிஸார் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. நீர்த் தாரைப் பிரயோக வாகனங்களும் அவ்விடத்துக்கு வந்தன. மக்கள் அவ்விடத்தில் அமர்ந்து தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு தொகுதியினரை பொலிஸார் அரச தலைவரின் அலுவலகத்துக்குள் பின்னர் அனுமதித்தனர். அரச தலைவரின் செயலாளரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர். அரச தலைவர் அலுவலகத்துக்குள் சென்றவர்கள் திரும்பும் வரை ஏனையோர் வீதியில் அமர்ந்திருந்தனர்.

அரச தலைவர் செயலகத்துக்குள் அனுமதிக்கப்பட்டவர்களை அரச தலைவரின் மூத்த உதவிச் செயலாளர் சமந்தி ரணசிங்க சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரிடம் கோரிக்கைகள் அடங்கிய அரச தலைவருக்கான மனு கையளிக்கப்பட்டது என்றும் தெரிவித்தனர்.

"கேப்பாபிலவு மக்களின் காணிப் பிரச்சினை தொடர்பாக இது வரை ஜனாதிபதி செயலகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படவில்லை. காணி உறுதிகளின் பிரதிகள் அடங்கிய கோவையை மின்னஞ்சலில் அனுப்புமாறு அரச தலைவரின் மூத்த உதவிச் செயலாளர் சமந்தி ரணசிங்க தெரிவித்தார்." என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர்.

"பிரச்சினை உள்ளது. மீள்குடியேற்றம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து அரச தலைவர் தலைமையில் கலந்துரையாடி இதற்குரிய முடிவை அறிவிப்போம் என்று அரச தலைவரின் மூத்த உதவிச் செயலாளர் சமந்தி ரணசிங்க உறுதியளித்தார் என்றும் மக்கள் குறிப்பிட்டனர்.

அரச தலைவரின் செயலகத்துக்குள் அனுதிக்கப்பட்டவர்கள் சந்திப்பு முடிந்து திரும்பும் வரையில் ஏனையோர் வீதியில் அமர்ந்திருந்தனர். சந்திப்பு முடிந்து அவர்கள் திரும்பியதும் அவர்கள் தமது போராட்டத்தை முடித்துக் கொண்டனர். (ம-ஐ-10)

## சுகாதாரத் தொண்டர்கள் கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சி, ஜூன் 28

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற சுகாதாரத் தொண்டர்கள் நேற்று முதல் கவனவீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முன்பாக நேற்று முற்பகல் 11 மணிக்கு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நீண்டகாலமாக சுகாதார தொண்டர்களாகக் கடமையாற்றும் தமக்கான நியமனம் வழங்கும் வரை போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை வவுனியாவில் சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரி கடந்த 55 நாள்களைக் கடந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## அரியரட்ணத்தின் பெயர் பிரேரிக்கப்படவேயில்லை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாண கல்வி அமைச்சராக ப. அரியரட்ணத்தின் பெயர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரேரிக்கப்படவில்லை என்று இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையேயான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுப் பதவியை வகித்து வந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த த.குருகுலராசா பதவி விலகியுள்ளதால் அந்தப் பதவி வெற்றிடத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் யாரை நியமிப்பது என்று அதில் ஆராயப்பட்டது.

அதன்போது கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் ப.அரியரட்ணத்தின் பெயர் முன்மொழியப்படவுமில்லை. அதனை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் எதிர்க்கவில்லை. அரியரட்ணம்தான் மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட்டின் பெயரை முன்மொழிந்தார். என்று எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார். (ம-5)

## யாழ். இந்துவில் நாளை ஆசிரியர் மதிப்பளிப்பு

### *1996 உயர்தரப் பிரிவு மாணவர்களின் ஏற்பாட்டில் கோலாகலம்*

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயின்ற 1996ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களின் ஏற்பாட்டில் அவர்களது காலத்தில் கற்பித்த ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை கல்லூரியில் கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் சபாலிங்கம் மண்டபத்தில் உள்ள அரங்கத்தில் நண்பகல் 11 மணியளவில் நிகழ்வு ஆரம்பமாகும். 1988ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் நிகழ்வில் மாணவர்களால் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

ஓய்வுபெற்றுச் சென்றுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் தற்போதும் சேவையில் உள்ள ஆசிரியர் எனப் பலரும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து நிகழ்வில் கலந்துகொள்கின்றனர். நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பல்வேறு நாடுகளில் இருந்தும் மாணவர்கள் வருகை தந்துள்ளனர்.

தங்களை அறிவிலும் ஒழுக்கத்திலும் வளர்த்தெடுத்த ஆசிரியர்களை மதித்து அவர்களுக்குத் தமது நன்றியறிதலைத் தெரிவிக்கும் வகையில் தம்மை ஏணியில் ஏற்றி உச்சத்தைத் தொட வைத்த ஆசான்களின் பாதங்களை வணங்கும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அதனை ஒழுங்குபடுத்திய 1996 உயர்தரப்பிரிவு மாணவர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வையொட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவர்கள் பாடசாலையில் முழு நேரத் தொண்டுப் பணியிலும் ஈடுபட்டனர். வளாகத்தை முழுமையாகத் துப்புரவு செய்ததுடன் மாணவர்களின் வசதிக்கான சிறு சிறு வேலைகளையும் செய்து கொடுத்துள்ளனர்.

தமது மாணவர் அணியின் சார்பில் பாடசாலைக்கு எதிர்காலத்தில் செய்து கொடுப்பதற்கான சில திட்டங்கள் ஆராயப்பட்டு வருவதாகவும் விரையில் அவை இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். நிதியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்கூடாக உதவித் திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர். (உ)

## தகவல் ஆணைக்குழு முன்னிலையில் மூக்குடைபட்டார் வடக்கு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 28

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக, பத்திரிகைகள் தகவல்கள் கேட்பது தொடர்பில், தகவலுக்கான ஆணைக் குழுவில் வடக்கு மாகாணத்தின் உயர் அதிகாரி முறைப்பாடு தெரிவித்தார். தகவல்கள் கேட்பதற்காகத்தானே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்ற ஆணைக்குழுவின் பதிலுடன் அந்த அதிகாரி அடங்கிப்போனார்.

வடக்கு மாகாண நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் இருவர், தகவலுக்கான ஆணைக்குழுவின் விசாரணைக்காக நேற்று அழைக்கப் பட்டிருந்தனர். மாகாண நிர்வாகத்தில் பணியாற்றும் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரி, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக சில தகவல்களை வடக்கு மாகாணத் திணைக்களங்களில் கோரியிருந்தார். தகவல் மறுக்கப்பட்டமையால் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாட்டுக்கு அமையவே, மாகாண நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் இருவர் ஆணைக்குழுவின் விசாரணைக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணையின்போது ஒரு அதிகாரி, பத்திரிகையாளர்கள் கண்ட கண்ட தகவல்களையெல்லாம் மின்னஞ்சல் ஊடாகக் கேட்கின்றார்கள் என்று ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். ஆணைக்குழுவினர், தகவல்கள் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் சட்டம் கொண்டு வரப்பட்டது. மின்னஞ்சல் ஊடாகத் தகவல்கள் கோருவதற்கு சட்டம் இடமளித்துள்ளது என்று பதில் வழங்கியுள்ளனர். (ஐ-5)

# வீட்டிலிருந்து சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமீன்மடுவில் வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவனின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டது.

16 வயதுடைய ஒருவரே உயிரற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டக் குற்றத் தடவியல் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் விசாரணையின் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# நோயாளியின் வயிற்றில் 10 கிலோ எடையில் கட்டி

## சத்திர சிகிச்சை மூலம் அகற்றம்!

கொழும்பு, ஜூன் 28

தம்புள்ளை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவரின் வயிற்றில் இருந்து 10 கிலோ எடையுடைய கட்டி நேற்று சத்திரசிகிச்சை மூலம் அகற்றபட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மெல்சிறிபுர பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடைய ஒருவரின் வயிற்றிலிருந்தே இந்தக் கட்டி அகற்றப்பட்டுள்ளது. அவர் வயிற்று வலி காரணமாக சில தினங்களுக்கு முன்னர் தம்புள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அவருக்கு சில பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில், இடது சிறுநீரகத்துக்கு அருகில் வயிற்றில் பெரும் கட்டியொன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தம்புள்ளை மருத்துவனையின் சிறப்பு நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் குழுவால் நேற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சுமார் பத்து கிலோ எடையுடைய குறித்த கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கட்டியை ஆய்வகத்துக்கு அனுப்பத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# கிளிநொச்சி பொதுச்சந்தை கடைத்தொகுதிக்கான வரைபடம் அங்கீகாரம்

கிளிநொச்சி, 28

கிளிநொச்சி பொதுச்சந்தையில் அமைக்கப்படவுள்ள கடை தொகுதிகளுக்கான வரைபடத்தை அங்கீகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

மாவட்ட மேலதிக செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. கிளிநொச்சி பொதுச்சந்தைப் பகுதியில் மீள்குடியமர்வு அமைச்சின் நிதியுதவியுடன் 150 மில்லியன் ரூபா செலவில் கடைத்தொகுதிகளை அமைப்பது தொடர்பாக கடந்த 19ஆம் திகதி கலந்துரையாடப்பட்டது.

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அந்த கலந்துரையாடலுக்கு அமைவாகவே, வரைபடத்தை அங்கீகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மாகாணசபை உறுப்பினர்கள் ப.அரியரத்தினம், த. குருகுலராஜா, சு.பசுபதிப் பிள்ளை, கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)



# சுகாதாரப்பரிசோதகர்கள் போராட்டம் சுகவீன விடுப்பு

கொழும்பு,ஜூனை் 28

பல்கைக்கழக மாணவர்கள் கொழும்பு சுகாதார அமைச்சின் அலுவலகத்தைத் தாக்கிச் சேதங்களை விளைவித்தமையைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று ஒரு நாள் சுகவீன விடுப்புப் போராட்ம் நடத்தினர்.

கடந்த 21ஆம் திகதி மாலபே சைட்டம் தனியார் மருத்துவக்கல்லூரியை மூடுமாறு கோரி பல்கலைக்கழ மாணவர்களால் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து சேதங்களை ஏற்படுத்தினர். கலகம் அடக்கும் பொலிஸார் மாணவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகத் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். அதன் போது மாணவர்கள் பலரும் காயமடைந்தனர்.

இதனையடுத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நாடளாவியரீதியில் கடந்த 22ஆம் திகதி பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது. இந்த நிலையில் சுகாதாரப்பரிசோதகர்களால் சுகவீன விடுப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ஐ-9)

# சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யத்திட்டம்

## பொருளாதார அபிவிருத்திக்குழு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 28

சம்பூரில் திரவ எரிவாயுவைப் பயன்படுத்தி செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த மின் உற்பத்தித் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு பொருளாதார அபிவிருத்திக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

சம்பூரில் அனல்மின் நிலையம் அமைத்து மின் உற்பத்தி மேற்கொள்வதற்கு மகிந்த அரசின் காலத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதற்காக சம்பூர் மக்களின் காணி சுவீகரிக்கப் பட்டிருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து. காணிகள் படிப்படியாக மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனாலும், அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டம் கைவிடப்படவில்லை.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அனல்மின் நிலையம் அமைக்கும் யோசனை கைவிடப்பட்டது. திரவ எரிவாயுவைப் பயன்படுத்தி மின்உற்பத்தி மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. தற்போது அந்தத் திட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது சூரியசக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை பொருளாதார அபிவிருத்திக்குழு வழங்கியுள்ளது என்று தெரி விக்கப்பட்டது. (ஐ-5)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங்கள் மீட்பு

மாத்தறை, ஜூன் 28

தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்ட இரு சிறுமிகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். மாத்தறை - கம்புருபிட்டிய - பெரளிஹதுர பகுதியில் மீட்கப்பட்ட இந்த சடலங்கள் 44 வயதுடைய தந்தை, அவரது 10 மற்றும் 16 வயது பெண் பிள்ளைகள், 14 வயது மகன் ஆகியோருடையது எனத் தெரி விக்கப்பட்டது. சடலங்களாக மீட்கப்பட்ட சிறுவர்களின் தாய் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே வீட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்றும், குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவருகின்றது. பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-10)

# திருமலையில் நேற்றுப் போராட்டம்



திருமலை,ஜூன் 28

திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பின் அலுவலகம் தாக்கப்பட்டு அங்கு முக்கிய பொருள்கள், ஆவணங்கள் திருடப்பட்டதைக் கண்டித்து வலையமைப்பின் உறுப்பினர்களும், நாம் இலங்கைப் பெண்கள் அமைப்பினரும் இணைந்து பெண்கள் வலையமைப்பின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சனிக்கிழமை அலுவலகத்தை மாலை பூட்டிவிட்டுச் சென்ற நிலையில் மறுநாள் அங்கிருந்த இரண்டு மடிக்கணினிகள் மற்றும் அலுவலகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் போன்றன திருடப்பட்டிருந்தன. அதேவேளை, அலுவலக மலசலகூடத்தின் கூரைப் பகுதி ஓடு கழற்றப்பட்டிருந்ததுடன், அலுவலக மேசைக் கணினியும் இயக்கப்பட்டிருந்தது. அலுவலகத்துக்குள் சிகரெட் துண்டொன்றும் வீசப்பட் டிருந்தது.

சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேரில் சென்று விசாரணைகளை மேற் கொண்டனர். பரிசோதனைக்காகக் சிகரெட் துண்டையும் எடுத்துச் சென்றனர். இந்தச் சம்பவத்தைக் கண்டிப்பதுடன், குற்ற வாளிகளைக் கண்டு பிடிக்குமாறு கோரியே நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. போராட்டத்தின் இறுதியில், பெண் உரிமை, மனித உரிமை செயற்பாட்டாளர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரிதிருகோணமலை மாவட்டச் செயலருக்கு மனு கையளிக்கப்பட்டது. (ஐ)

# திடிரென வீசிய காற்றால் முன்பள்ளிக் கூரை சேதம்



கிளிநொச்சி, ஜூன் 28

கிளிநொச்சியில் நேற்றுத் திடீரென வீசிய பலத்த காற்றால் உதயநகரில் அமைந்துள்ள சிறுவர் முன்பள்ளியின் கூரை தூக்கி வீசப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கூரை தூக்கி வீசப்படும் போது மூன்று ஆசிரியர்களும் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் கட்டடத்துக்குள் இருந்துள்ளனர் . இருப்பினும் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை

இதனையடுத்து முன்பள்ளிக்குப் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர் கிராம மட்ட அமைப்புக்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் , கிராமசேவையாளர் ஆகியோர் முன்பள்ளி ஆசிரியர்களுடன் நடந்த சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்தனர். கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் முன்பள்ளியை சீரமைத்துத் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார். (ஐ-10, 35)

# சைட்டம் தொடர்பில் வட்டமேசை மாநாடு

## நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசுடமையாக்க அமைச்சரவை அங்கீகாரம்


கொழும்பு, ஜூன் 28
சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இறுதித் தீர்மானமொன்றை எடுக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரைவில் வட்டமேசை மாநாடொன்று நடத்தவுள்ளார் என அறியமுடிகின்றது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது சைட்டம் விவகாரம் சூடி பிடித்தது. இதையடுத்து உயர்கல்வி அமைச்சரும், சுகாதார அமைச்சரும் இணைந்து இது விடயம் தொடர்பில் கூட்டு அமைச்சரவைப் பத்திரமொன்றைக் கொண்டுவந்தனர்.
இந்தப் பத்திரத்தில், மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு உரித்தான நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசுடமையாக்குதல் மற்றும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் முகாமைத்துவத்தை விரிவாக்கல் தொடர்பில் அனுமதி கோரப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.
இந்நிலையிலேயே சைட்டம் விவகாரம் குறித்து பேராசிரியர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட இதனுடன் தொடர்புபட்ட சகல தரப்புடனும் பேச்சு நடத்தி இறுதி முடிவை அரச தலைவர் அறிவிக்கத் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது.
கடந்த 21ஆம் திகதி அனைத்துப் பல்கலைகழக மாணவர்கள் சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுகாதார அமைச்சை முற்றுகை யிட முற்பட்டபோது பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகினர். இதனைக் கண்டித்து மறுநாள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்திருந்தது.
விடயம் பூதாகரமாகவே சைட்டம் குறித்து புதிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அரச தலைவர் அறிக்கையொன்றின் மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### வயோதிபப்...

மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.
2009ஆம் ஆண்டு யாழ்ப்பாண நகர் மார்ட்டீன் வீதியில் உள்ள வீடு ஒன்றில் அதன் உரிமையாளர் லில்லி மேரி என்ற வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்டு அவரது வீட்டின் முற்றத்தில் புதைக்கப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார். அவரது வீட்டை வாடகைக்குப் பெற்று ஜெரோம் என்பவர் அவருடைய மனைவியுடன் குடியிருந்தார். அந்த வீட்டின் உரிமையாளருடன் ஜெரோம் அடிக்கடி முரண்பாட்டில் ஈடுபட்டு வந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. கொலைக் குற்றச்சாட்டில் ஜெரோம் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.
வயோதிப் பெண் படுகொலை வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது.
"2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள 18 ஆம் இலக்க வீட்டில் அதன் உரிமையாளரான லில்லிமேரி, ஜெரோம், ஜெரோமின் மனைவி ஆகியோர் வசித்து வந்தனர்.
அதே வருடம் டிசெம்பர் மாதம் லில்லிமேரி காணாமற்போய்விட்டார் என்று எதிரியான ஜெரோம், லில்லிமேரியின் உறவினர்களுக்கு அறிவித்துள்ளார். அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.
2 மாதங்கள் கழித்து ஜெரோமுக்கும் அவரது மனைவிக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஜெரோமின் மனைவி ஜெரோமை விட்டு பிரிந்து தனி வீட்டில் வசித்து வந்தார். இறந்த லில்லிமேரியின் உறவினரின் வீட்டுக்கு அருகில் ஜெரோமின் மனைவி வசித்து வந்தார்.
காணாமற்போனதாகக் கூறப்பட்ட லில்லிமேரியை தனது கணவனே கொலை செய்து அதே வீட்டில் புதைத்தார் என்று ஜெரோமின் மனைவி லில்லிமேரியின் உறவினர்களுக்குக் கூறியுள்ளார்.
தகவல் பொலிஸ் நிலையம் சென்றது. நீதிவானின் கட்டளைக்கு இணங்க சடலம் தோண்டியெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜெரோம் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் வழக்கு விசாரணை ஆரம்பித்தது.
ஜெரோமின் மனைவி கொழும்பில் காஸ் சிலிண்டர் வெடித்து இறந்தமையால் முக்கிய சாட்சி இல்லாது வழக்கு விசாரணை இடம்பெற்றது. லில்லிமேரியின் கழுத்தை நெரித்தும், தலையில் மொட்டையான ஆயுதத்தால் தாக்கியும் அவரை எதிரி கொலை செய்தார் என்று சாட்சியத்தில் கூறப்பட்டது.
கொலை செய்யப்பட்ட லில்லிமேரி அணிந்திருந்த நகைகளும் ஜெரோமின் மூலமாக நகைக் கடையில் விற்கப்பட்டமையும், நகைக் கடை உரிமையாளரின் சாட்சியத்தின் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்டது.
நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் எதிரியான ஜெரோம் குற்றவாளியாக இனங்காணப்படுகிறார். அவருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது" என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (வ-4-ரி1)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை கந்தையா



பிறப்பு 07.04.1948 இறப்பு 26.06.2017

மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கந்தையா (26.06.2017) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வரும் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வாலாம்பிகை, திருச்செல்வம் (புத்தூர்), மங்களேஸ்வரி (கைதடி), யோகம்மா (மந்துவில்) ஆகி யோரின் அன்புச்சகோதரனும் ஐயந்தரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா, வடக்கு பிரதேச செயலகம்), சுகந்தினி (ஆசிரியை, யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.) காலஞ்சென்ற பிரதீபன், கேமமாலினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரபாகரன் (ஆஸ்திரேலியா) இன் அன்பு மாமனும் இராசேந்திரம், நாகராசா (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், யாழ். கல்வி வலயம்), யோகராணி, விமலா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரித்திகாவின் அன்புப்பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.06.2017) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் மீசாலை மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசுந்தரம் வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.
(புது ஸ்ரேசன் அருகில்)

தகவல்:
குடும்பத்தினர்
077 916 1318, 077 968 3200,
077 691 4142

### 2016 இல்...

வான குற்றச்செயல்களைவிட 2016ஆம் ஆண்டு பதிவான குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.
இதன்படி, 2015ஆம் ஆண்டில் 11இலட்சத்து 29ஆயிரத்து 555 ஆக இருந்த குற்றச் செயல்கள், 2016ஆம் ஆண்டில், 11இலட்சத்து 55 ஆயிரத்து 215ஆக அதிகரித்துள்ளதெனவும், 2015ஆம் ஆண்டில் பதிவான கடுமையான குற்றங்கள் 36ஆயிரத்து 937, 2016 இல் 40ஆயிரத்து 188ஆக அதிகரித்துள்ளன என்றும் அமைச்சின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### கடும் வறட்சியால்...

துள்ளது. அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல், புத்தளம், திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களே வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது. (த)

### உண்மையை...

புத்தகத்தில் என்னால் எழுதப்பட்டன. எனினும் நீதிமன்றுக்கு உண்மைக்குப் புறம்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது"
இவ்வாறு முதலாவது சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்றுப் பரபரப்பான தகவலை முன்வைத்தார்.
இந்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணை இடம்பெற வேண்டும். உண்மைக்குப் புறப்பான அறிக்கையை மன்றுக்கு முன்வைத்தவர் யார்? எதற்காக இவ்வாறு செய்யப்பட்டது? போன்றவை கண்டறியப்பட வேண்டும்" என்று பாதிக்கப்பட்டோர் நலன்சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றிடம் கோரினார்.
யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 பேரும் சிறை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். மாணவர்களின் பெற்றோர் நலன் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.
முதலாவது சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர், மன்றின் அனுமதியுடன் விண்ணப்பம் ஒன்றை முன்வைத்தார். " யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் இரவு இடப்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பில் உண்மை நிலவரத்தை நான் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினேன். அத்துடன் அது தொடர்பான சரியான விவரங்களை குறிப்புப் புத்தகத்திலும் எழுதினேன்.
அவ்வாறு இருக்கையில் நீதிமன்றுக்கு தவறான அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் எனக்குத் தெரியாது என்று அவர் மன்றில் தெரிவித்தார். சந்தேகநபரால் தெரிவிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பொய்யான அறிக்கையை மன்றுக்கு வழங்கியவர் யார்? என்று கண்டறிய வேண்டும். அதற்கு மன்று உத்தரவிடவேண்டும்" என்று பாதிக்கப்பட்டோர் நலன்சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றிடம் கோரினார்.
மேலும் கொல்லப்பட்ட மாணவனின் பெற்றோர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் அறிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என்று மன்று கட்டளையிட்ட போது அதனைப் பொலிஸார் இதுவரை செய்யவில்லை என்றும் அவர் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.
இவற்றை ஆராய்ந்த மன்று அச்சுறுத்தல் தொடர்பான அறிக்கையை முன்வைக்குமாறு பொலிஸாரை அறிவுறுத்தியது. அத்துடன், பொய்யான அறிக்கை சமர்ப்பித்தமை தொடர்பான கட்டளையை அடுத்த தவணையில் வழங்குவதாக அறிவித்த நீதிவான், சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 7ஆம் திகதிவரை நீடித்தார்.

**பின்னணி**

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியை அண்மித்து கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த நடராசா கஜன், யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் ஆகியோரே கொல்லப்பட்டனர். இவர்கள் யாழ்.பல்கலைக்கழக 2 ஆம் 3 ஆம் வருட மாணவர்கள்.
மாணவர்கள் கொலை தொடர்பில் 5 பொலிஸ்உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4-101)

# கால்நடைகள், மரங்கள் கடத்தலைத் தடுக்க காரைநகரில் விழிப்புக் குழுக்கள் அவசியம்

## *உடனடியாக அமைக்குமாறு சரவணபவன் எம்.பி. பணிப்பு*

காரைநகர், ஜூன் 28

"காரைநகர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள கால்நடைகள் மற்றும் பனைமரங்கள்கடத்தல்களைத்தடுக்கவிழிப்புக்குழுக்கள்அமைக்கவிரைந்துநடவடிக்கை எடுக்கவேண்டும்"என்றுநாடாளுமன்றஉறுப்பினரும்காரைநகர்பிரதேசஒருங்கிணைப்புகுழு இணைத் தலைவருமான ஈ.சரவணபவன் பிரதேசசெயலருக்கு அறிவுறுத்தினார்.

காரைநகரிலிருந்து நள்ளிரவு வேளைகளில் வகைதொகையின்றிகால்நடைகளும்பனைமரங்களும் கடத்தப்படுகின்றன. இது தொடர்பாகபொலிஸாருக்குஉடனடியாகஅறிவித்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்று காரைநகர் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே விழிப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலரிடம் அவர் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறுவர் விவகார இராஜாங்கஅமைச்சர்திருமதிவிஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

"காரைநகரிலிருந்துதினமும்இரவுவேளைகளில் பனை மரங்களும் மாடுகளும் கடத்தப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைஎடுக்கவேண்டும்"என்றுமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதி களும் இதனையே வலியுறுத்தனர்.

காரைநகர்பிரதேசமக்களின்வாழ்வாதாரமாக கால்நடைகளேஉள்ளன.அவைஇரவுநேரத்தில் திருடப்பட்டு கடத்தப்படுகின்றன. சிவன் கோவிலடியிலிருந்து குறுகிய பொன்னாலை கடற்பரப்பினூடாகவும் தோப்புக்காடுப் பகுதி ஊடாகவும் பொன்னாலைப் பாலத்தின் ஊடாகவுமே அவை கடத்தப் படுகின்றன" என்றும் பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப் பட்டது.

"காரைநகர்பிரதேசத்திலுள்ளசனசமுகநிலையங்கள், பொதுஅமைப்புக்களினபிரதிநிதிகள் மற்றும் குடிமக்கள் குழுவினரை அழைத்து கலந்துரையாடி விழிப்புக் குழுக்களை அமைத்துதிருட்டுக்களைத்தடுத்துநிறுத்தநடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அறிவுறுத்தினார்.

"காரைநகருக்கு தனியான பொலிஸ் நிலையம்அமைக்கப்படவேண்டும். தற்போதுநாம் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு ஊர்காவற்றுறைக்கேசெல்லவேண்டியுள்ளது. கடல் கடந்து சென்று வருவதில் பல இடர்பாடுகளை எதிர் கொள்கின்றோம். பல திருட்டுச் சம்பவங்கள்இங்குஇடம்பெற்றுவருகின்றன. எனவே உடனடியாக பொலிஸ்நிலையத்தை இங்கு அமைக்கவேண்டும்"என்றும்பொதுஅமைப்புகளால் வலியுறுத்தப்பட்டது.

காரைநகரில்பொலிஸ்நிலையம்அமைப்பதற்குப்பொருத்தமானகாணியைப்பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் காணி கிடைக்கப்பெற்றால் உடனடியாக பொலிஸ் நிலையம்அமைக்கமுடியும்எனபிரதேசசெயலரால் தெரிவிக்கப்பட்டது. (வ-21-250)

# தரம் 1 மாணவர் அனுமதிக்கான விண்ணப்பமுடிவுத்திகதிநீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

2018ஆம் ஆண்டில் தரம் 1இற்குமாணவர்களைஅனுமதிப்பதற்கானவிண்ணப்பமுடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் நேற்று அறிவித்தார்.

2018ஆம் ஆண்டுக்கு தரம் 1இற்குமாணவர்களைஅனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள்நாளைமறுதினம்30ஆம் திகதிவரை ஏற்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது தபால் திணைக்கள ஊழியர்கள் முன்னெடுத்து வருகின்ற பணிப் புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக விண்ணப்பமுடிவுத்திகதிஎதிர்வரும் 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (வ)

# மயானத்தின் மதிலை உடைத்ததாக 45 பேருக்கு எதிராகப் பிடியாணை

## *மல்லாம் நீதிமன்று உத்தரவு*

யாழ்ப்பாணம், ஜூன் 28

புத்தூர்மேற்குகிந்துப்பிட்டிமயானமதில் உடைத்தவர்கள்என்றுபெயர்குறிப்பிடப்படும் 45 பேரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று திறந்த பிடியாணை பிறப்பித்தது.

புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி கிந்துப்பிட்டி மயானத்தின் அமைவிடம் தொடர்பில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். மற்றொரு தரப்புஅந்தமயானம்தொடர்ந்தும்அதில் இருக்க வேண்டும் என்றும் தமது பாவனைக்கு விடப்படவேண்டும்என்றுகோருகின்றனர். அது தொடர்பான பிரச்சினையின்போதுஅந்தமயானத்தின்ஒருபகுதி மதில் உடைக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முதலில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். இதுவரை இவ்வாறு 8 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர். அவர்களில் இறுதியாகக் கைது செய்யப்பட்டவர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த நீதிமன்று கட்டளையிட்டது.

சந்தேகநபர்களைப்பிணையில்விடுவிக்குமாறுகோரி மல்லாகம் நீதிவான் மன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிவான், அதன் மீதான விசாரணையை ஒத்திவைத்தார்.

மயானத்தின் மதில் உடைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 45 பேரின் விவரங்கள் அடங்கியபட்டியலைஅச்சுவேலிப்பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்றுச் சமர்ப்பித்தனர். அந்த 45 பேரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு எதிர்வரும்11ஆம்திகதிக்குஒத்திவைக்கப்பட்டது. (வ-4)

# மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம் காரைநகர் கிழவன்காடுஅறநெறிப்பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை விழா இன்றுபுதன்கிழமைமாலை 5.30மணிக்குகிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில்நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனால் "ஆரறிவார்" எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-21-ரி)

# விபத்தில் முதியவர் சாவு குடும்பத்துக்கு இழப்பீடு

தென்மராட்சி, ஜூன் 28

சாலைவிபத்தில்காயமடைந்து சிகிச்சை பெற்ற முதியவர் சிகிச்சைபயனின்றிஒருவாரத்தின் பின்னர் சாவடைந்தார். சாவடைந்தமுதியவரின்குடும்பத்துக்கு இரண்டரை லட்சம் ரூபாஇழப்பீடாகவழங்குமாறு சாவகச்சேரி நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த19ஆம்திகதிஇரவுசைக்கிளில் பயணித்த முதியவரை மீசாலை முதன்மைச் சாலையில் வைத்து வாகனம் மோதியது. படுகாயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில்சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

நேற்று முன்தினம் இரவு சிகிச்சைபயனின்றிஅவர்சாவடைந்தார். முதியவரின் இறப்புத் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல்செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான்சாவகச்சேரிபிரதேசதிடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில்அறிக்கைதாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி யாழ். போதனா மருத்துவமனையில் இறப்புவிசாரணைகளை மேற்கொண்டு மருத்துவமனைசட்டவைத்தியஅதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறும், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர்உடலத்தைஉறவினரிடம் ஒப்படைக்குமாறும்பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை சம்பவம் நடைபெற்ற தினத்தன்று வாகனச் சாரதியை கைது செய்த பொலிஸார் மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தியபோது பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். நேற்று முன்தினம் முதியவர் சாவடைந்ததையடுத்து வாகனச் சாரதி மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுநேற்றுநீதிமன்றில்முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை 3 லட்சம் ரூபா பெறுமதியான பிணையில்செல்லஉத்தரவிட்டார்.சாவடைந்தவரின் குடும்பத்தவரின் வேண்டுகோளுக்கிணங்கமுதியவரின்குடும்பத்துக்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும்இறப்புச்செலவுக்காக ஒருலட்சம்ரூபாவை வழங்குமாறும்உத்தரவிட்டார்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தையா (வயது 70) என்னும் முதியவரே சாவடைந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



# காரை. ஆரம்பப்பாடசாலைகளின் புதியகட்டடங்கள்நேற்றுத்திறப்பு

காரைநகர், ஜூன் 28

காரைநகரில் 2 ஆரம்பப் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட 2 மாடிக் கட்டடங்களின் திறப்புவிழா நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

காரைநகர்சுப்பிரமணியவித்தியாசாலையில் அதிபர் திருமதி அ.கௌரியம்பாள் தலைமையிலும் காரைநகர் யாழ்ற்ரன் கனிஷ்ட வித்தியாலயத்தில் அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. திறப்புவிழாவில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் புதிய கட்டடங்களை நாடா வெட்டித் திறந்துவைத்தார். அத்துடன்வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையில்கடந்த வருடம் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடமும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினராக காரைநகர் கோட்டக்கல்விப்பணிப்பாளர்ஆ.குமரேசமூர்த்தியும் கௌரவ விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ம.நீரஜாவும் கலந்துகொண்டனர்.

உலகவங்கிமற்றும்ஆஸ்ரேலியஅரசின் நிதி உதவியுடன் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பல மில்லியன் ரூபா செலவில் இந்த புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டன. (வ-21-250)

# கசிப்பு வைத்திருந்த இருவருக்குத் தண்டம்

தென்மராட்சி, ஜூன் 28

கசிப்பை உடைமையில் வைத்திருந்த நாவற்குழி 300 வீட்டுத்திட்ட வாசிகள் இருவருக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# சாராயம் விற்றவருக்கு ரூ.10 ஆயிரம் தண்டம்

பருத்தித்துறை, ஜூன் 28

சட்ட விரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்டவருக்கு பருத்தித்துறை நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபா தண்டம் நேற்று விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோதமாக சாராய விற்பனை நடவடிக்கை நடைபெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, பருத்தித்துறை பொலிஸார் அங்கு விரைந்தனர். பொலிஸார் என அறியாமலே குறித்த நபர் பொலிஸாருக்குச் சாராயம் விற்றுள்ளார். உடனடியாகச் சட்ட விரோத சாராய விற்பனை மற்றும் உடைமையில் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் அந்த நபர் கைது செய்யப்பட்டார். அவரை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (ஐ-10.26)

## வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 28

சாலையைக் கடக்க முற்பட்ட வேளையில்ஏற்பட்டவிபத்துக்களில் சிக்கிய பெண் உட்பட மூவர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காகயாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மீசாலைச் சந்தியிலிருந்து சாலையின் மறுபக்கத்துக்குச் செல்ல முயன்ற மோட்டார் சைக்கிளை முதன்மைச் சாலையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் மீசாலையைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவருக்குக் காலில் காயமேற்பட்டது. அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதே வேளை மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு பேருந்திலிருந்து இறங்கிப் பேருந்தின் முன்பக்கமாகச் சாலையைக் கடக்க முற்பட்டவரை, பேருந்தை முந்திவந்த மோட்டார் சைக்கிள்மோதியது. இந்தவிபத்தில் மோட்டார்சைக்கிளைச்செலுத்திச் சென்ற இராமநாதபுரம் கல்மடுவைச்சேர்ந்தஇளைஞனும், சாலையைக் கடக்க முற்பட்ட சரசாலை வடக்கைச் சேர்ந்த இளைஞனும் காயமடைந்தனர். இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

(ஐ-9)

## அம்புலன்ஸ்சாரதிகளின் போராட்டம்முடிந்தது

நோயாளர் காவு வண்டிச் சாரதிகள் நேற்றுக்காலைமுதல்முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டது.

"எமது கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் சாதகமான பதிலை வழங்கியுள்ளனர். அதனால் பணிப் புறக்கணிப்பை கைவிடத் தீர்மானித்தோம்" என்று மாகாண சுகாதார சேவையாளர் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் அமராநந்த வடுகே தெரிவித்துள்ளார். பிரதான மூன்று கோரிக்கைகளை முன்வைத்துநாடளாவிய ரீதியில் நேற்று நோயாளர் காவுவண்டிச்சாரதிகள்பணிப்புறக்கணிப்பில்ஈடுபட்டனர்.

கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தசுகாதார திணைக்களகச் சாரதிகள் 12பேருக்கு வேறு திணைக்களகங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை நீக்கம் செய்ய வேண்டும். சகல மாகாணங்களிலும் சுகாதார திணைக்களச் சாரதிகள் அந்தந்தத் திணைக்களங்ளில் மாத்திரமே பணியாற்ற அனுமதிக்கப்படவேண்டும். சுகாதார மத்திய அமைச்சர் ராஜித சேனாரத்தினவுடன்நடத்தப்பட்டபேச்சுக்குப் பின்னர், அமைச்சரின் உத்தரவை மாகாண சுகாதாரத் திணைக்களங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டச் சாரதிகள் 49 பேர், கிளிநொச்சி மாவட்டச் சாரதிகள் 32 பேர், யாழ்ப்பாண மாவட்டசாரதிகள்63பேர், முல்லைத்தீவு மாவட்டச் சாரதிகள் 39 பேர், மன்னார்மாவட்டச்சாரதிகள்39பேர் உள்ளடங்கலானஐந்துமாவட்டங்களைச் சேர்ந்த 222 சுகாதாரத் திணைக்களகச்சாரதிகள்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதே வேளைஅவசரசேவைகள்வழமைபோல்முன்னெடுக்கப்பட்டன. நேற்று மதியம் இவர்களின் கோரிக்கைக்கு சாதகமானபதில்கிடைத்ததையடுத்து பேராட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## ஐ.நா. செயலரின் தூதுவர் மைத்திரியுடன் சந்திப்பு

ஐ.நா. பொதுச் செயலாளர் என்டோனியோகுட்டோஸ், தனதுஇளைஞர் அலுவல்கள் தூதுவராக நியமித்துள்ள இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீ ஜயத்மா விக்கிரமநாயக்க நேற்று முற்பகல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

இலங்கையின் நற்பெயரை உலகம்முழுவதும்அறியச்செய்தஜயத்மா விக்கிரமநாயக்க தாய்நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்த கௌரவத்தைப் பாராட்டிய அரச தலைவர், அவருக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இலங்கையின்இளைய தலைமுறையினருக்காகவும்உலகவாழ் இளைய தலைமுறையினருக்காகவும் அவர் பெரும் சேவை ஆற்றக்கூடிய வாய்ப்பு கிடைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தனது 21ஆவதுவயதில் பூகோள இளைஞர் அபிவிருத்தி செயற்றிட்டத்தில் அங்கம் வகித்த ஜயத்மா விக்கிரமநாயக்க உலக இளைஞர் திறன்கள் தினத்தைப் பிரகடனப்படுத்தல் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட செயற்றிட்டங்கள் பலவற்றில் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இளைஞர்அபிவிருத்திக்காகதேசிய மட்டத்தில் அவரால் ஆற்றப்பட்ட முதன்மையான பணிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரால் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அளுத்கம சங்கமித்த மகளிர் கல்லூரியினதும், கொழும்பு விசாகாகல்லூரியினதும்பழையமாணவியான27வயதுடைய ஜயத்மா கொழும்பு பல்கலைக்கழகத்தின்விஞ்ஞானமாணி பட்டதாரியாவார். மேலும் அவர் அப்பல்கலைக்கழகத்திலேயே அபிவிருத்திகற்கைகள்தொடர்பானபட்டப்பின் படிப்பையும் தொடர்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாடு முழு வதும் உள்ள தபால் சேவை ஊழியர்கள் நேற்று காலை முதல் பணிப் புறக்கணிப் பில் ஈடுபட்டுள்ளனர்.



நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்கள் நேற்று முற்றாக முடங்கின. பல்வேறு தேவைகளுக்காகத் தபால் அலுவலகங்களுக்குச் சென்ற மக்கள்ஏமாற்றத்துடன்திரும்பிச்சென்றதை அவதானிக்க முடிந்தது.

நுவரெலியா, கண்டி, காலி ஆகிய தபால்காரியாலயங்களைஉல்லாசப்பயணத்துறைக்குப்பயன்படுத்தும்முயற்சிக்குஎதிர்ப்புத்தெரிவித்தும், கொழும்பு பிரதான தபால் காரியாலயக்கட்டடத்தில்மீண்டும் தபால் காரியாலயத்தை ஆரம்பிக்காமை, ஊழியர் சட்ட வரைபை திருத்தி நடமுறைப்படுத்தாமை உள்ளிட்டநிர்வாகத்தில்உள்ளபல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரியே பணிப்புறக்கணிப்பு நடத்தப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

தபால் ஊழியர்கள் கடந்த 13 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமைமுதல்48 மணிநேரப்பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர். தற்போது தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதநிலையில்தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பை நேற்று முதல் நாடு முழுவதும் உள்ளதபால்சேவை ஊழியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இவர்களின்பணிப்புறக்கணிப்பால் தற்போது உயர் தரம் சித்திபெற்ற மாணவர்களது பல்கலைக்கழக அனுமதிக் கடிதங்கள், பல்கலைகழக மானிய ஆணைக்குழுவால் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கும் மகாபொல புலமைப் பரிசில் கடிதங்கள் போன்றன தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் பல்கலைகழகப் பிரவேசம் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-10, 56)

## கழிவுகள் வகைப்படுத்தல் தொடர்பாக விரிவான செயற்றிட்டங்கள் அவசியம்

### அரசதலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 28

அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் குப்பைகள் கொட்டும் போது, அதற்கு இடையூறு விளைவிப் பவர் கள் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனஅரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனபொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

உள்ளூராட்சிசபைகளின்கழிவுமுகாமைத்துவத்தைமுறைமைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் அரசதலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். அவர் தெரிவித்ததாவது; கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மக்களுக்குப் போதியளவில் தெளிவூட்டப்படாமையேபலபிரச்சினைகளுக்கும்முதன்மைக்காரணமாகும். கழிவுகளை வகைப்படுத்தல் தொடர்பாக விரிவான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

இந்தக்கலந்துரையாடலில்கழிவுகளை மீள்சுழற்சி செய்தல், வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பிரதேசங்க ளில் குப்பைகளை அகற்றுதல், குறுகிய காலத்தில் சேதனப்பசளை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களை அறிமுகப்படுத்தல், கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தலுக்காகத் தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல், கழிவு முகாமைத்துவம்தொடர்பாகமக்களைத் தெளிவூட்டல், பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைக்குறைத்தல்தொடர்பான வர்த்தமானியை வெளியிடல், கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. அத்துடன்

கொழும்பு நகரின் கழிவு முகாமைத்துவத்தின்தற்போதையநிலைதொடர்பாகக் கொழும்பு மாநகர ஆணையாளர் கருத்துத் தெரிவித்தார்.

இதன் போது கொழும்பு நகரின் கழிவுகளைவெளியேற்றலுக்கானபொறுப்பை மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரியவிடம் அரசதலைவர் கையளித்தார். இந்தக் கலந்துரையாடலில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான அநுர பிரியதர்ஷனயாப்பா, வஜிரஅபேவர்தன, பாட்டலிசம்பிக்கரணவக்க, சஜித்பிரேமதாச, பைசர்முஸ்தபா, கயந்தகருணாதிலக்க, சாகல ரத்நாயக்க, சுசில் பிரேம ஜயந்த ஆகியோரும், அமைச்சுக்களின்செயலாளர்கள் உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும்பாதுகாப்புப்பிரிவின்பிரதானிகள் ஆகியோரும்கலந்துகொண்டனர். (ஐ)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கண்ணகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 120 | 160 | 100 | 100 | 180 |
| கரட் | 300 | 200 | 260 | 280 | 320 |
| மரவள்ளி | 80 | 80 | 50 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 120 | 70 | 100 | 120 |
| பாகல் | 120 | 200 | 140 | 160 | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 75 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 250 | 320 | 260 | 360 | 260 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 | 80 |
| தக்காளி | 100 | 160 | 130 | 150 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 60 | 60 | 60 |
| கீரை | 30 | 30 | 40 | 10 | 25 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 350 | 400 | 250 | 300 | 240 |
| புடோல் | 100 | 80 | 70 | 100 | 100 |
| கோவா | 120 | 200 | 140 | 180 | 160 |
| வெண்டி | 100 | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 240 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 120 |
| தேங்காய் | 70 | 55 | 65 | 50-60 | 65 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 75 | 90 | 90 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 320 | 260 | 180 | 300 |
| இராசவள்ளி | 200 | - | - | 300 | 260 |
| முருங்கைக்காய் | 260 | 250 | 240 | 300 | 240 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 900 |
| நண்டு | 400 | 250 | 600 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 700 | 700 | – |
| சுறா | 500 | 800 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 600 | 400 |
| விளை | 500 | 500 | 500 | 700 |
| முரல் | 400 | 400 | 450 | 400 |
| கும்பிளா | 400 | 250 | 500 | 600 |
| கிளாக்கன் | 800 | | 600 | 300 |
| ஓரா | 400 | 400 | 450 | 400 |
| திரளி | 250 | 250 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | – | 400 | 300 |
| மதனம் | 250 | 200 | 300 | – |
| கொய் | 200 | 50 | 80 | 100 |
| பாலை | 300 | 250 | 600 | – |
| வாழை | 200 | – | 500 | 400 |




பெண்களுக்கான பாதணி வகை கள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள் ளன. இவை 2 ஆயிரம் ரூபாவில் இருந்து விற் பனை செய்யப்படுகின்றன.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறாதோரில் 80 வீதமானோர் பல்கலைகளுக்குத் தெரிவாகின்றனர்

## யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பிறின்ஸ் ஜெயதேவன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மருத்துவப் பட்டத்துக்காகக் கல்வி கற்கின்ற மாணவர்களை ஆய்வு செய்ததில் 80 சதவீதமான மாணவர்கள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதவர்களே. இதேபீட மாணவர்கள் போன்றே ஏனைய பீடங்களில் உள்ள மாண வர்களும் காணப்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஜெயரட்ணம் பிறின்ஸ் ஜெயதேவன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இளம் விஞ்ஞான பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நவாலியூர் பேராசிரியர் ஜெயரட்ணம் பிறின்ஸ் ஜெயதேவனுக்கு நவாலி மக்கள் இணைந்து வரவேற்புபசார விழாவை நவாலி வை. எம்.சீ.ஏ மண்டபத்தில் நடத்தினர். நவாலி வை. எம்.சீ.ஏ தலைவர் லயன் ரி. விமலேஸ்வரன் தலைமை யில் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் ஏற்புரை வழங்கிய பேராசிரியர் ஜெ.பி.ஜெயதேவன் மேலும் தெரிவித்ததாவது;

### சித்தியடையாதோர் கைவிடப்படுகின்றனர்

"நாம் கல்வித்துறையில் வீழ்ச்சியடைந்து வருகின்றோம் என்பது வெளிப்படையான உண்மை. ஒரு பாடசாலையை ஐந்தாம் தரத்தில் புலமைப்பரிசிலுக்கு எடுத்துக் கொண்டால் 30 மாணவர்களில் மூன்று மாணவர்கள் சித்தியடைகின்றார்கள். அவர்களை எமது சமூகம் பத்திரிகைகளில் பாராட்டி விளம்பரம் செய்கின்றது. அவர்களுக்கு விழா எடுக்கின்றது. கற்பித்த ஆசிரியர்களையும் சமூகம் பாராட்டுகின்றது. பரீட்சையில் சித்தியடையாத 27 மாணவர்களையும் சமூகம் கைவிட்டுவிடுகின்றது.

> 30 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகத் தகுதியை அடைகின்றனர். ஏனைய 70 ஆயிரம் மாணவர்கள் தொழிற்பயிற்சி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டு கற்கை நெறி ஏனைய படிப்பு என்று தேறுகின்றனர்

ஆனால் சித்தியடைந்த மாணவர்கள் மட்டுமன்றிச் சித்தியடையாத மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியரே முழுப்பொறுப்புடையவர் என்பதை நன்கு உணரவேண்டும்.

### பேண்தகு நிலை வேண்டும்

தற்போது நாடு முழுவதுமாக 3 இலட்சம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குச் செல்கின்றனர். இவர்களில் 30 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகத் தகுதியைப் பெறுகின்றனர். ஏனைய 70 ஆயிரம் மாணவர்கள் தொழிற்பயிற்சி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டு கற்கைநெறி ஏனைய படிப்பு என்று தேறுகின்றனர்.

மிகுதி 2 லட்சம் மாணவர்களும் இலங்கையில் இடமில்லை. அவர்கள் வீதிகளிலும், மதகுகளிலுமே நிற்கவேண்டிய நிலையுள்ளது.

இதற்குக் கூட்டாட்சி அரசு தேசிய நிலைகளில் மாறுதல்களை ஏற்படுத்தி வருடாந்தம் வெளியில் நிற்பவர்களுக்கும் பேண்தகு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

### வடக்குக்கும் ஆசிரியர்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும்

அண்மைக்காலத்தில் மலையகத்தில் விஞ்ஞான, கணித பாடங்களைக் கற்பிக்க இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடு தோற்றம்பெற்று நீண்டு செல்கிறது.

இந்த நிலை விரைவில் வடக்கில் நிச்சயம் தோன்றும். ஏனெனில் தற்போது கணிதம், விஞ்ஞானம் கற்பவர்களின் எண்ணிக்கை என்பது மிகக் குறைந்துவிட்டது. இதனால் எதிர்காலத்தில் மலையகத் தீர்மானம் போன்று விரைவில் வடக்கிலும் தீர்மானம் நிறைவேறலாம்" என்றார் பேராசிரியர் ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன்.

விழாநாயகன்பேராசிரியர்பிறின்ஸ் ஜெயதேவன், திருமதி விஜயவாணி ஜெயதேவன் ஆகியோர் பிரசாத்முதன்மைவீதியில்இருந்து மங்கல வாத்தியங்கள் முழங்க மாலைகள் அணிவித்து வீதிவழியே அழைத்து வரப்பட்டனர்.

ஆரம்ப இறைவழிபாட்டை நவாலி திருச்சபை சபைக் குழு அருட்திரு போல்சுரேஷ் வழங்கினார். சிறப்புரையையாழ்ப்பாண பல்கலைக்கழக இரசாயனவியல் மூத்தவிரிவுரையாளரும்,முன்னாள் துறைத் தலைவருமான கலாநிதி ரி.மனோறஞ்சன் வழங்கினார்.

வாழ்த்துப்பாமாலையை சிறந்த பாடலாக திருமதி மேரிநாயகி மரியதாசன் வழங்கினார்.

நவாலி சென். பீற்றர் பாடசாலை அதிபர் ஜெ.றமேஷ், மானிப்பாய் ஏஞ்சல் பாடசாலை அதிபர் கலாநிதி என்.ஏ.விமலேந்திரன், முருகானந்தா ச.ச.நிலைய தலைவர் எஸ்.சிவச்செல்வன், திருச்சபை யாழ்ப்பாணப் பிராந்திய செயலாளர் அருட்திரு. ஐ.ராஜ்குமார், வலிகாமம் மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர் மதிதிருமா றன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கினர்.

புதிதாகப் பதவியேற்ற விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஜெ.பி.ஜெயதேவனுக்கு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியம் சார்பாக விருது வழங்கப்பட்டது.

(4-8-50)

# வடக்கு பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர் ஆளணி வெற்றிடம்

**நிரப்ப கொழும்பு அரசின் அங்கீகாரத்துக்காகக் காத்திருப்பு**

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாணத்தில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஆளணி வெற்றிடம் காணப்படுகின்றபோதும் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு கொழும்பு அரசின் அங்கீகாரத்துக்காக காத்திருக்கிறோம்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

உடற்கல்வி ஆசிரியர்களுக்கான நியமனம் 2013 ஆம் ஆண்டு உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு நேர்முகத் தேர்வின் மூலம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் டிப்ளோமா பட்டத்துடன் வெளியேறிய 86 டிப்ளோமாதாரிகள் கடந்த நான்கு வருடமாக வேலையைப் பெற்றுக் கொள்வதற்காக அரசதலைவர், முதலமைச்சர், ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி இராஜாங்க அமைச்சர், வடக்கு கல்வி அமைச்சர் எனப் பலரையும் சந்தித்து நேரடியாகவே மனுக்களைக் கொடுத்துப் பேசிய போதும் நியமனம் குறித்து இதுவரை எதுவித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

இது குறித்து மீண்டும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன்போத அவர், கொழும்பு அரசின் அங்கீகாரத்துக்காகக் காத்திருப்பதாகக் கூறியுள்ளார் என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் இந்த நியமனம் தொடர்பில் கொழும்பு அமைச்சுடன் பேசியுள்ளதாகவும் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் மேலும் கூறினார்.

(4-50)

# மேசன் தச்சுப் பயிற்சி 80 பேர் பெறுகின்றனர்

கிளிநொச்சி, ஜூன் 28

மேசன், தச்சு பயிற்சிநெறி இந்த வருடம் 80 பேருக்கு வழங்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் நொயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்தப் பயிற்சி நெறியை நடத்துகிறது.

வேலையின்போதே பயிற்சி வழங்கல் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேசன் மற்றும் தச்சு வேலைகளை செய்து வருபவர்களிடம் மேலதிகமாக அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி அவர்களின் தொழில் நிலையை மேம்படுத்துவதே இதன் நோக்கம். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு 6 மாதகால பயிற்சி 80 பேருக்கு வழங்கப்படுவருகின்றது.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 41 பேருக்கும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 2 பேருக்கும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 20 பேருக்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் 17 பேருக்கும் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டு இந்த பயிற்சியானது 165 பேருக்கு வழங்கப்பட்டது. என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(4-6)

# தேசிய ஏற்றுமதியாளர் விருது விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

தேசிய ஏற்றுமதியாளர் மன்றத்தினரால் வருடாந்தம் வழங்கிவரும் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண வர்த்த கத் தொழில்துறை மன்றத்தினரால் அனுப்பப்பட்டன.

மின்னஞ்சல் ஊடாகத் தமிழ் மற்றும் ஆங்கில விண்ணப்பங்கள் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

மேலும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் Jaffnacciy@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு விண்ணப்பிப்பதனூடாக விண்ணப்பங்க ளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ (இலங்கை உள்ளூர் ஏற்றுமதி முகவர்களூ டாக) விண்ணப்பிக்கலாம். என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4)

## தேசிய ரீதியில் முதன்முறையாக

# வலய மாணவர் நாடாளுமன்றம் தென்மராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது

## கடும் போட்டிகளுக்கு மத்தியில் தெரிவுகள் இடம்பெற்றன

மாணவர் நாடாளுமன்றம் அமைத்தல் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் நாட்டில் முதன் முறை யாக தென்மராட்சி கல்வி வலயத்தில் வல்ய மாணவர் நாடாளுமன்றம் நேற்றுமுன் தினம் உருவாக்கப் பட்டது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இயங்கும் 25 மாணவர் நாடாளு மன்றங்களில் 23 மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 130 அங்கத்தவர்களிடையில்வலய மாணவர் நாடாளுமன்றத்துக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் வலய மாணவர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் சு.கிருஷ்ணகுமார் முன்னிலையில் தெரிவுகள் இடம்பெற்றன.

சபாநாயகர், தலைமை அமைச்சர், அவைத் தலை வர், துணைச் சபாநாயகர், செயற்குழுத் தலைவர், 10 அமைச்சர்கள், பத்து பிரதி அமைச்சர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். நாடாளு மன்ற பிரதிச் செய்லாளர்களாகப் பணியாற்றிய வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் தெரிவுகள் பற்றிய விவரங்களை வெளியிட ஒவ்வொரு பத விக்கும் பலத்த போட்டிகள் இடம்பெற்றன. அதனால் தேர்தல்கள் மூலம் பிரிதிநிதிகளைத் தெரிவு செய்யும் நிலை ஏற்பட்டது.

போட்டிகளின் மத்தியில் சபாநாயகராக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த சிவபாலன் சிறிதரனும் தலைமை அமைச்சராக நாவற்குளி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி பிரியா ரகுநாதனும் அவை முதல்வராக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியைச் சேர்ந்த சுரேஸ்குமார் பரணிதரனும் செயற்குழுத் தலைவர், பிரதி நபாநாயகர், 10 அமைச்ர்கள், பத்துபிரதி அமைச்சர்கள்ஒவ்வொரு அமைச்சுக்கும் தலா 2 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வலய மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் கன்னி அமர்வும் பதவிப் பிரமாண நிகழ்வும் தென்மராட்சிக் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறுமென்று வலய மாணவர் நாடாளு மன்ற செயலாளர் நாயகம் சு.கிருஷ்ணகுமார் அங்கு அறிவித்தார்.

அன்றைய நிகழ்வில் கொழும்புகல்வி அமைச்சின் செயலாளர், கல்வி ராஜாங்க அமைச்சரின் செயலாளர் மாணவர் நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்துகொள்வர் என்று அறிவித்தார். (4-9)

# விக்கிக்குக் கடிவாளமிடவே நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனிக் கட்சி ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பில் எமக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அவருக்குக் கடிவாளம் போடவே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பருத்தித்துறையிலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில், கட்சி ஆதரவாளர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், தனிக் கட்சி ஆரம்பிப்பது தொடர்பில் பல மாவட்டங்க ளில் நடைபெற்ற கூட்டங்க ளில் பங்கேற்றுள்ளார். வடக்கு மாகாணத்துக் கான புதிய அமைச்சரவை நியமிப்பது தொடர்பிலும் இதன்போது பேசியுள்ளார். புதிய அமைச்சரவைக்கு நியமிக்கத் திட்டமிட்டிருந்த நான்கு பேரில் ஒருவரே எமக்கு மேற்படி தகவல்களை வழங்கியிருந்தார். இதனடிப்படை யில் முதலமைச்சருக்குக் கடிவாளம் போடுவதற்காகவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது.

இன்னும் இரு வாரங்களுக்குள் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு விடும்

எமது கட்சியின் சார்பில் இ.ஆனோல்ட்டை அமைச்சராக நியமிக்குமாறு முதலமைச்சருக்குப் பரிந்துரைத்துள்ளோம். முதலமைச்சர் எமது கட்சியின் விருப்புக்கு மாறாக அமைச்சர்களை நியமித்தால், நாம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை. மக்களுக்கு உண்மைகளைத் தெரியப்படுத்துவோம் - என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் அரசுக் கட்சி ஆதரவாளர்கள், தமது கட்சி விடயங்களை வெளிப்படுத்தும் பத்திரிகை இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர். விரைவில் கட்சிப் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (5-26)



## நோயற்று நீண்ட ஆயுள் பெற்றிட

★சீனி, உப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றின் பாவனையை குறைத்திடுவோம்.

★தினமும் இரண்டு வகை மரக்கறிகள், பச்சைக் கீரை வகை என்பவற்றை சேர்த்திடுவோம்.

★பழவகைகளில் இரண்டை எடுத்திடுவோம். தினமும் 2 லீற்றர் வரையான சுத்தமான கொதித்தாறியநீரை பருகிடுவோம்.

★தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்திடுவோம்.

★உரிய உயரமும் நிறையும் உங்கள் ஆரோக்கியமான போசாக்கின் அடையாளம்.

*தகவல்*
*சு.வை.அ.பணிமனை,*
*யாழ்.மாநகரசபை*



# நண்டு பதனிடும் நிலையத்தின் பணிகள் தம்பாட்டியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஊர்காவற்றுறை தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள நண்டு பதனிடும் நிலையத்தில் கடந்த புதன்கிழமை தொடக்கம் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனூடாக ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று சம்மேளத்தினரும் கிராமத்தவர்களும் கூறுகின்றனர்.

2015 ஆம் ஆண்டில் யு. என். டி. பி நிறுவனத்தில் ஒரு கோடியே 57 இலட்சம் ரூபாவில் தீவக மீனவர்களின் நன்மை கருதி குறித்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் குறித்த தொழிற்சாலையை இயங்க வைப்பதில் சங்கம் பல சவால்களை எதிர்கொண்டு வந்தது.

தற்போது இலங்கையின் கடலுணவு ஏற்றுமதிக் கம்பனியான பிறவுண் சிலோன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. குறித்த தொழிற்சாலை ஊடாக தீவகத்தின் சகல பகுதிகளிலுமுள்ள மீனவர்கள் பயன் பெறவுள்ளனர்.

இதுவரை காலமும் தீவக மீனவர்கள் தமது உற்பத்திகளைத் தரகர்கள் ஊடாக வழங்கி வந்ததால் அதன் முழுமையான பெறுமதியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தற்போது இந்தத் தொழிற்சாலையில் மீனவர்களே தமது உற்பத்திகளை நேரடியாக ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

குறித்த தொழிற்சாலை இயங்க ஆரம்பித்ததன் மூலமாக முதற் கட்டமாக 15 இற்கும் மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். எதிர்காலத்தில் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவுள்ளது.


தீவக மீனவர் சங்கங்கள், அங்கத்தவர்கள் ஊடாக உற்பத்திகளைத் தொழிற்சாலைக்கு வழங்குவதன் மூலமாகச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் அங்கத்தவர்களின் மேம்பாட்டுக்கும் தீவகப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் உதவும்வாய்ப்புகிட்டியுள்ளது. அத்துடன் தீவக மீனவர்கள் மீது தனியார் கடலுணவு பதனிடும் நிலையங்கள் மேற்கொண்டு வரும் சுரண்டல்களை ஒழிப்பதற்கான வாய்ப்பாக இந்தச் சந்தர்ப்பத்தை தீவக மீனவர் சங்கங்கள் பயன்படுத்த வேண்டும்என்று பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"தீவகத்தின் மூன்று பிரதேச செயலகப்பிரிவுகளிலுமுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்த கூட்டுறவுச் சங்கத்தின் பதனிடும் நிலைய உற்பத்திகளுக்கான உள்ளீடுகளை வழங்குவதற்கான வேண்டுகோள்கள், அறிவுறுத்தல்களை உரிய அதிகாரிகள் வழங்கும் பட்சத்தில் இந்த நிலையத்தின் ஊடாகத் தீவக மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பாட்டுடை" என்று கிராமத்தவர்கள் தெரிவித்தனர். (4-8)



வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புளி யங்குளம், புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

வடக்கு மாகா ணத்திலிருந்து மட்டுமன்றி பிற மாகாணங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர். காலை தொடக்கம் தூக்கு காவடி, பால் காவடி, தீச்சட்டி ஏந்தல், அங்க பிரதிஷ்டை போன்ற தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (4)



# கால்நடைத் திணைக்களத்துக்குப் பயிற்சியின் பின்பே உத்தியோகத்தர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களத்தின் தரம் III போதனாசிரியர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், 4 பேர் மாத்திரமே நேர்முகத்தேர்வுக்கு வந்திருந்தனர். அதனால் பயிற்சி நெறிக்கு உத்தியோத்தர்களை உள்வாங்கி அதன் பின்னர் நியமனம் வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திக் திணைக்களத்தின் தரம் III போதனாசிரியர்களுக்கு 94 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதனை நிரப்புவதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்தோம். நான்கு விண்ணப்பங்களே எமக்கு கிடைக்கப்பெற்றன. அவர்கள் நால்வரையும் நேர்முகத்தேர்வு செய்திருந்தோம். அவர்களில் ஒருவர் பூரண உடற்தகுதி இல்லாத காரணத்தாலும், மற்றொருவர் ஒரே தடவையில் உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களிலும் சித்தி பெறாத காரணத்தாலும் இரண்டு பேர் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

மீதமாகவுள்ள 92 போதனாசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வில்லை. கொழும்பு கால்நடை சுகாதார உற்பத்திக் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் துறைசார்ந்த விஞ்ஞானக் கற்கைநெறி டிப்ளோமா படிப்பவர்கள் மிகக் குறைவு. உயிரியல் பிரிவில் உயர்தரத்தில் கற்று சித்தியடைபவர்கள் வேறு கற்கை நெறிகளை நாடிச் செல்கின்றனர்.

இவ்வாறு இந்தப் பாடநெறியை கற்பவர்களின் எண்ணிகை குறைவு என்பதனால் தற்போது தரம் III போதனாசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகத்தேர்வின் மூலமாகப் பயிற்சியாளர்களாக அவர்களை உள்வாங்கி அவர்களை இரண்டு வருடத் துறைசார்ந்த டிப்ளோமா கற்றை நெறியை வழங்குவதோடு அவர்களுக்கான பயிற்சிக்காலக் கொடுப்பனவையும் வழங்கவுள்ளோம். பயிற்சி நிறைவடைந்தவுடன் அவர்களைப் போதனாசிரியர்களாக நியமனம் செய்யவுள்ளோம்.

தற்போது 56 பேர் பயிற்சி நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாண ஆளுநரின் சிபார்சின் பின்னர் பயிற்சி பெறுநர்களாக உள்வாங்கப்படுவார்கள். இவர்களின் நியமனம் ஒரு வார காலத்துக்குள் ஆளுநரிடம் இருந்து கிடைக்கப்பெறும் - என்றார். (4-ரி)

## வெளிமாவட்டங்களுக்கு சென்று திருப்புவோர் காய்ச்சல் ஏற்பட்டால் பரிசோதனை கட்டாயம்

### வவுனியா சுகாதாரப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

வவுனியா, ஜூன் 28

வவுனியாவில் தற்போது டெங்கு தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களுக்குச் சென்று திரும்புகிறவர்கள் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனையை பெற்றுக்கொள்ள வேண்டும் என வவுனியா பொது சுகாதாரப்பரிசோதகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதைய காலநிலை காரணமாக வவுனியாவில் டெங்கு நுளம்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் வெளிமாவட்டங்களான கொழும்பு, ஹம்பகா போன்ற மாவட்டங்களுக்குச் சென்று வருபவர்களுக்கு திடீரென காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவபரிசோதனையை மேற்கொள்ளவும்.

வவுனியாவில் டெங்கு நுளம்பைக்கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் தமது இருப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள், திணைக்களங்கள் போன்றவற்றை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பொது இடங்களை கிராம அபிவிருத்திச்சங்கம், மகளிர் அமைப்புக்கள் என்பன இணைந்து சிரமதானப்பணிகளை மேற்கொண்டு உங்களது பகுதிகளை சுத்தமாக வைத்திருக்கவும். டெங்கு நுளம்பு பெருக்கெடுக்கும் இடங்களை இனங்கண்டால் அவற்றின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (4)

# அன்னாசிச் செய்கை மாதிரித் தோட்டம் அக்கராயனில்

கிளிநொச்சி, ஜூன் 28

விவசாயத் திணைக்களத்தின் ஊடாக அக்கராயன்குள பாடசாலையில் மாதிரி தோட்டம் அமைக்கப்படவுள்ளது. மாணவர்களுக்கான விவசாயம் சார் பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்படும் என்று வன்னேரிக்குள விவசாய போதனாசிரியர் ப.சுரேஸ்குமார் தெரிவித்தார்.




கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அன்னாசி அறுவடை நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி ஸ்கந்தபுரத்தில் கு.சுந்தரலிங்கத்தின் அன்னாசித் தோட்டக் காணியில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்னேரிக்குள விவசாய போதனாசிரியர் ப.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். அதுமட்டுமன்றி, அன்னாசிச் செய்கையாளர் சுந்தரலிங்கம் அன்னாசி செய்கையில் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். உலர்த்திய அன்னாசித் துண்டுகள் உற்பத்தி பற்றியும் அவர் தெரிவித்தார்.

விழாவில் அன்னாசிச் செய்கை தொடர்பான கையேடுகள வழங்கப்பட்டதோடு அன்னாசிப் பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. (4.6)

## திகதி மாற்றம் செய்து விற்கத் தயாரான பழச்சாறு போத்தல்கள் கைப்பற்றப்பட்டன



திருகோணமலை, ஜூன் 28

காலாவதியான பழச்சாறு போத்தல்களின் திகதிகளை மாற்றஞ்செய்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 50 இற்கும் மேற்பட்ட பழச்சாறு போத்தல்களை திருகோணமலை மாவட்டச் செயலக பாவனையாளர் அதிகார சபையினர் மீட்டனர்.

காலாவதியான பழச்சாறு போத்தல்களில் ஒட்டப்பட்டிருந்த திகதியிடப்பட்ட பகுதியை மட்டும் வெட்டி அகற்றிவிட்டுப் புதிதாக திகதி அச்சிடப்பட்ட ஸ்டிக்கரை ஒட்டிய பின்னர் வர்த்தக நிலையங்களில் அவை விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்துள்ளது. இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சோதனையில் ஈடுபட்டபோது குறித்த வர்த்தக நிலையத்திலி ருந்து 50 இற்கும் மேற்பட்ட கலாவதியான பழச்சாறுப் போத்தல்களைக் கைப்பற்றியதாக பாவனையாளர் அதிகார சபையின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் த.வசந்தசேகரன்தெரிவித்தார்.

குறித்த் பழச்சாறு போத்தல்களை திருகோணமலையிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு விநியோகம் செய்யும் முகவரை நாளை வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபைக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-8)

## உற்சவகால உணவகங்களில் சுகாதார நடைமுறை கட்டாயம்

### சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்து

வவுனியா பூந்தோட்டம் நகசிங்கள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளதால் அப்பகுதியில் உணவுப்பண்டங்களை விற்பனை செய்வோர் மருத்துவ சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

சான்றிதழ் பெறாதவர்கள், உணவுப்பண்டங்களை கையாள்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை செய்யப்படும் என்றும் வவுனியா பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

உற்சவகாலத்தின்போது சுகாதார நடைமுறையிலான உணவுப்பண்டங்களை விற்பனை செய்ய வேண்டும். குறிப்பாக உணவு கையாள்பவர் மருத்துவ பிரிசோதனை மேற்கொண்டு சுகாதார பரிசோதகர்களினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை விற்பனை செய்யவேண்டும். முறையான அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். இந்த நடைமுறைகளைப் பின்பற்றாத வர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆலய வளவில் காலாவதியான உணவுப் பொருள்கள், சிகரெட், வெற்றிலை, பீடா போன்றவற்றை விற்பனை செய்வதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பொது சுகாதாரப்பரிசோதகர்களுக்கு பூரண ஒத்தழைப்புக்களை வழங்குமாறும் பொது சுகாதாரப்பரிசோதகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (4)




நல்லூர் சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சக்தி நற்பணி விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் மன்றத்தின் திவ்ய ஜீவன மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலைத்துறையில் யாழ்ப்பாணத்தின் பெருமையை பொறிக்கச் செய்த யாழ்ப்பாணத்துக் கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ரி)

## அருந்திக பெர்னான்டோவிடம் நிதி குற்றப்பிரிவினர் விசாரணை

கொழும்பு, ஜூன் 28

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார பிரதியமைச்சர் அருந்திக பெர்னான்டோ பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று முன்னிலையானார்.

நிதிக்குற்ற தடுப்புப் பிரிவில் அவரை முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தமைக்கு அமைவாக இந்த விசாரணை நடத்தப்பட்டது.

இலங்கை அரசால் தேடப்பட்டு வரும் உதயங்க வீரதுங்கவை அண்மையில், ஜப்பானில் வைத்து அருந்திக்க சந்தித்திருந்தமை தொடர்பான ஒளிப்படங்கள் பரவலாக வெளியாகியிருந்தன. இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கவே அவர் பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டார்.

முன்னாள் அரச தலைவரின் உறவினரும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக, பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போதையை ஒழிக்க ஒன்றிணைவோம்

ஆனி மாதம் 26ஆம் திகதி உலக போதைப்பொருள் ஒழிப்புத்தினம். அத்தோடு ஆள்கடத்தலுக்கு எதிரான தினமும்கூட.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில், தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எழுந்த மிகப் பெரும் சமூகப் பிரச்சினை போதைப் பொருளின் தாக்கம்.

போர்நடந்துகொண்டிருந்தகாலங்களில்இறுக்கமானபொருளாதாரத் தடைகளும், இராணுவச் சோதனைகளும் இருந்த காரணத்தாலும் போதைப் பொருள்விற்பது போன்ற குற்றங்களுக்கு விடுதலைப் புலிகள் அதிஉச்ச தண் டனை வழங்குவார்கள் என்ற அச்சம் காரணமாகவும் போதைப் பொருள் பாவனை மிக மிகக் குறைவாக இருந்தது; அல்லது இல்லாமலேயே இருந்தது.

ஆனால், போரின்பின்னரானகாலத்தில்பாதிக்கப்பட்டிருந்த மக்கள் மத்தியில் திடீரென ஊடுருவிப் பரவியது இந்தப் பழக்கம். மதுப் பயன்பாட்டில் இருந்து உயிராபத்தான ஹெரோயின் வரையில் அனைத்து வகையான போதைப் பொருள்பயன்பாடும் கடந்த 5 ஆண்டுகளில் உச்ச அளவில் அதிகரித்துள்ளது.

இப்போது கேரளக்கஞ்சாஎனப்படும் போதைப்பொருளின் வர்த்தக விநியோக மையமாக வடக்கு மாறிவிட்டது என்று கூறிவிடுமளவிற்குநிலமை மோசமாகிவிட்டது. கடந்தசில ஆண்டுகளில் பிடிபட்ட இந்தக் கஞ்சாவின் பெறு மதி மட்டுமே பலப் பல கோடிகளைத் தாண்டும் என்கிறபோது, பிடிபடாமல் உள்ளே நுழைந்திருக்கக்கூடிய கஞ்சாவின் அளவு பயமுறுத்துகிறது.

போதைப்பொருள்சார்ந்தகுற்றங்களில்ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அண்மைய ஆண்டுகளாக அதிகரித்து வந்துள்ளது. ஹெரோயின் கடத்தியமைக்காக வடக்கைச் சேர்ந்த இருவருக்கு, தமிழகத்தைச் சேர்ந்தவர்களுடன் சேர்த்து தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும் நிகழ்ந்தது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புள்ளிவிவரப்படி , 2015ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட இலங்கையின் அரைவாசிக் குற்றவாளிகள் போதைப் பொருள் சார்ந்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள். 11,171 (46.4%) சதவீதமானவர்கள் இத்தகைய குற்றங்களுக்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர்கள்.

குற்றவாளிகளின்எண்ணிக்கைதொடர்ந்துஅதிகரித்துவருகின்றமையைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. 2013ஆம் ஆண்டில் 34 வீதமாக இருந்த போதைப் பொருள் குற்றவாளிகள் 2014இல் 43.5 வீதமாக அதிகரித்திருந்தனர்.

தண்டிக்கப்படுபவர்களில்பெரும்பாலானவர்கள்போதைப் பொருள் சார்ந்த சிறு குற்றங்களில் ஈடுபடுபவர்களும், போதைப்பொருள்பாவனையாளர்களுமாகவே இருக்கிறார்கள். உண்மையான பெரும் குற்றவாளிகள், சூத்திரதாரிகள் அனேகமான தருணங்களில் மாட்டுப்படுவதே இல்லை, அல்லது சட்டம் ஒழுங்கு காவலர்கள் உண்மையான குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதே இல்லை என்பதும் குற்றங்கள் பெருகுவதற்குக் காரணம்.

புள்ளிவிவரங்களின்படி, 2015இல் போதைப்பொருள்களுடன் தொடர்புபட்ட குற்றங்களுக்காக 82,482 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்கிறது ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை. இது அதற்கு முந்திய ஆண்டைவிட 23 சதவீதம் அதிகம்.

இலங்கையில் ஹெரோயின் போதைப் பொருள் பாவனையின் அளவு வருடம் ஒன்றுக்கு 985 கிலோ கிராம் என்றும் , நாளொன்றுக்கு 2.7 கிலோ கிராம் என்றும் கணக்கிடப்படுகிறது. இது 45,000 போதைப்பாவனையாளர்களுக்குப் போதுமானது. ஆனால் 2015ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டது 47 கிலோ கிராம் மட்டுமே.

அதிகரித்துவரும் இந்த ஆபத்தைக்கட்டுப்படுத்துவதற்கும், எதிர்காலச் சந்ததியைப் பாதுகாப்பதற்கும் அனைவரும் ஒன்றிணையவேண்டும்.



# இனியும் தொடரவேண்டுமா கூட்டமைப்பு?

இந்துமதி

வடக்குமுதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை கூட்டமைப்பின் அடித்தளத்தையே ஆட்டம்காணவைத்துவிட்டது. இதற்குக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்களே காரணமாகி விட்டனர். இலங்கைத்தமிழ்அரசுக்கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய நான்கு கட்சிகள் கூட்டமைப்பாக இணைந்து செயற்பட்டு வருகின்றன. இதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பிரதான பாகத்தை வகிக்க, ஏனைய மூன்று கட்சிகளும் அடுத்த நிலையில் உள்ளன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த இரா. சம்பந்தனும், மாவை. சேனாதிராசாவும் கூட்டமைப்பின் தலைவராகவும், செயலாளர் நாயகமாகவும் பதவி வகிக்கின்றனர்.

கூட்டமைப்பில் இணைந்துள்ளகட்சிகள்கூட்டமைப்புத் தத்துவத்துக்கு மதிப்புக் கொடுத்துச் செயற்படும்போதுதான், அது உருவாக்கப்பட்ட தன் நோக்கத்தைச் நிறைவு செய்ததாக ஆகும். ஆனால் தேர்தல்களின்போது மட்டுமே கூட்டாக இயங்குவதாகக் காட்டிக் கொள்வது மக்களை ஏமாற்றுகின்றதொரு செயலாகவே கருதப்படும். அதுவே உண்மையும்கூட.

### அன்று முதல் இன்றுவரை தமிழ் அரசுக் கட்சியின் பயணம் ஜனநாயகப் பாதையிலேயே

போராளிக் குழுக்களின் பெயர்களைத்தாங்கிச்செயற்படுகின்ற ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகள், தமிழ் அரசுக் கட்சியிலிருந்து அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. தமிழரசுக்கட்சி ஆரம்பகாலம் முதல் இன்றுவரை ஜனநாயகப் பாதையிலேயே பயணித்து வருகின்றது. பயங்கரவாதச்செயற்பாடுகளுக்கும் அந்தக் கட்சிக்கும் ஒருபோதுமே தொடர்பு இருந்ததில்லை. மக்கள் மத்தியில் அந்தக் கட்சிக்கு அதிக செல்வாக்கும் காணப்படுகின்றது. வடக்கு முதலமைச்சருக்கு எதிரான பிரேரணையைத் தமிழ் அரசுக் கட்சியே ஆளுநரிடம் சமர்ப்பித்திருந்தது. முதலமைச்சரும் தமிழ் அரசுக் கட்சியால் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவர்தான். முதல்மைச்சர் இதை மறந்துவிட்டவர் போன்று இன்று செயற்படுகின்றார்.

ரெலோ, புளொட், ஈ.பி ஆர் எல் எப் ஆகியவை முதலமைச்சருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருவதுடன், நாடாளுமன்றத்தில் தனித்து இயங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளன. இவர்களின் குடுமி தமிழ் அரசுக் கட்சியின் கைகளில் சிக்கிக் கொண்டிருப்பதை இவர்கள் மறந்து விட்டமை பரிதாபத்துக்குரியது. ஏனென்றால் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு கட்சி தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யபடவில்லை. தமிழ் அரசுக் கட்சியையே இவர்கள் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்து வம் செய்கிறார்கள். எப்போதுமே தேவையில்லாத ஆக்ரோசத்தை வெளிப்படுத்தி வருகின்ற வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஒருவர், தாம் நினைத்தால் சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இல்லாமற்செய்யமுடியுமெனக் கூறியமை இங்கு கவனிக்கத்தக்கது. இவர் போன்றவர்கள் விக்னேஸ்வரனுக்குத் துதிபாடுவதை எவருமே தடுக்கவில்லை. ஆனால் வாயில் வந்ததையெல்லாம் உளறிக் கொட்டுவதைத்தான் எல்லோராலும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

### கண்டனங்களுக்கு முகம் கொடுத்து வரும் தமிழ் அரசுக் கட்சி

முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்து வருபவர்கள் தற்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் மீதுதான் கண்டனக் கணைகளைத் தொடுத்து வருகின்றனர். பிரச்சினைகள் யாவற்றையும்தமிழ்அரசுக்கட்சியேஉருவாக்கியது என்பதான தோற்றப்பாடும் அவர்களால் உருவாக்கப்பட்டு வருகின்றது. வடக்கு முதலமைச்சர் தவறொன்றும் செய்யாத நிலையில், அவர் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணைகொண்டு வந்தமை இமாலயத் தவறு எனவும் கூறப்படுகின்றது. இவைதொடர்பாகஉண்மை நிலைபுரியாமல் மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். சில ஊடகங்கள் மக்களுக்கு மூளைச்சலவை செய்வதில்தீவிரமாகஈடுபட்டுவருகின்றன. கூட்டமைப்பையும் தமிழ் அரசுக் கட்சியையும் கேவலமான முறையில் விமர்சிப்பதையும், இவை தமது முக்கிய பணியாகக் கொண்டுள்ளன. விக்னேஸ்வரனால் மட்டுமே தமிழர்களுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கமுடியுமென இந்த ஊடகங்கள் பெரும் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளன. ஆனால் இவற்றுக்கு எதிரான பரப்புரைகளும் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக் கூறும்வகையிலான செயற்பாடுகளும் மறுதரப்பால் மேற்கொள்ளப்படாமை மிகப் பெரிய தவறாகும். குறிப்பாகத் தமிழ் அரசுக்கட்சி, மாகாணசபையில் நடந்தவற்றையும் தற்போது நடப்பவற்றையும்,மக்கள்முன் கொண்டுவரல் வேண்டும். ஒரு பொய்யைப் பலமுறை கூறினால் அது மெய்யாகிவிடும் என்று கூறுவார்கள். வடக்கு முதலமைச்சர் விடயத்திலும் ஆளுநருக்குச் சார்பானவர்கள் இதைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள்.

> **கூட்டமைப்பு என்றொருகட்சி தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை. தமிழ் அரசுக்கட்சியையே இவர்கள் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்.**

### மாண்புகள் அனைத்தையும் இழக்க நேர்ந்துள்ளது

இந்த நிலையில், இனியும் கூட்டமைப்புத் தொடர வேண்டுமா? என்ற கேள்வியும் எழாமலில்லை. கூட்டமைப்பில் உள்ளவர்கள் வெவ்வேறு திசைகளில் நின்று கொண்டு ஒருவரை ஒருவர் வசைபாடிக் கொண்டிருக்கும் நிலையில் மக்களை ஏமாற்றுவதற்காக கூட்டமைப்பு என ஒன்று இருப்பதாகக் கூறிக் கொள்வதை ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் தமக்குள் ஒரு கூட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியும். விக்னேஸ்வரனை அதன் தலைவராகவும் நியமிக்கலாம். இதன் மூலமாக எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காணமுடியும்.

ஒரு நல்ல நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு, இன்று அதன் மாண்புகள் அனைத்தையும் இழந்து சின்னாபின்னமாகிக் கிடக்கின்றது. கூட்டமைப்பில் உள்ளவர்களே இதற்கு மூலகாரணமாக உள்ளனர். எதிர்வரும் நாள்களில் மக்கள் இவர்களை அடையாளம் கண்டு கொள்வார்கள். அப்போது உண்மை எது பொய் எது என்பது தெரிந்துவிடும்.



# பொதுமக்களின் குருதியே சிறந்தது ஏன்?

மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்

அண்மைக்காலமாக தமிழ் மக்கள் சாதீய பிரிவுகளினால் பிரிந்து இருப்பதன் காரணமாகப் பல தமிழர்கள் குருதிக் கொடை வழங்கத் தயங்குகின்றனர் எனவும், இதன் காரணமாக ஆயுதப் படையினர் வடக்கில் தமிழ் நோயாளிகளின் உயிரைக் காப்பதற்காக குருதி வழங்குகின்றனர் எனவும், பரப்புரை மேற்கொள்ளப்பட்டதையும், அதை யாழ். போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் மறுத்து அறிக்கை விடுத்ததையும் பார்த்தோம். இதன் உச்சக்கட்டமாக கடந்த 25ஆம் திகதியன்று பௌத்த துறவிகள் சுமார் 100 பேர் தென் பகுதியில் இருந்து குருதிக் கொடை வழங்க வந்திருக்கின்றனர் எனவும் பரப்புரை செய்யப்பட்டுள்ளது.

**பொதுமக்கள் கொடையாக வழங்கும் குருதி மருத்துவரீதியில் தரமானது; பாதுகாப்பானது**

தமிழினத்தைத் தொடர்ந்தும் கேவலப்படுத்தும் இந்த விசமத்தனமான செயல்களுக்கு பின்னணியில் எவர்கள் தொடர்பு பட்டிருக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, முதலில் மருத்துவ ரீதியாக ஏன் குருதியானது ஆயுதப்படையினரை விட பொது மக்களிடம் இருந்து பெறப்படவேண்டும் என்பதற்குரிய காரணங்களைப் பார்ப்போம்.

1. உலகளாவிய ரீதியில் குருதி வழியாகப் பரவும் ஈரலழற்சி (Hepatitis B, C) போன்ற நோய்கள், பொது மக்களைவிட படையினர் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது (prevalence). ஆயுதப்படையினரால் கொடையாக வழங்கப்படும் குருதியில் ஈரலழற்சி போன்ற நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் உள்ளனவா? என்பது குறித்து ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டாலும், அந்தப்பரிசோதனைகள் 100% உறுதியானவை (sensitivity<100%) அல்ல. எனவே பொது மக்களிடம் இருந்து பெறப்படும் குருதியே, நோய் பரவலியல் கோட்பாடுகளின்படி (epide miological principles) அதிக பாதுகாப்பானது.

**சுயவிருப்பின் அடிப்படையிலேயே குருதிக் கொடை பெறப்பட வேண்டும்**

2. மருத்துவ ஒழுக்கநெறிப்படி (ethics) குருதியானது தன்னார்வத் தொண்டரிடம் இருந்து (volu nteer) அவருடைய சுய விருப்பின் அடிப்படையில் பெறப்பட வேண்டும். உயரதிகாரியின் உத்தரவுப்படி கீழ் மட்டப் படையினர் வந்து குருதி வழங்குவதை சுய விருப்பின் அடிப்படையில் குருதி பெறப்படுவதாகக் கொள்ள முடியாது (coercion). அதேபோல விகாராதிபதியின் உத்தரவின் பேரில் துறவிச் சிறுவர்களிடம் குருதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோருவது, 16 வயதுக்குக் குறைந்தோர் மற்றும் 45 கிலோ நிறைக்கு குறைந்தவர்கள் குருதிக் கொடை செய்ய முடியாது என்ற பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையை மீறுவதுடன் சிறுவர் துன்புறுத்தல் குற்றமாகவும் கொள்ளத்தக்கது.

> **படைச்சிப்பாய்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தொடர்ச்சியான மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதால் இத்தகைய பரிசோதனைகள் மூலமாக கிடைக்கும் அனுகூலம் மிகக் குறைவு.**




3. குருதிக் கொடை அளிக்க வருபவர் நோய்களுக்கான பல மருந்துகள் பயன்படுத்துபவராக இருந்தால் (உதாரணம்: நீரிழிவு) அவர் குருதிக் கொடை வழங்கும் தகமை அற்றவராகக் கருதப்படுவார். மேலதிகாரியின் உத்தரவை ஏற்று குருதிக்கொடை வழங்கவரும் படையினர், மருந்துகளைப் பயன்படுத்துபவராக இருந்தாலும், தமது தகமைஅற்றநிலையை சகசிப்பாய்கள் மத்தியில் வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டக் கூடும். இதன் காரணமாகவும் தகமை அற்ற குருதி பெறப்படும் அபாயம் காணப்படுகிறது. கொடையாகப் பெறப்படும் குருதி, அதில் கலந்து உள்ள மருந்துகளுக்காகப் பரிசோதிக்கப்படுவதில்லை என்பதை இங்கே கவனத்தில் எடுக்க வேண்டும்.

4. குருதிக் கொடை வழங்கப் பொதுமக்கள் வரும் போது அவர்களுடைய எடை, குருதி அமுக்கம், குருதிப் பிரிவு, நாடித் துடிப்பு, குருதியில் தொற்று நோய்த்தன்மை ஆகியவை பரிசோதிக்கப்பட்டு உரிய ஆலோசனை வழங்கப்படுவதனால் அவர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் அதிகமாக இருக்கின்றன. இராணுவச் சிப்பாய்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தொடர்ச்சியான மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதால் இத்தகைய பரிசோதனைகள் மூலமாக கிடைக்கும் அனுகூலம் மிகக் குறைவு. வட பகுதியில் உள்ள குருதி வங்கிகளைச் சேர்ந்த மருத்துவர்களும் ஏனைய ஊழியர்களும் மேலே குறிப்பிடப்பிட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து தமிழினத்தை கேவலப்படுத்தாது பொதுமக்களிடம் இருந்து குருதியை பெறுவதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுதல் மிக அவசியமான ஒன்று.





## ஆசிரியருக்கான கடிதம்

### 2017ஆம் ஆண்டிலாவது உரியவர்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரை கிடைக்குமா?

வரணி வடக்கு ஜே/339, கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பல சமுர்த்திப் பயனாளிகளுக்கு தற்போது சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்கப்படுகிறது. இதில் மனதுக்கு வேதனை தரும் விடயம் என்னவென்றால், இந்தப் பிரிவில் வாழும் மிகவும் வறுமைப்பட்ட விதவைகள், தங்கிவாழ்வோர், நோயாளிகளுக்கு இதுவரை சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்கப்படவில்லை என்பதுதான். போர் காரணமாக இடம் பெயர்ந்து சென்று வேறு இடங்களில் தற்காலிகமாக வாழ்ந்த மக்கள் 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், இந்தப் பிரிவில் நிரந்தரமாக மீள் குடியேறியதன் பின்னர், பணமாக நிவாரணக் கொடுப்பனவு வழங்கல் நிறுத்தப்பட்டு சமுர்த்தி முத்திரை வழங்கல் நடைமுறை வழக்கத்துக்கு வந்தது. இருப்பினும் வறுமைக் கோட்டுக்குக் கீழான பல பொதுமக்களுக்கு இதுவரை சமுர்த்தி முத்திரை வழங்கப்படவில்லை. கடந்த 20.11.2015 இல் பயனாளிகளது விவரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, சமுர்த்திப் படிவங்கள் பதியப்பட்டும் கூட, இன்றுவரை சமுர்த்தி முத்திரைகள் இந்த வறுமைப்பட்ட குடும்பங்களுக்குக் கிடைக்கவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் முத்திரை வரவில்லை; நாங்கள் என்ன செய்வதெனக் கையை விரிகின்ற நிலையே தொடர்கிறது. இந்த நிலையில் வறுமையில் வாடும் எமது உறவுகள், இலவு காத்த கிளிகள்போல் எப்போது கிடைக்கும் நிவாரண முத்திரை என்று ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கூட்டத்தில் கேட்பதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது. ஆனால் முத்திரை பெறும் பயனாளிகள், இந்த ஏழைகளுக்காக குரல் கொடுப்பதாகவும் இல்லை? நொந்து நூலாகிப் போயிருக்கும் இந்த ஏழைகளுக்காக எவர்தான் குரல்கொடுப்பது? உயர் அதிகாரிகளே! கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். தயவு செய்து இந்த ஏழைகள் மீது கருணை காட்டி உடனடியாக அவர்களது சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்கலை மீளாய்வு செய்து, இந்த உறவுகளுக்கு உதவுங்கள். கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்குமென்பர். ஆனால் இந்த ஏழைமக்களோ கேட்கிறார்கள்; தட்டுகிறார்கள்; கதவைத் திறக்காமல் மூடி வைத்து நீங்கள் உள்ளே இருக்கின்றீர்கள். தயவு செய்து, வெளியே வந்து இந்த வறுமைப்பட்டவர்களது தேவையை நிறைவு செய்து கொடுக்க முன்வாருங்கள். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் குறித்து உரியவர்களுக்கு உடன் தெரியப்படுத்தி அவர்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுங்கள். அதுவே இன்று உரிமை இழந்து நிற்கும் எமது உறவுகளுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய சேவையாகும். செய்வீர்களா?

அன்பு-வரணி.

# புத்தளத்தில் குப்பை சேகரிப்பு செப்ரெம்பரில் ஆரம்பமாகும்

## அமைச்சர் சம்பிக்க திட்டவட்டம்

கொழும்பு, ஜூன்28
புத்தளம் அருவக்காடுப் பிரதேசத்தில் சுகாதாரமான முறையில் குப்பைகளைச் சேகரிக்கும் அரணை அமைக்கும் பணி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகும் என்று மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புத்தளத்தில் அமைக்கப்படும் இந்த அரண் ஒரு தேசிய வள மண்டலமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புத்தளம் அருவக்காடுப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள சுகாதார முறையிலான குப்பை பேணும் அரணை நான் எவரினதும் அல்லது எந்தக் கட்சியினதும் அழுத்தத்தின் பேரில் அமைக்கவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது பொருத்தமற்றதாகும். தற்போது சுகாதார முறையில் குப்பைகளை வகைப்படுத்தி நடத்திச்செல்லப்படும் தொம்பே அரணில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைக் கொண்டு அருவக்காட்டிலும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

2019ஆம் ஆண்டுமுதல் இங்கு குப்பைகளை சேகரிக்கும் பணியை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். நாட்டின் தேவைக்காகவே இந்த வேலைத்திட்டம் தொடங்கப்படுகிறதுஎன்றார்.

அருவக்காட்டில் கொழும்பின் குப்பைகளைக் கொட்டுதல் தொடர்பில் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர் சம்பிக்க தெரிவித்த கருத்துகளுக்கு அமைச்சர் ரிசாத் பதியூதீன் கடுமையான கண்டனத்தை வெளியிட்டதுடன், தான் ஒருபோதும் அருவக்காட்டில் குப்பைகளைக் கொட்ட அனுமதியளிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாக நிராகரித் துள்ளார். பின்னர் சம்பந்தப்பட்ட தரப்புடன் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சம்பிக்கவுக்கு அரச தலைவர் பணித்திருந்தார். இந்நிலையிலேயே தற்போது சம்பிக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-ய)

# டெங்கு ஒழிப்புப் பணிகளில் சிறைக்கைதிகள் ஈடுபடுவர்

டெங்கு ஒழிப்புப் பணிகளில் சிறைக் கைதிகளையும் ஈடுபடுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் ஆலோசனைக்கேற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனச்சிறைச்சாலைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நிஷான் தனசிங்க தெரிவித்தார்.

தமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்புப் பணிகளுக்குச் சிறைக் கைதிகளின்உதவியை வழங்குமாறு பிரதேச செயலாளர்கள் பலர் அமைச்சருக்கு விடுத்திருக்கும் வேண்டுகோளுக்கேற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக மொனராகலை மாவட்டத்தில் கைதிகளின் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

(த-ய)

# ஓய்வு பெற்றவர்களுக்கு இராஜதந்திரப் பதவிகள் ஒருபோதும் கிடையாது

## அயலுறவு அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 28
இராஜதந்திரச் சேவையில் கல்விப் புலமை மற்றும் ஆற்றல் கொண்டவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படும் என்று அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அயலுறவு அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் ரவி கருணாநாயக்க, நேற்று முன் தினம் முதல் முறையாக மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார். இதன்போதே அவர் இராஜதந்திரச் சேவையில் கல்விப் புலமை மற்றும் ஆற்றல் கொண்டவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படும் என்று மகாநாயக்க தேரரிடம் உறுதியளித்துள்ளார்.

"ஓய்வு பெற்றவர்கள் இராஜதந்திரச் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். இலங்கைத் தூதுவர்கள் வெளிநாடுகளில் நாட்டின் பெயரைக் கட்டியெழுப்ப வேண்டும். வெளிநாடுகளில் நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள், அதற்கு ஏற்றவர்களாக இருக்கவேண்டும்.

முன்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, தனது பதவிக் காலத்தில், நாட்டுக்காக மிக முக்கியமான பங்கை ஆற்றியிருக்கிறார்." என்றும் அவர் கூறினார்.

(த)


## பணிநிலை வேண்டுகை

கரடிபபோக்கு, கிளிநொச்சியில் இயங்கும் "கொக கோலா" விற்பனை முகவர் நிறுவனத்துக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர.
01) விற்பனைப் பிரதிநிதி
02) கணக்காளர் (கணினி அறிவு உடையவர் விரும்பத்தக்கது)
குறிப்பு:- கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
077 772 2305

## உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பில் உள்ள பிரபல்யமான தமிழ் மொழி கார் சேர்விஸ் நிறுவனத்தில்
✓ வாகனம் கழுவுவதற்கு ✓ சேர்விஸ் செய்வதற்கு
இவற்றிற்கான வேலையாள்கள் உடனடியாகத் தேவை. முன் அனுபவம் எதிர்பார்க்கப்படவில்லை.
077 735 2332, 077 040 7885
Email address - info.vtamarketing@gmail.com

## பெயர் மாற்றம்

தோட்ட வெளி மன்னாரைச் சேர்ந்த **அப்துல் வாகிட் முகமட் றியால்** ஆகியநான் எனது பெயரை இன்றிலிருந்து **றோகித்** எனப் பெயர் மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.
A.றோகித்

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண்தேவை. தனிப்பட்டவர், பொறுப்பற்றவர், அநாதைகளும் விண்ணப்பிக்கலாம்.
077 929 8034

## தங்குமிடம் வாடகைக்கு

யாழ்-பல்கலை மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ளது. இணைந்த குளியல் அறைகளுடன் பாதுகாப்பான இடங்கள்
தொ.பே.எண்: 0777 769260
(CS/5152) (10)

## தேவை

பழமை வாய்ந்த அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு தேர் ஒன்று தேவைப்படுவதால் பாவிப்பில் இல்லாத தேர் இருக்குமானால் தயவுடன் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.
077 453 6519

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள கட்டடப் பொருள் உற்பத்தி நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.
✓ மேசன் ( கல்லரிதல், பூக்கல்வேலை)
✓ காவலாளி
(தங்குமிட வசதி உண்டு)
077 022 2644

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## பணிப்பெண் தேவை

கொழும்பு தொடர்மாடியில் உள்ள ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு சமையல் செய்யக்கூடிய 25 இற்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் சம்பளமாக ரூபா 25000/- வழங்கப்படும்.
பாடசாலை தவணை விடுமுறை நாள்களில் சம்பளத்துடன் கூடிய ஒருவார விடுமுறை வழங்கப்படும்.
077 732 0012

## மணமகள் தேவை

80 உத்தரம் 3, 7செவ்வாய்.
17 பாவம் குவான்ரிற்றி சேவயர் மணமகனிற்கு மணமகள் தேவை.
துர்க்கா திருமண சேவை
077 818 5978/ 075 011 1122

## மணமகள் தேவை

82, ரோகினி 1 செவ்வாய் கம்பனி கணக்காளர் சைவ மணமகள் தேவை.
துர்க்கா திருமண சேவை
077 818 5978/ 075 011 1122

## மணமகள் தேவை

85, சதயம் 12 சூரியன் செவ்வாய் 15 பாவம் கனடா சிற்றிசன்
துர்க்கா திருமண சேவை
077 818 5978/ 075 011 1122

## மணமகள் தேவை

83, உத்தரட்டாதி 3 சூரியன் செவ்வாய். சிவில் எஞ்ஜினியர் சிங்கப்பூர் மணமகனுக்கு மணமகள் தேவை
துர்க்கா திருமண சேவை
077 818 5978/ 075 011 1122

## வேலையாள்கள் தேவை

சுன்னாகம், மானிப்பாய் ஆகிய இரண்டு இடங்களிலும் இயங்கி வரும் கணினி கல்வி நிலையத்திற்கு MS Office, DTP தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. MS Office படிப்பிப்பதற்கு ஆண்கள் தேவை. நேரில் வரவும்
Win Soft Technology Computer Education
K.K.S Road,Chunnakam
021 7451 770

## ES Printers

- Poster
- Notice
- Lable
- Wedding Card
- Bag Print
- Award
- Frame Item
- Batch
- Vehicle Brand
- T-Shirt
- Cap
- ID Card
- Key Tag
- Book Mark
- Pen Print
- Book Printing
- Woodent Print



357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

## தேவை

**Accounts Assistant**
Requirements : Female
Age : 20 -30
Passes in A/L Commerce Stream Part Qualifications English Knowledge

## தேவை

**Marketing Coordinator**
Requirements
Age : 20 -35
English skills Driving License Females are encouraged to Apply

The Thinnai
86, Palaly Road, Jaffna.
Contact - 076 752 8628
Send Your CV to hr@thethinnai.com


## புதுக்குடியிருப்பு கோம்பாவில் நாகதம்பிரான் ஆலய கட்டட நிதி வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஸ்ரலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | சிட்டை இல. | பெயர் | முகவரி |
|---|---|---|---|
| பரிசு | | | |
| 1 | 2501 | சதீசனன் | புதுக்குடியிருப்பு |
| 2 | 3116 | லோ.சர்மிலன் | வேணாவில் |
| 3 | 1899 | அ.மோகனப்பிரியா | திருகோணமலை |
| ஆறுதல் பரிசு | | | |
| 1. | 1182 | கி.லவின்ஸ் சன் | - |
| 2. | 767 | மாரி கோட்டல் (கிருதிகா) | புதுக்குடியிருப்பு |
| 3. | 2529 | சயிந்து | - |
| 4. | 1783 | S.G.எட்வேட் | புதுக்குடியிருப்பு |
| 5. | 288 | மோகனதாஸ் | - |
| 6. | 412 | அப்பன் உதிரிகள் வாணிபம் | புதுக்குடியிருப்பு |
| 7. | 222 | B.சிறி | புதுக்குடியிருப்பு |
| 8. | 558 | இந்து ஹாட்வெயார் | புதுக்குடியிருப்பு |
| 9. | 3088 | ஊர்மிளா | புதுக்குடியிருப்பு |
| 10. | 2655 | S.யதுசன் | - |

**ஆலய பரிபாலன சபை**

# 39 வயதுவரை சஷி அடையாள அட்டை பெறவில்லையாம்

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸ 39வயதுவரைதேசிய அடையாள அட்டையைப் பெறவில்லை எனவும், இந்தத் தவறை ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகமும் கண்டு கொள்ளவில்லை எனவும் அந்தத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (சட்டப்பிரிவு) இந்திக்க குமார ஹேரத் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் சுட்டிக்காட் டினார்.

முறையற்ற விதத்தில் இராஜதந்திரக் கடவுச்சீட்டொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சஷி வீரவன்ஸவுக்கு எதிராகப் புலனாய்வுப் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டாரவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது சாட்சியமளித்த இந்திக்க குமார ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரிய வயதில் தேசிய அடையாள அட்டையைப் பெறத் தவறிய சஷி வீரவன்ஸவுக்கு அபராதமொன்றை விதிக்கவோ அல்லது நீதிமன்றத்துக்கு அறிவிக்கவோ ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அதிகாரம் உள்ளது. எனினும்,அப்போதைய ஆணையாளர் நாயகம் அவ்வாறு செய்யவில்லை.

அத்துடன்,தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்பவர் தனது பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், சஷி வீரவன்ஸ தனது சாரதி அனுமதிப்பத்திரத்தையும் பொலிஸ் முறைப்பாட்டின் பிரதியொன்றையுமே சமர்ப்பித்திருக்கிறார் என அவர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். (த-ய)

# பௌத்தம் குறித்து பிக்குகள் சிலர் தவறான கருத்து

## பேராசிரியர் விமலரத்ன தேரர் தெரிவிப்பு

பௌத்த பிக்குமார் சிலர் சமூக, கலாசார மனநிலையை அடிப்படையாகக் கொண்டு சிங்கள பௌத்த மதம் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த ஒரு சமூகமாக இருந்தாலும் மொழி மற்றும் கலாசார அடிப்படையில் சிறப்பு அடையாளங்கள் உள்ளன. அந்தச் சமூக அடையாளத்திற்காகப் பேசுவோர், குரல் கொடுப்போர் பலர் உள்ளனர்.

இவர்களில் சிங்கள மொழி பேசும் மற்றும் அந்த மொழியுடன் சம்பந்தப்பட்ட கலாசார உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் பௌத்த பிக்குமார் இருப்பதைக் காணமுடிகிறது.

எனினும் , மனிதர்களை இன, ஜாதி, குல ரீதியாகப் பிரிக்கக் கூடாது என பௌத்த தர்மம் தெளிவாக வலியுறுத்தியுள்ளது.

இதனால், பௌத்த தர்மமத்தை இனவாத போதனையாக கருதுவது பௌத்த போதனைகளுக்கு நிந்திப்பதாகும் என்றார். (த-ய)



நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் - கொக்குவில்

**வருடாந்த மஹோற்சவம்**

**29.06.2017 - 09.07.2017**

| | |
|---|---|
| 29.06.2017 | **வியாழக்கிழமை - கொடியேற்றம்**<br>வசந்த மண்டபப் பூசை - மு.ப 8.30 மணி<br>கொடியேற்றம் - மு.ப 10.00 மணி |
| 01.07.2017 | **சனிக்கிழமை - மஞ்சத்திருவிழா**<br>வசந்த மண்டபப் பூசை - பி.ப 5.00 மணி<br>தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதியுலா |
| 05.07.2017 | **புதன்கிழமை - கைலாசவாகனத்திருவிழா**<br>வசந்த மண்டபப் பூசை - பி.ப 5.00 மணி<br>தொடர்ந்து அம்பாள் கைலாச வாகனத்தில் திரு வீதியுலா |
| 07.07.2017 | **வெள்ளிக்கிழமை - சப்பறத் திருவிழா**<br>வசந்த மண்டபப் பூசை - பி.ப 5.00 மணி<br>தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திரு வீதியுலா |
| 08.07.2017 | **சனிக்கிழமை - தேர்த் திருவிழா**<br>வசந்த மண்டபப் பூசை - காலை 6.30 மணி<br>தொடர்ந்து இரதோற்சவம் நடைபெறும். |
| 09.07.2017 | **ஞாயிற்றுக்கிழமை - தீர்த்தோற்சவம்**<br>வசந்த மண்டபப் பூசை - காலை 6.30 மணி<br>தொடர்ந்து தீர்த்தோற்சவம் நடைபெறும்<br>மாலை வசந்த மண்டபப் பூசை - பி.ப 3.30 மணி<br>தொடர்ந்து திருவூஞ்சல் கொடியிறக்கம். |
| 10.07.2017 | **திங்கட்கிழமை - பூங்காவனத்திருவிழா**<br>பிராயச்சித்த அபிஷேகம் - காலை 5.30 மணி<br>மாலை வசந்தமண்டபப்பூசை - பி.ப 5.30 மணி<br>தொடர்ந்து பூங்காவனத் திருவிழா |
| 11.07.2017 | விசேட சங்காபிடேகம் காலை 8.00 மணி<br>மாலை தேரடி வைரவப் பொங்கல் பி.ப 3.30 மணி |

**தினமும் காலை 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெறும்.**

**28.06.2017** **பரிபாலனசபை**

## திருமண அழைப்பு

*அன்புடையீர்,*

நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் இன்று (28.06.2017) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.56 வரையுள்ள சுபமு கூர்த்த வேளையில்

| | |
|---|---|
| **லயன் டாக்டர்** | **நொத்தாரிசு** |
| **ராமு கந்தையா** (JP) | **க.வே.சிதம்பரப்பிள்ளை** (JP) |
| **அவர்களின் பேரன்** | **அவர்களின் பேர்த்தி** |
| **டாக்டர் சுகன்** | **டாக்டர் அபிரா** |
| **அவர்களுக்கும்** | **அவர்களுக்கும்** |

Oswal Centre Cooperlane Road Potter Bar Hartfodshire என்னும் இடத்தில் திருமணம் நடைபெறுகிறது என்பதை அன்புடன் அறியதருகின்றோம்.

| | |
|---|---|
| **திரு.திருமதி** | **திரு.திருமதி** |
| **சிறீந்திரன் செல்வநாயகம்** | **சிறீஸ்கந்தமோகன் சிதம்பரப்பிள்ளை** |
| **குடும்பத்தினர்** | **குடும்பத்தினர்** |
| **110 /15, சட்டநாதர் வீதி,** | **81,பார்றோட், தாமரைக்கேணி** |
| **நல்லூர், யாழ்ப்பாணம்.** | **மட்டக்களப்பு.** |
| Greenford London | Enfield London |

சிவமயம்



# ஆனி உத்தரப் பெருவிழாவும் 1008 சங்குத் திருமஞ்சனமும்

## 30.06.2017 வெள்ளிக்கிழமை

சைவநெறிக் கூடம்

**அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்**

**இணுவில் தெற்கு, இணுவில், யாழ்ப்பாணம்.**

செந்தமிழ் வழிபாட்டுத் திருக்கோயிலாகிய இணுவை அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞான்லிங்கேச்சுரர் திருக்கோயிலிலே எதிர் வரும் 30.06.2017 வெள்ளிக்கிழமை ஆனி உத்தரப் பெருவிழாவும், 1008 சங்குத் திருமஞ்சனமும், மணவாளக்கோலமும் சிறப்பாக நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

### நடேசர் திருமஞ்சனம்

**அதிகாலை 3.00 மணி :** சிவகாமசுந்தரி உடனாய நடேசப்பெருமானுக்கு சிறப்புத் திருமஞ்சனம் (நடேசர் அபிசேகம்)

**அதிகாலை 5.30 மணி :** சிறப்பு வழிபாடு (நடேசர் தரிசனம்)

### 1008 சங்குத் திருமஞ்சனம்

**காலை 10.00 மணி : 1008 சங்குத் திருமஞ்சனம்**

அடியார்கள் இவ்வழிபாட்டில் நேரடியாகப் பங்கேற்றுத் தங்கள் கரங்களால் சங்கு கொண்டு எம் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்யலாம். இந்நிகழ்வில் பங்கு பெற விரும்பும் அடியார்கள் ஐம்பது ரூபாய் செலுத்தி திருக்கோயிலில் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நண்பகல் 12.00 மணி : சிறப்பு வழிபாடு

நண்பகல் 1.00 மணி : அன்னதானம்

### மணவாளக்கோலம்

மாலை 5.00 மணி : சிறப்பு வழிபாடு

மாலை 6.00 மணி : ஞானாம்பிகை - ஞானலிங்கேச்சுரர் திருமணவினை நாள் (மணவாளக்கோலம்)

இரவு 7.00 மணி : உள்வீதி, வெளிவீதி உலா

கண்ணுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான் சங்கம் கண்டு இன்பம் நுகர்ந்த தெய்வத் தமிழிலே நடைபெறும் விழாக்களில் பங்கெடுத்து இறையருள் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

அறநெறிக்கூடம்

அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்

இணுவில் தெற்கு, இணுவில்.

Dialog
Mega அதிஷ்டம்
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
117 வது வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
27 72 68 76 15 G
இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,576,923/-
உங்கள் இலக்கங்களை அறிந்திட, பரிசுகளைப் பெற்றிட 121 க்கு அழையுங்கள்.
Dialog

# அன்று போற்றியவர்கள் இன்று தூற்றுகின்றனர்

## குற்றங்களுக்கு அவர்களும் பொறுப்பு என்கிறார் மகிந்த

கொழும்பு, ஜூன்28

அன்று என்னுடன் இருக்கும் வரையில் என்னை அரசன் எனக் கூறியவர்கள் இன்று என்னைக் குற்றவாளி எனக் கூறுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது என முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குற்றங்களுக்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. என்னுடன் இருந்த அனைவரும் குற்றவாளிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாட்டில் பௌத்த சிங்கள மக்களுக்கும் மதத்திற்கும் எதிராக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இனவாதமும் பரப்பப்பட்டு வருகின்றது.

இதனால் நாம் வெற்றி கொண்ட நாடு மீண்டும் பறிபோகும் நிலைமை ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது மிகவும் மோசமாகத் தாக்குதல் நடத்திய வரலாறு இதற்கு முன்னர் எப்போதும் இருந்ததில்லை. இந்த அரசே மிகவும் கொடூரமான வகையில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதற்குக் கட்டளை பிறப்பித்தது யார்? யாருடைய அதிகாரத்தில் இந்த சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன?

அன்று எமது ஆட்சியில் இவ்வாறு நடந்தால் அல்லது நடைபெற்ற குற்றங்கள் அனைத்திற்கும் மகிந்த ராஜபக்சவே காரணம் என எனது பெயரைக் குறிப்பிட்டனர்.

இன்று யாரைக் குற்றம் சுமத்துவது. நிறைவேற்று அதிகாரம் இன்று அனைவரின் மூலமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ரணில்-மைத்திரி கூட்டணியினால் நாட்டைச் சரியான பாதையில் கொண்டுசெல்ல முடியாது என்பது அப்போதே எமக்குத் தெரியும்.

இந்த இருவரின் கூட்டுத் திருமணம் பொருத்தமற்றது. இவர்களால் நாட்டைக்கொண்டுசெல்ல முடியாது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளில் என்னைக் குற்றவாளி என பொய்யான கருத்துக்களைக் கூறி என்னை அவமதித்து வருகின்றது.


என்னை இன்று குற்றம் கூறும் நபர்கள் அன்று எனது அமைச்சரவையில் இருந்தவர்கள். என்னால் ஏதேனும் குற்றம் இடம்பெற்று இருப்பின் அதற்கு அவர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

குற்றங்களுக்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. என்னுடன் இருந்த அனைவரும் குற்றவாளிகள் என்பதை ஏற்றுகொள்ள வேண்டும். எனது ஆட்சியில் இந்த நாட்டை காட்டிகொடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும்நான் முன்னெடுக்கவில்லை.

இனியும் அவ்வாறன செயற்பாடுகளை நான் முன்னெடுக்க போவதும் இல்லை அன்று எம்முடன் இருந்தவர்கள் சிலர் சலுகைகளுக்காக எமை விட்டு சென்றுள்ளனர். யார் எம்மை விட்டு சென்றாலும் மக்கள் என்று எம்முடன் இருக்கின்றனர் - என்றார்.

(கு-ய)

## ஈர விழிகளுடன் முபத்து நாள்கள்



அமரர்

### அகஸ்ரீன் அருளப்பு

(ஆசிரியர்)

தோற்றம் 24.11.1930 | மறைவு 29.05.2017

அன்புத் தெய்வமே! மாதம் ஒன்று
போனது அப்பா. எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும் தங்கள் அன்பும்
ஆசகற்றும் குணமும் எம்மை வழிநடத்தி
செல்லும் தங்களை நேரில் காண
இயலாதிருப்பினும் நீங்கள் எப்போதும்
நினைவாக எம்முடன் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
தினமும் இறைவனை மன்றாடுகின்றோம்.

**வவுனிக்குளம்,
மல்லாவி.**

**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
அசோக்குமார் (மகன்) 077 906 8923**

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தினரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை

அன்னை வீரமாகாளி அம்பாளின் இராஜகோபுரத்தை தமது தனிப்பட்ட உபயமாகக் கட்டுவித்து தந்து எம்மையெல்லாம் கோபுர தரிசனம் காண வைத்த தாயார் ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா அவர்களின் கணவர்

### திருவாளர் வேலுப்பிள்ளை அரசறட்ணம்

அவர்கள் நேற்றைய தினம் இயற்கை எய்திய செய்தி கேட்டு பெரும் மனத்துயரம் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா அவர்களுக்கும் அவர்தம் பிள்ளைகளுக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா அன்னை வீரமாகாளியின் பாதாரவிந்தங்களை சரணடைந்து சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவாச்சார்ய இளவரசு, சக்திகிரிஜா வியாசர்
சிவஸ்ரீ சிவ.கமஸ்ராஜ் குருக்கள்,
மேற்படி தேவஸ்தான முதன்மை பிரதம குருவும், பரம்பரை தர்மகர்த்தாவும்.



உ
சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

(31ஆம் நாள் நிகழ்வு)

கடந்த 31.05.2017 (புதன்கிழமை) அன்று
சென்னையில் சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

திருமதி

### இராசையா விஜயலெட்சுமி

அவர்களின் இறுதிக்கிரியைகள் சென்னையிலும், அந்தியேட்டிக்கிரியைகள் இராமேஸ்வரத்திலும் நடைபெற்றன. தொடர்ந்து 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 30.06.2017 வெள்ளிக்கிழமை அமரரது பாண்டியன்குளம் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது குடும்பத்தலைவியின் ஆத்மசாந்திப்பூசையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் எம்மோடு துயர் பகிர்ந்து கொண்ட அனைத்து உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டி அழைக்கின்றோம்.

**131, பாண்டியன்குளம்,
வவுனிக்குளம்.**

**குடும்பத்தினர்.**

(C/30433)(10)

## மரண அறிவித்தல்

### இராசநாயகம் பொன்னாபரணம்

(சின்னக்கிளி)
"நெல்லொரு பாதிப் பிள்ளையார் கோயிலடி"



தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் பொன்னாபரணம் 26.06.2017 திங்கட் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: ஸ்ரீ மயூரன் (மருமகன் - மயூரன்ஸ் ஸ்ரோர்ஸ், வழக்கம்பரை), செல்வி - மகள்

**077 806 5900, 021 205 2648**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் செல்வி
க. சுகந்தினி அவர்களின் அன்புத் தந்தையார்

### சங்கரப்பிள்ளை கந்தையா

அவர்கள் 26.06.2017 சிவபதமடைந்தார்.
இவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்**

## மரண அறிவித்தல்

### திருமதி லலிதா (செல்வி) சுந்தரலிங்கம்



ஊரெழு, கரந்தனைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிதா (செல்வி) சுந்தரலிங்கம் 26.06.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரெத்தினம் - பத்மாதேவி தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கிராமசேவையாளர் J/66) அவர்களின் அன்பு மனைவியும், சிந்துஜன் (தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்திய சாலை), யதுர்சன், நிருஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாரதி (ஜேர்மனி), பகிரதி (கனடா), பாமினி (கனடா), பாபு (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2017) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்**

**021 222 7075**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு
11.02.1940

விண்ணில் ஒளிர்வு
28.06.2012

### அமரர் செல்லப்பா திருஞானயோகநாதன்

ஐந்தாண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிஷம் எங்கள் தந்தை
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**இராசவீதி, தோப்பு,
அச்சுவேலி.**

[ஜே.2741] (13.18)

உங்கள் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

## மங்கோலியாவில் எவருக்கும் பெரும்பான்மை இல்லை

மங்கோலியா அதிபர் தேர்தலில் எவருக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், அந்நாட்டு வரலாற்றில் முதன்முறையாக இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடைபெற இருக்கிறது.
மங்கோலியாவில் அதிபராக உள்ள எல்பெக்டோர்ஜ் சகியாபின் பதவிக்காலம் முடிவடைய உள்ளது. இதனையடுத்து புதிய அதிபரை தேர்வுசெய்வதற்காக தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
என்க்போல்ட் மியீகோம்போ, பட்டுல்கா கல்ட்மா, கன்பாடர் சைன்கு ஆகிய மூவரும் போட்டியிட்டனர்.
எவரும்வெற்றிபெறுவதற்குரியகுறிப்பிட்ட அளவுவாக்குகளைப் பெறவில்லை. இதனால் இரண்டாவது சுற்று வாக்குப் பதிவு விரைவில் நடைபெறவுள்ளது. (ம)



# ஐ.எஸ். பிடியிலிருந்து மீண்டது அல் பாருக்

பக்தாத், ஜூன் 28
ஈராக்கில் ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடியில் இருந்த, மோசூல் நகரத்தின் அருகே உள்ள அல் பாருக் பகுதியை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரும் வர்த்தக நகருமான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் மேற்குப்பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது. இதன் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேற்கு மோசூலின் மிகப் பெரும் கிராமமான அல் பாருக் ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது என்று ஈராக் இராணுவம் தெரிவித்தது.
அல்பாருக் பகுதியிலேயே கிட்டத்தட்ட 900 ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த அல்நூரி மசூதி இருந்தது. இதை கடந்த வாரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தி அழித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மோடியை புகழ்ந்தார் டொனால்ட் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜூன் 28
உலகின் சிறந்த தலைமை அமைச்சர் மோடி இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
மோடி அமெரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்க அதிபரின் உத்தியொகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகைக்கு நேற்று அவர் சென்றார். அங்கு அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.
"மிகச்சிறந்த சிறந்த தலைமை அமைச்சரான மோடி அமெரிக்கா வந்திருப்பது பெருமை அளிக்கிறது. மோடி சிறந்த பொருளாதாரத் திட்டத்தை கொண்டுள்ளார்" என்று ட்ரம்ப் தெரிவித்தார்.
''இந்த வரவேற்பு எனக்கு அளித்த வரவேற்பு அல்ல. கோடிக் கணக்கான இந்தியர்களுக்கான வரவேற்பு'' என்று மோடி தெரிவித்தார்.
அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் நுழைவிசைவு விவகாரத்தில் நீண்ட இழுபறி நிலை நீடித்து வரும் நிலையில் இந்தச் சந்திப்பு நுழைவிசைவு விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் என்று கருதப்படுகிறது.
பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு பருவநிலை அதிகரிப்புக்கு எதிரான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளது. தமது விலகலுக்கு இந்தியாவே காரணம் என்று ட்ரம்ப் குற்றம் சுமத்தினார்.



குறித்த ஒப்பந்தத்துக்காக அமெரிக்கா செலவிடும் பில்லியன் கணக்கான டொலர்களில் இந்தியா குளிர் காய்கிறது என்பது ட்ரம்பின் கருத்தாக அமைந்தது.
இந்தப் பின்னணியில் இந்தச் சந்திப்பு முக்கியம் வாய்ந்த ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. (ம)



ரமழான் பண்டிகை உலகெங்கும் வாழும் முஸ்லிம்களால் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. சிரியாவின் ரக்கா நகரில் ரமழானை முன்னிட்டு அமைக்கப்பட்ட ஓர் அலங்காரமே இது. ரக்கா நகர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் தற்போது உள்ளது. அந்த அமைப்புக்கு எதிராக சிரிய இராணுவம் மிகப்பெரும் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரான்ஸ்க்குள் செல்ல முற்பட்ட அகதிகள் மீது கண்ணீர்ப் புகை

இத்தாலி வழியாக பிரான்ஸ் செல்ல முயன்ற நானூறுக்கும் மேற்பட்ட அகதிகளை இத்தாலியப் பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுவீசி கைது செய்தனர்.
உள்நாட்டுப் போர், தீவிரவாத அச்சுறுச்சல், பஞ்சம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் ஆபிரிக்க நாடுகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் லிபியா வழியாக இத்தாலி சென்று பின்னர் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.
அவ்வாறு செல்லமுற்பட்ட 400 அகதிகளே இத்தாலியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம)



## சிரியாவுக்கு அமெ. எச்சரிக்கை

டமஸ்கஸ், ஜூன் 28
அதிபர் அசாத் தலைமையிலான சிரிய அரசு, கிளர்ச்சியாளர்கள்மீது மீண்டும் இரசாயனத் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.
சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபருக்கு எதிராக செயல்படுபவர்கள் ஆயுதக் குழு ஒன்றை தொடங்கி போரிட்டு வருகிறார்கள். இந்த படைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து வருகிறது. அதே நேரத்தில் அரசுக்கு ரஷ்யா ஆதரவாக உள்ளது.
கடந்த ஏப்ரல் மாதம் புரட்சிப்படையினர் கட்டுப்பாட்டில் இருந்த கான்ஷேக்வுன் என்ற நகரை மீட்பதற்கு ராணுவம் இரசாயனக் குண்டுகளை வீசியது. இதற்கு அமெரிக்கா, ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்தன.
இந்த நிலையில் மீண்டும் ஓர் இரசாயத் தாக்குதல் நடத்தத் சிரியா திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்கா குற்றம் சுமத்தியது. (ம)



## பொம்மைகளுக்கான வீடு

ஹலோ கிட்டி, இளம் பெண்களுக்காக வடிவமைக்கப்பட்ட பொம்மை. ஆனால் ஜப்பானைச் சேர்ந்த 67 வயது மாசோ குன்ஜி, கடந்த 30 ஆண்டுகளாக இந்தப் பொம்மைகளைச் சேகரித்து வருகிறார். உலகிலேயே அதிக அளவில் ஹலோ கிட்டி பொம்மைகளைச் சேகரித்ததற்காக சமீபத்தில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறார்.
"முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சுற்றுலா சென்ற இடத்தில் ஹலோ கிட்டியைப் பார்த்தேன். சட்டென்று என்னைக் கவர்ந்துவிட்டது. ஒரு பொம்மையை வாங்கி வீட்டில் வைத்தேன்.
நான் கடினமான பணியைச் செய்வதால் மன அழுத்தத்தோடு வீட்டுக்கு வருவேன். ஆனால் கிட்டியின் சிரிப்பைக் கண்டதும் என் மனம் லேசாகிவிடும். கிட்டி மீது கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வம் அதிகரித்தது.
எங்கே கிட்டியைப் பார்த்தாலும் வாங்கிக்கொண்டு வந்துவிடுவேன். ஒருகட்டத்தில் வீட்டில் இடமில்லை. அதனால் 'ஹலோ கிட்டி ஹவுஸ்' என்ற பெயரில் ஒரு வீட்டை உருவாக்கினேன். இந்த வீட்டின் சுவரில் கூட கிட்டி உருவம் கொண்ட காகிதங்களைத்தான் ஒட்டி வைத்திருக்கிறேன்" என்கிறார் மாசோ. (ம)



## 400 கிலோ மீற்றர் வேகமுடைய புல்லட் ரயில் சீனாவில்

சீனாவில் மணிக்கு 400 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடிய புல்லட் ரயில் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டது.
சீன நாட்டில் அதிகரித்து வரும் மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப, அந்த நாட்டு அரசு போக்குவரத்துத் துறைகளிலும் நவீன மாற்றங்களைச் செய்து வருகிறது. சீன ரயில்வே பயணிகளை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் சென்றுள்ளது.
சீனாவின் முக்கிய நகரங்களான பீஜிங் மற்றும் ஷங்காய் ஆகியவற்றை இணைக்கும் வகையில் அதிவேகமாக செல்லக்கூடிய புல்லட் ரெயில் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த ரயில் இயங்க ஆரம்பித்த அடுத்த மூன்று நிமிடத்தில் மணிக்கு 350 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



'மருத்துவர்களின் மரணம்'

நூல் வெளியீடு


பக். 21

# புதன் பொய்கை



ஜாதி ஒழிப்பும் தனித் தமிழ் நாடும்தான் என் உயிரினும் மேலான கொள்கைகள்

- பெரியார்





# 'ஆ'க்கள்

ந. ஜெயதாஸ்

உயிர் எழுத்துக்களில் இரண்டாவதாகவும் உயிர் நெடிலில் முதலாவதாகவும் அமைவது 'ஆ'. இது 'ஆகாரம்' எனவும்படும். 'ஆ' எனும் நெட்டெழுத்தான இதனைப் பேச்சு வழக்கில் 'ஆவன்னா' என்றுரைத்தாலும் கூட இரண்டு மாத்திரைகள் கொள்ளத்தக்கதான ஒலி அளவுடன் இதை நீட்டித்து உச்சரிப்பதே பொருத்தமானது. இதைவிடவும் இலக்கணகாரர் 'ஆ' என்பதற்குப் பல விளக்கங்களைச் சொல்வர். இதை ஒருவகை இடைச் சொல் என்பர். வாக்கியமொன்றில் பெயரடை தவிர்த்த சொல்லோடு இணைக்கும்போது இது அந்தச் சொல்லுக்கு வினாப் (புறவினா) பொருளைத் தரும் இடைச்சொல்லாக அமைந்துவிடுகிறது.

(நேற்று + ஆ= நேற்றா?, அவன் + ஆ = அவனா?) என்பதுவும் அதிர்ச்சி, பயம் முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படுகின்றது என்பதுவுமாக அந்த 'ஆ' பற்றிய அவர்களது விளக்கங்கள் நீண்டே செல்லும். இவ்விலக்கணகாரர்களின் நிறுவுதல்களின் படி 'ஆ' என்பது மெய் எழுத்துக்களுடன் சேர்ந்தும் சொறகளின் இறுதியாகவும் அமைந்து பொருள்தரும் தன்மையது என்பது தெளிவு. அத்துடன் அது. தான் தனித்து நின்றும் பொருள் தரும் ஆற்றலுடையது என்பதும் தெளிவு.

இலக்கணம் வகுத்ததுடன் மாத்திரம் நின்றுவிடாமல் இலக்கியகாரர்களும் இதனை நிறுவுவதில் முன்னிற்கின்றார்கள். இவர்களது 'ஆ' பற்றிய பயன்பாடு, விளக்கங்களைக் கவனித்தால், அந்த ஒற்றை எழுத்து, அதாவது 'ஆ' எனும் ஒரு எழுத்து வடிவம், ஒற்றைச் சொல்லாகத் தான் தனித்து நிற்பதில் பசுவைக் குறிக்கின்றது. இதன்படி 'ஆ' என்பது பசு. ஆவின் பால் என்பது பசுவின் பால். 'ஆ'நிரை என்பது பசுக்கூட்டம். 'ஆ'வுரஞ்சிக்கல் என்பது பசு தன் உடலை உரசிக் கொள்வதற்கு அமைக்கப்பட்ட கல். அத்துடன் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும்கூட இந்த 'ஆ'க்கள் பற்றிய குறிப்புக்களுண்டு. அறம் சார்ந்து போர் புரியும் மன்னர்களை முழுவதுமாகக் கொண்டிருந்த அந்தக்காலத்தில் அரசுகள்தாம் போர் அறிவிப்பைச் செய்திருந்தாலும் அந்த அறிவிப்பை உணர மாட்டாத பசுக்களை உரியஇடம் சேர்த்த பின்பே போர் நிகழ்தலை வழக்கமாக்கினர். இதனை அக்கால இலக்கியங்கள் பலவற்றிலும் படித்தறிந்து கொள்ளலாம்.



அவ்வேளை பசுக்களைப் பாதுகாக்க விரும்பி 'ஆநிரை கவர்தல்' நிகழ்வதாகவும் ஏராளம் குறிப்புக்களுள்ளன. அவ்வாறு ஆநிரைகளைக் கவர்ந்து திரும்பும்போது ஆநிரைகளுக்கு உணவு வழங்கி, அவற்றுக்கு ஊறு செய்யாமல் ஓட்டிச் செல்வர் என்பதுவும் 'ஆ'நிரைகளைக் கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், 'ஆ'நிரைகளை மீட்கப் போவோர் கரந்தைப் பூவையும் சூடிக்கொள் வர் என்பதுவும் அவ்வகை இலக்கியங்களின் வெளிப்படுத்தல்களே. இத்தகைய சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்ட காலங்களில்கூட பசுக்களைப் பெரும் செல்வமாகக் கருதி வாழ்விலமைத்த வழமைகள் நீண்டிருந்தவைதானே! ஆக இந்த 'ஆ'க்கள் என்பவை பசுக்களைக் குறித்தன அந்தப் பசுக்களானவை தமிழர்கள் தம் செல்வங்களாகத் திகழ்ந்தன. அப்படியாயின் மேற்சொன்ன வாக்கியத்தில் குறிப்பிடும் 'ஆக' என்பதை எப்படிக் கொள்ளலாம்? அது மொத்தத்தில் என்று பேச்சுவழக்கிலும் பாவனைப்படும் சகலதையும், அனைத்தை யும், சாராம்சம் என்ப தாகக்கூடக் கொள்ளலாம். அது இரண்டு வாக்கியங்களை அல்லது ஒரு வாக்கியத்தின் இரண்டுபகுதிகளைத் தொடர்புபடுத்தும் இடைச்சொல் என்கின்றனர் இலக்கணர்.

> 'ஆ' எனும் ஒரு எழுத்து வடிவம். ஒற்றைச் சொல்லாகத் தான் தனித்து நிற்பதில் பசுவைக் குறிக்கின்றது. இதன்படி 'ஆ' என்பது பசு. ஆவின் பால் என்பது பசுவின் பால். 'ஆ'நிரை என்பது பசுக் கூட்டம். 'ஆ'வுரஞ் சிக்கல் என்பது பசு தன் உடலை உரசிக் கொள்வதற்கு அமைக்கப்பட்ட கல்.





# பிறந்த திகதிப்படி எந்த விலங்கினத்தின் குணங்கள் உங்களிடம் காணப்படும் தெரியுமா?



இந்திய சோதிடம் மற்றும் சீன சோதிடம் பற்றி நாம் அனைவருமே அறிந்திருப்போம். அமெரிக்க சோதிடம், மீசோ அமெரிக்கன் நாட்காட்டியைக் கொண்டு மனிதர்களை விலங்குகளுடன் ஆன்மீகரீதியில் இணைத்துக்கூறுகிறது. அத்தகைய அமெரிக்க சோதிடத்தில் உள்ள ராசியின் படி, ஒருவரின் குணநலன்களை அறிந்து கொள்ள பிறந்த திகதி மட்டுமே போதுமானது.

**கரடி**

ஒகஸ்ட் 22 தொடக்கம் செப்ரெம்பர் 21 வரையிலான திகதிகளில் பிறந்தவர்கள் கரடியின் குணத்தைக் கொண்டவர்கள். இந்த திகதிகளில் பிறந்தவர்கள் எந்த வொரு விடயங்களையும் நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்வார்கள்.
மேலும் இவர்கள் வாழ்வில் ஒரு குறிப்பிட்ட விடயங்களில் அதிகமாக சந்தேகப்பட்டாலும், பொறுமைசாலிகளான இவர்கள் சொன்னால் புரிந்து கொள்வார்கள்.

**அண்டங்காக்கை**

செப்ரெம்பர் 22 தொடக்கம் ஒக்ரோபர் 22 வரையிலான திகதிகளில் பிறந்தவர்கள் அண்டங்காக்கையின் குணத்தைக் கொண்டிருப்பர் என்று அமெரிக்கன் சாதகம் கூறுகிறது.
இத்தகையவர்கள் நல்ல ஆற்றல்மிக்கவர்கள் மற்றும்தொழில்முனைவோராவர். இவர்கள் நம்பிக்கையுள்ளவர்கள் மற்றும் தன்னுடன் இருப்பவர்கள் சந்தோஷமாக இருக்க எதை வேண்டுமானாலும் செய்பவர்கள். தாங்கள் செய்யும் செயலால் அனைவரது கவனத்தையும் இவர்கள் ஈர்ப்பார்கள்.

**பாம்பு**

ஒக்டோபர் 23 தொடக்கம் நவம்பர் 22 வரையிலான திகதிகளில் பிறந்த வர்கள் பாம்பின் குணத்தைக் கொண்டவர்கள். இவர்களின் அரச இயல்பு மற்றும் ஓங்கியிருக்கும் தன்மை சில வேளைகளில் மற்றவர்களைப் பயமுறுத்தவும் செய்யும்.
இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் நல்ல தலைமைப்பண்பு கொண்டவர்கள் மற்றும் நல்ல தோழர் அல்லது தோழிகளாக இருப்பர்.

**ஆந்தை**

நவம்பர் 23 தொடக்கம் டிசெம்பர் 21 வரையிலான திகதிகளில் பிறந்தவர்கள் ஆந்தையின் குணம் கொண்டவர்களாக இருப்பர். இவர்கள் வெளியே நன்கு சுற்ற விரும்புவார்கள். கூர்மையான கேட்கும் திறன் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.
இவர்கள் தமது இனிமையான பேச்சால் பலரைக் கவர்வதோடு, பல நண்பர்களையும் தம்முடன் சேர்த்துக் கொள்வார்கள்.

**வாத்து**

டிசெம்பர் 22 தொடக்கம் ஜனவரி 19 வரையிலான திகதிகளில் பிறந்தவர்கள் வாத்து குணம் கொண்டவர்கள். இவர்கள் எதிலும் விடாமுயற்சி மற்றும் உறுதியுடன் இருப்பார்கள்.
இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் தமது நோக்கத்தில் குறியாக இருப்பார்கள்.





# வரலாற்றில் இன்றைய தினம்



1859-முதலாவது நாய்க் கண்காட்சி பிரிட்டனில் இடம்பெற்றது.
1881-ஆஸ்திரியா, சேர்பிய இடையேயான கூட்டு இரகசியமாக ஒப்பமிடப்பட்டது.
1894-அமெரிக்காவில் தொழிலாளர் தினம் பொது விடுமுறை தினமாகியது.
1926-கொற்றிப் டைம்லர் மற்றும் சார்ள் பென்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களையும் ஒன்றிணைத்து மேர்சிடெஸ் பென்ஸ் உருவாக்கப்பட்டது.
1950-கொரியப் போரில் வடகொரியப் படைகளால் சியோல் கைப்பற்றப்பட்டது.
1950-கம்னியூஸ்ட் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட ஏராளமானவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
1950-வடகொரியாவின் முன்னேற்றத்தைத் தடுக்கும் முயற்சியாக சியோலை விட்டு தப்பி ஓடிக் கொண்டிருந்த தனது சொந்த அகதிகள் மற்றும் ஐந்தாவது படைப்பிரிவைக் கைவிட்டு விட்டு ஹங்பாங் பாலத்தை தென்கொரியப் படை வீரர்கள் தகர்த்தனர்.
1950-சியோல் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனைப் படுகொலையை வடகொரியப் படைகள் மேற்கொண்டன.
1964-ஆபிரிக்க அமெரிக்க ஐக்கியம் மால்கம் எக்ஸ் ஆல் உருவாக்கப்பட்டது.
1969-நியூயோர்க் நகரில் ஸ்டோன்வோல் கலவரம் ஒரேபால் உரிமை இயக்கத்தினரால் தொடங்கப்பட்டது.
1973-வட அயர்லாந்து அசெம்பிளிக்கான தேர்தல் நடைபெற்றது.
1992-குண்டுவீச்சால் இயக்கச்சியில் ஒருவர் சாவு.
2004-கிருஷாந்தி கொலை வழக்கில் இராணுவக் கோப்ரல் ராஜபக்ச ஆள்கொணர்வு மனு தொடர்பாக யாழ்ப்பாண நீதி மன்றில் முன்நிறுத்தப்பட்டார்.
2004-கோமதி நதியில் படகு கவிழ்ந்து 50 பேர் சாவு.
2016-26 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கு 20 ஆண்டுகளின் பின் விசாரணைக்கு வந்தது.
2016-தமிழகத்திலிருந்து 36 அகதிகள் நாடு திரும்பினர்.
2016-பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் நிர்மாணிக்குமாறு வவுனியா கமக்கார அமைப்புக்கள் போராட்டம்.
2016-பன்னாட்டு நீதிபதிகள் விவகாரத்தில் கூட்டமைப்பின் அழுத்தம் போதாதென தமிழர்

**நாளை**

**ஆனி - 15**
வியாழக்கிழமை -29.06.2017
திதி: ஷஷ்டி மு.இ. 11.21 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ.12.49 வரை
சுபநேரம்:07.26-08.56 வரை
ராகுகாலம்:01.26-02.56 வரை
குமாரஷஷ்டி விரதம்

# மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த முழ்மொழிவல்லார் மோசஸ் பிரான்சிஸ் ஜோசப்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த மும்மொழி வல்லவரான மோசஸ் பிரான்ஸிஸ் ஜோசப் யாழ் மண்ணின் மணம் கமழ, அந்த மண்வாசனையோடு, மலையகத்தின் கண்ணமைந்த ஹற்றன் மாநகரிலே இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மூத்த சாலைப் பரிசோதகராகப் பல வருடங்கள் நேர்மையாகவும், நீதியாகவும், நம்பிக்கையாகவும் கடமையாற்றி அங்கேயே ஒரு முத்திரையைப் பதிப்பித்த உத்தமர் ஆவார்.
இவர் 1990 ஆம் ஆண்டு வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்து மக்கள் சாரிசாரியாக நட்ந்து வந்தபோது தாமும் தம் குடும்பமும் சேர்ந்து அந்த மக்களுக்கான வேண்டிய உதவிகளை நல்கி, குடும்பங்கள் தங்கிப் போவதற்காகப் புத்தம் புதிய வீட்டையும் வழங்கினார்கள். அளவெட்டியிலிருந்து ஒரு குடும்பம் எங்கு போவது என்று கலங்கிய வேளை தாமிருந்த புதிய வீட்டை அவர்களுக்கு வழங்கி ஜோசப் குடும்பத்தினர் தாம் ஒதுங்கி வேறு வீட்டினில் தங்கி ஆவன புரிந்தனர். அறம் என்பது மேடையல்ல விளம்பரம் விரும்பாத, யோசேப் குடும்பத்தினர் அறம் சார்ந்த பண்பினால் 1990 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை எந்தவொரு வாடகையுமின்றி, எந்தவொரு பிரதியுபகாரமும் கருதாமல், அந்த இந்து சமயக் குடும்பத்தவர்களுக்கு நிம்மதியாய் வாழ வழிசமைத்தனர். இன்னும் பல தொண்டுகளை மௌனமாக ஆற்றிவரும் இவர் சார்ந்த குடும்பங்களால் அமரர் ஜோசப் இன் ஆத்மா ஆண்டவனால் மகிடைப்படுத்தப்படுகிறது. மலையகத்திற்கான ஒரு உறவுப்பாலமாகப் போற்றப்படும் ஜோசப் உடுவில் கிராமத்தில் ஒரு நட்சத்திரமே! அவர்கள் வீட்டில் தங்கிய குடும்பம் வேறு யாருமல்ல நாமே தான்.

கே.எஸ்.சிவஞானராஜா




# சைவமும் தமிழும் வளர்த்த பண்பாளன் சரவணமுத்து விநாயகரத்தினம்



இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகராக விளங்கிய அமரர் அவரது உண்மையான இளைப்பாற்றலை கடந்த 17 இல் தான் அடைந்தார் என்றே கூறலாம். இவர் வாழ்நாள் முழுவதும் தமது சைவத்துக்கும் தமிழுக்குமான அளப்பரிய சேவையைச் செய்தார் என்பது வெள்ளிடை மலை.
கீரிமலை சிவநெறிக் கழகத்தின் நிறுவுனராக விளங்கிய இவர் அதன் வளர்ச்சிக்கும் செயற்படு தன்மைக்கும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கி முன்னின்று உழைத்த உத்தமர் ஆவார். கீரிமலை நகுலேசர் சமேத நகுலேஸ்வரப் பெருமானின் அளவுகடந்த அன்புக்குப் பாத்திரமானவர். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மூத்த உறுப்பினராகவும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை விழாவில் "சிவத்தமிழ்" விருது பெற்றவருமாவார் என்றால் அவரது சமய தமிழ் பற்றுதலையும் அவற்றின் வளர்ச்சிக்கான சேவையினையும் அளவிட முடியும். துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் அல்லும்பகலும் அயராது உழைத்தார். இவர் வாழ்க்கையில் கைக்கொண்ட எளிமை, நேர்மை, அன்பு, கண்ணியம் கட்டுப்பாடு போன்ற வாழ்க்கை விழுமியங்களே அவரை ஓர் உத்தம புருஷனாகவும் சேவையாளனாகவும் மிளிர்வதற்கு மெருகூட்டின என்றால் மிகையாகாது.
மேலும் தெல்லிப்பழை நிர்வாக அங்கத்தவராகாவும் பன்னாலைக் கிராமத்தின முதியோர் சங்கத்தின் ஆரம்ப அங்கத்தவராகவும் சேவையாற்றினார்.
இவர் நிலவளமும் நீர்வளமும் இரண்டறக் கலந்த தெல்லியூரிலே பன்னாலைக் கிராமத்தில் சங்கடப் படலையைக் கொண்ட புதுவீடு என அழைக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரான காலஞ்சென்றவர்களான மறுவன் புலவு சரவணமுத்துவுக்கும் பன்னாலை தையல் நாயகத்துக்கும் கனிஷ்ட புத்திரனாகவும் இல் பிறந்தவராவார் காலஞ்சென்ற சுப்பிரமணிய சுவாமியின் அருமைத் தம்பியாகவும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை மணிமேகலை தம்பதிகளின் அன்பு மருமகனாகவும், மகாலட்சுமியின் பாசமுள்ள கணவராகவும் பரம்பரைகாக்க வந்துதித்த சிவசுதனும், சிவநாயகியும் பாசமுள்ள பிள்ளைகளாகவும் வம்சாவளிக்காக தவக்குமரனையும் தவப்பிரியனையும் பேரப்பிள்ளைகளாகவும் உதயகுமாரி தேவராசா ஆகியோரை தன் மருமக்களாகவும் அடைந்த பேறு பெற்றவர்.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழையமாணவரான இவர் அங்கேயே ஆசிரியராக சேவையாற்றும் பாக்கியம் கிடைத்தவர். இவரது ஆசிரிய சேவையிலே மாணவர்களுடன் அன்நியோன்யமாக பழகி சைவத்தையும் தமிழையும் ஒன்றாக குழைத்து ஊட்டி வளர்த்தார் என்றால் மிகையாகாது.

தெல்லியூர் தேவி

# என்ன புண்ணியம் செய்தோம்



*யாமிருக்கப்பயமேன் சொன்னவன் முருகன்*
*யாழ்நகர் நல்லூரில் கலைபெருக*
*நிலை சிறக்க இருக்கின்றான்*
*மாமயில் நடமாடும் கொக்குவிலூரில்*
*மணியர்பதி முருகபதியில் சிரித்திருக்கின்றான்*

நல்லூரில் அழகொழுக, மாவிட்டபுரத்தில் வரமொழுக, பொலிகண்டியில் திரவிய மொழுக, சந்நிதியில் அன்னமாய் திகள கதிர்காமத்தில் தேனாய் மகிழ, மஞ்ச வனப்பதியில் தமிழ்மொழி தவள, இணுவிலில் திருப்புகழ் தோய மணியர்பதி யில் மழலையாய்ச் சிரித்திருக்கின்றான். ஆம், மழலையாய் இங்கு இருப்பதனால் அவன் விரும்புவதும் கேட்பதுவும் உடனுக்குடன் அரங்கேறுகிறது. முருகப்பெருமான் தான் புதுக்கோவிலில் அமரவிரும்பினான். அதுவும் இனிதே அரங்கேறிற்று. சென்ற நூற்றாண்டில் கொக்குவிலூர் மிகவும் ஐதான குடியிருப்புக்களுடன் இருந்தன. வானுயர்ந்த மரங்களும், அடர்ந்த கொடி செடிகளும் அதனுள்ளே ஊர்வன, பறப்பன, நடப்பன, கதைப்பன, ஒதுங்குவன என பற்பல உயிர்வாழ் உயிரினங்கள் வாழ்ந்த இடம் கொக்குவிலாகும். கூடுதலாக வண்டுகள் ரீங்காரம் செய்யும் காடுகள் அடர்ந்து படர்ந்து இருந்தன. இதனால் மயில்கள் கூடிக் குலாவி மகிழ்ந்து விளையாடிய இடம் மஞ்சை வனமான கொக்குவிலாகும். மயில்களோடு மான்களும், யானைகளும், தினைப்புலம் காத்த குஞ்சரிகளும் இவற்றைப் பார்த்துஇரசித்த முருகனுமாகக் கொக் குவிலூர் குளம், கேணி, பிட்டி, தினைப்புலம், நெல்வயல் என இந்த ஊரை எல்லைப் படுத்தின. முருகனும் மயிலும் அதிகம் இங்கு உலாவிக் குலாவியமையால் கொக்கு விலூரில் முருகன் கோவில்கள் அதிகமாகின.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
புதுக்கோயில் முருகன் ஆலயம்
வேம்படி முருகமூர்த்தி ஆலயம்
மாதனை முருகன் ஆலயம்
மணியர்பதி முருகன் ஆலயம்

முதலி கோயில் என முருகப் பெருமான் கொக்குவில் பதியில் எங்கும் நிறைந்திருக் கின்றான். இதைவிட விநாயகர் கோயில், வைரவர் கோயில், காளிகோயில்களும் அருள்பொழிகின்றன. இதைவிட பென்னாம் பெரியமண்டபம், பெரியதொரு பாட சாலை, பெரியதான சந்தை, வங்கிகள், வைத்தியமனை, புகையிரத நிலையம், புகையிரத நிலையம், தபாற்கந்தோர், வாசிகசாலைகள், இலவசசித்த வைத்தியம னைகள், கலைக்கூடங்கள், கைத்தொழில் சாலைகள், பஞ்சகர்ம ஆசாரியர்கள், அச்சுக் கூடங்கள், சட்டத்தரணிகள் இல்லம், வாக்கிய பஞ்சாங்கச் சோதிட நிலையம், புகையிலை ஏற்றுமதி கூடங்கள், மயில்கள் நடமிடும் வதிவிடங்கள், வர்த்தக நிலை யங்கள், மருந்தகம் வெதுப்பகங்கள் பெரியதொரு பெற்றோல் நிலையம் என கொக் குவில் ஒரு சீரிய நகரமாகிறது. அடர்த்தியாக குடியிருப்புக்கள் கொக்குவிலுக்குக் காத்திரமான செல்வாக்கை அளித்துள்ளனவே. மக்கள் அதிகரிக்க அதிகரிக்கச் சூழல் மாசடைவது தவிர்க்க முடியாதது. மேலும் நிலத்தடி நீரும் அதிகளவு மலசலகூடங்க ளினால் கண்டிப்பாக மாசடைந்தே தீரும். மற்றும் கிருமி நாசினிகள், சலவைப்பவுடர், வாசனைத் திரவியங்கள், நுரைக்கும் ஷம்பூ வகைகள் யாவுமே மண்ணையும், நீரையும், உடலையும் மாசுபடுத்தியே தீரும். இவற்றைக் கொஞ்சம் சிந்திப்போமாக இருப்பின் வீடு சந்தோசமாகும். நம் முன்னோர்களால் சூழல் பாதுகாக்கப்பட்ட கார ணத்தால் நாம் வாழும் மண்ணில் புண்ணியம் பூத்தது. அதற்கு என்னபுண்ணியம் செய்தோம்?

"கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி"

இந்தப் புண்ணியவான்கள் இருக்கும்வரை இந்த மண்ணில் புண்ணியம் விளைந்து கொண்டேயிருக்கும்.

**வில்**

கொக்குவில், கோண்டாவில், இணுவில், நந்தாவில், உடுவில், மட்டு வில், சுருவில், தீருவில், பொத்துவில், கெருடாவில் யாவற்றிற்கும் தலைமையேற்று நிற்பது கொக்குவிலாகும்.

**நாட்டியம்**

இலங்கையில் பரதநாட்டியத்திற்கு ஒரு கலைக்கோயிலாகத் திகழ்கிறது கொக்குவில். திருமதி சாந்தினி சிவனேசனின் அற்புத நடனாலயம் தந்தையார் ஏரம்பு சுப்பையாவின் பயிற் சிக் கூடத்திலிருந்து இன்று வானோங்க வளர்ந்துள்ளது. அங்கு பயின்று கொண்டிருக்கும் மாணவமாணவிகளால், கொக்குவில் மணியர்பதி மாணவிகளால் கொக்குவில் மணி யர்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய தேவஸ்தான் கும்பாபிசேக தினத்திற்கு முதல் நாளில் நாட்டியார்ப்பணம் சிறப்புற அரங் கேற்றப்பட்டது. கைவழி கண்ணும், கண்வழி கருத்தும், கருத்துவழி ரசமும், கால்வழி தாளமும், சொல்வழி ராகமும் சென்று சுவைசொட்டியதாய் முருகனுக்கான பீடத்தில் திருநடனம் களை கட்டியது. புஸ்பாஞ்சலி தொடக்கம் திருப்புகழ் ஈறாகக் கலியுகவரதனாம் முருகப் பெரு மானின் கண்களைத் திறந்து பார்க்க வைத்து விட்ட நாட்டியாஞ்சலி ஜெயராமனின் வயலின் இசையால் லலிதம் பெற்று, கண்ணதாசனின் மிருதங்க இசையுள் பலிதம் பெற்று, சுகன்யா [illegible] நளினம் கொண்டு சாந்தினியின் [illegible] மனோலயமாகக் குடும்பங் [illegible] தெய்வீகமாயிற்று. இதைப் பார்க்க நாம் என்ன புண்ணியம் செய்தோம்?



கே.எஸ்.சிவஞானராஜா



# ஊர் கூடித் தேரிழுக்க வேரோடியது இசை அர்ச்சனை

இசையாலும், தினையாலும், வரகாலும், குரக்கனாலும், நெல்மணியா லும், நெய்யாலும், பாலாலும்,பாக்களினாலும், பக்தியினாலும், நிறை வடைந்த புண்ணிய பூமியே அளவெட்டியாகும். கொடியேறும் கோவில்களும், படிப்புயரும் கல்விச் சாலைகளும், கவிப்புலத் தமிழ் வயல்களும், பெரும்போக சிறுபோக வயல் நிலங்களும் ஏராளம் தாராளம். இவை யாவும் ஒருங்கு சேர்ந்துதான் ஆலயங்கள். பக்திமழையிலும், அருள்மழையிலும் வரம் தருகின்றன. ஆலயங்களுக்குள்ளும் அற்புதமாகும் பதியே கும்பழாவளை யாகும்.

**கும்பழாவளை**

கடந்த 9ஆம் திகதி வியாழக் கிழமையன்று அளவெட்டிக் கிராம விழாக்கோலம் பூண்டது. அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா அன்று தான் இடம்பெற்றது. அளவெட்டிக் கிராமத்தின் நடுநாயகமாக விளங்குவது கும்பழாவளையாகும். ஆதலால் அளவெட்டி ஊர் முழுவதும் ஒன்று திரண்டு தேர் வடம் பிடித்து பாருக்குள்ளே பக்தியிசையினால் வேரோடிச் சிறந்து நிற்பது என்பது எப்போதுமே அதன் சிறப்பம்சமாகும்.

விநாயகப் பெருமான் தேரிலே ஏறி அசைந்திட, மாமரச் சோலையின் கீழே அழ கான மேடையில், திருமுறை இசை அர்ச்சனை பக்கவாத்திய சகிதம் அரங்கேறி யது. முழுக்க முழுக்க அளவெட்டிக் கலைஞர்களாலேயே இசைக்கப்பட்டது. அளவை இசைக்கலை மன்ற ஸ்தாபகர் சங்கீத பூஷணம் வி.கே.நடராஜாவினா லும், அவர்களது சீடர்களினாலும் மிளிர்வுற்ற பண்ணிசை யானது, தெய்வீக அரங்காக யாவராலும் போற்றப்பட்டது. இசையோடு இறைவனும் மகிழ்ந்த காட் சியை அளவெட்டியில் அடியார்கள் அனுபவித்தனர். பண்ணும் பதமும், ஓசை ஒலியும், குழலும் யாழும், குரலும் விரலும், தொண்டும் தொழும்பும் இறைவனுக்கு மிகவும் விருப்பமான உபகாரங்களாகும். எனவே இறைவனுக்கு இசையும் பக்தி யும், குரலும், விரலும் இன்றியமையாத நிலையில், உரை அவசியமற்றது என் பதை நிரூபித்த இசை நிகழ்ச்சி இதுவாகும். பலே அது அற்புதக் கீர்த்தி.

**தொண்டர் சபை**


மயில்வாகன உபாத்தியாயர், செல்லையா உபாத்தியாயர், ஆர்மோனியக் கலை ஞர் சிவஞானம், விசுவநாத உபாத்தியாயர், வி.கே.நடராஜா, அருட்கவி, விநாசித் தம்பி ஐயா, தா.பொன்னம்பலம் ஆகியோரால் வழங்கப்பட்ட பண்ணிசைப் பாரம் பரியக் கடாட்சமே, பின்னாளில் கிணற்றடி மடத்திலும், மண்டபத்திலும், தொண்டர் சபைக் காரியாலயத்திலும் ஆச்சரியமாகி, தற்போது தேர் முட்டிக்கு முன்பாக, குயில் பாடும் மாமரச்சோலையில் மேடை அமைக்கப்பட்டு,நன்கு விளங்கும் ஒலியமைப் புடனே, தொண்டர் சபையினரால் சீராகவும் நேர்த்தியாகவும் அரங்கேற்றப்பட்டு வருகிறது. பண்ணிசை நிகழ்வு கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு மேலாக தேரோட்டத்தின் போது நடைபெற்று வருகிறது. றொலெக்ஸ் ஒலியமைப்பினரால் பண்ணிசை நிகழ்ச்சி அளவெட்டி மண்ணில் பதிவு செய்யப்பட்ட வரலாறு 1965ஆம் ஆண்டுகளில் பதிவாகியுள்ளது. காரணம் அருணோதயக் கல் லூரியில் இருந்து பண்ணிசைக் குழு தேருக்குப் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தக் கைங்கரியத்தைத் தொடர்ந்து தொண்டர்சபை இன்றுவரை நடத்திவருகிறது. இது பாராட்டுதற்குரியது, சபாஷ்.

**பண்ணிசை**

சங்கீத பூஷணம் விஸ்வநாதன் சிவஞானசேகரம் பண்ணிசையை ஆரம்பிக்க சங்கீதபூஷணம் வி.கே.நடராஜா நிறைவுசெய்து கும்பழா வளை மண்ணுக்கு வரமூட்டினார்கள். இவருக்கும் இடையில் பத்துக் கலைஞர்கள் ஆண்களும் பெண்களுமாகப் பாடி இனிமையை பரவசமாக்கினார்கள். அணிசெய் கலைஞர்களாக வயலின் இசையை பத்மநாதன் சியாம்சுந்தரும், மிருதங்கம் கடம், கெஞ்சிரா இசையை கலைஞர்களான செந்தூரன், ஞான வேல், அரன்ராஜ் மூவரும் வழங்கியிருந்தனர். ஒரு இசை விழா நடந்தது போன்ற மகிழ்வுடனும், திருவருளுடனும், தெளிவுடனும் அளவெட்டி மண்ணில் கும்பழா வளையான் கருணையால் இசை அர்ச்சனை மண்ணில் வேரோடியது. அந்தணச் சிவாச்சாரியார்களின் மந்திர வேதத்தால் அருள்மழை மண்ணை ஈரமாக்கியது. ஆம் அந்தணர்கள் அறவோ ரேதான் அருமை.



சிவ.பரமேஸ்வரி



# விடுதலை காண்பதில் அசைவுறும் இலக்கியப் பெண்களும் இலக்கியத்தில் பெண்களும்

*"பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்*
*புவி பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக்குள்ளே சில மூடர்*
*நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்'* எனப் பெண்ணுக்காகாப் பரிந்து பேசிய பாரதி, பெண்ணை ரௌத்திரம் பழகச் சொன்னான். பின்னாட்களில் வந்த புரட்சியாளன் பிரபாகரன் பெண்ணுக்கு ரௌத்திரத்தைக் கற்றுக்கொடுத்தான். ஆனாலும் இன்றுவரையிலும் பெண்களால் அவர்களைச்சுற்றி இடப்பட்டிருக்கும் கட்டுக்களை அறுத்துக்கொண்டு வெளிவரமுடியவில்லை.


பண்டைய காலங்களிலும், இந்த நூற்றாண்டிலும் சமூகத்துடன் ஒன்றித்திருக்கும் பெண்களும், தம்மைப் பிரபல்யப்படுத்தும் பெண்களுமாகத் தமது கட்டுக்களைத் தாம் அறுத்துவிட்டோம் என பாவனை செய்துகொண்டும், நடித்துக்கொண்டும் இருக்கின்றனர். அவை தாண்டிதமது கட்டுக்களை இறுக்கிக்கொண்டுள்ளனர் என்பதுதான் உண்மையும் யதார்த்தமும்கூட. இலக்கியத்திலும் அந்தக்காலம் தொட்டு இந்தக்காலம் வரையில் இயங்கிக்கொண்டிருக்கும் பெண்களும்கூட தமது படைப்புக்களில் பெண்ணியம் பற்றி ஒப்புக்குப் பேசினாலும் அந்தப் படைப்புக்களில் அதிகளவான ஆற்றாமைகளும், இயலாமைகளும்தான் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. புரட்சிப்பெண்களாகவும் படைப்பாளிகளாகவும்கூட இரு பரிமாணங்களில் தடம் பதிக்கும் சாதாரண பெண்படைப்பாளிகளது எழுத்துக்கள்கூட அதிகம் இவைபற்றியே பேசியுள்ளன. அதிலும் ஒப்புக்கு தாம் ரௌத்திரம் பழகிவிட்டதாகவும் கட்டுக்களிலிருந்து விடுபட்டுவிட்டதாகவும் சொல்கிறார்கள்.

*"எனக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள் பராமரிப்பதற்கு...*
*துணிகள் இருக்கின்றன தைப்பதற்கு...*
*தரை கிடக்கிறது துடைப்பதற்கு...*
*தோட்டம் அழைக்கிறது குப்பைகளை அகற்ற...*
*உடைகள் காத்திருக்கின்றன இஸ்திரி போட...*
*என்மேல் மிளிர்வாய் பிரகாச சூரியனே...!*
*என்மேல் விழுவாய் மென்மையின் பனித்துளியே...!*
*என்னை உன் வெண்குளிர் முத்தங்களால் மூடு!*
*இன்றிரவு மட்டும் என்னை ஓய்வெடுக்க விடு..."*

இது ஆபிரிக்க, அமெரிக்கப் பெண் கவிஞர் மாயா ஏஞ்சலோவின் கவிதை. என்னதான் உலகம் சமநிலை பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும் பெண்களின் உலகம் இருள்மைகளிலிருந்து இன்னும் விடுதலை பெறுதல் என்பது சாத்தியமற்றதாகவே இருக்கிறது.

**பாரதியின் புதுமைப் பெண்கள்**

பாரதியின் புதுமைப்பெண்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களைத் தேடிப்பிடிப்பதில்தான் நாம் சோர்ந்துவிடுகிறோம். பெண் என்பவளை எல்லாவகையிலும் தனக்குள் புதைத்துவைக்கவே ஆண் உலகம் முற்படுகிறது. அதிகாரத்தைக் கையிலெடுத்தும் அது முடியாது போகும் பட்சத்தில், அவளைக் கொண்டாடியோ, புகழ்ந்தோ, பெருமைப்படுத்தியோ கொள்கிறது. அவையும் முடியாத பட்சத்தில் அவளை இழிவுபடுத்தியோ, ஏதோவொருவகையில் தன்வரம்புக்குள் கட்டுப்படுத்திவிடவோ முனைகின்றது. பூமி என்பதும், தெய்வம் என்பதும், கண்ணகி, அழகி, தேவதை என்பதும், பொறுமை என்பதும் அவற்றின் மாதிரிகள்தான். திமிறித் தடையுடைக்கும் சில பெண் படைப்பாளிகளது உணர்வுகள் தளும்பி வெளிவரும்போது காதல், வெட்கம், காமம், என்பவற்றுக்குள் தமது படைப்புக்களை அடக்கிவிடுகின்றனர். தடைக்கோடுகளைத் தாண்ட முழுதாக அவர்கள் ஒருபோதும் முயல்வதில்லை. ஆணைக் கொண்டாடிய ஆண்டாள் படைப்புக்களிலிருந்து விடுபட்டு சமகாலப் பெண்கள் தமது விடுவிப்பைத் தமது படைப்புவழியே சொன்னாலும் (சிவரமணி, ஆழியாள், வானதி, பஹீமா, அழகுநிலா, மலைமகள், பெண்ணியா, இன்னும்பலர்) எவ்வளவுதூரம் அவர்கள் தமது பயணத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள் என்பதையும் நோக்கவேண்டியிருக்கிறது.



> பாரதியின் புதுமைப்பெண்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களைத் தேடிப்பிடிப்பதில்தான் நாம் சோர்ந்துவிடுகிறோம். பெண் என்பவளை எல்லாவகையிலும் தனக்குள் புதைத்து வைக்கவே ஆண் உலகம் முற்படுகிறது.

**அழகுநிலாவின் கவிதைகளில்**

*உங்களுக்குப் புரியாது*
*என்னை புரியவும் வேண்டாம்...*
*நான்...*
*என் ஓவியம்...*
*என் பேச்சு...*
*மௌனம், எதுவும்*
*புரிந்துகொண்டு*
*என்ன செய்யப் போகிறீர்கள்...*
*போய்ப்பாருங்கள்*
*அவரவர் வேலையை...!*

என ஆத்திரப்படும், ஏளனப்படுத்தும் அல்லது அலட்சியப்படுத்தும் அவர், தன்னுடைய மற்றுமொரு கவிதையில்,

*"இறுகச் சாத்திய பிறகும்*
*கண்களுக்குத்*
*துணையாய்*
*இரவெல்லாமும்*
*கசிந்துகொண்டே இருக்கிறது*
*என் சமையலறைத்*
*தண்ணீர்க் குழாய்"*

எனத் தன்னுடைய இயலாமை பற்றியும் பேசுகிறார். பாரதியால் கற்பனை செய்யப்பட்ட பெண்களும் சரி புரட்சியாளன் பிரபாகரனால் மாற்றங்கொள்ளப்பட்ட விடுதலைப்பெண்களும் சரி தமது கட்டுக்களை அறுத்துவிட்டோம் என்று வெறும் கற்பனை செய்கிறார்களேயன்றி நிஜமாக அவற்றை அறுக்கவும் இல்லை(ஒன்றிரண்டுபேரை விதிவில க்காக்கலாம்) அறுப்பதற்கு அவர்கள் விரும்ப வும் இல்லை. இலக்கியத்திலும் சரி இயல்புவாழ்க்கையிலும் சரி தமது கட்டுக்களை அறுப்பதற்கு அதிகமாகவே யோசனை செய்கிறார்கள். தயங்குகின்றார்கள். பெண்ணியாவின் கவிதை சொல்வதுபோலவே

*"படுக்கைவிரிப்பைச் சரி, செய்வதையும்,*
*புதிய சமையலைக் கண்டுபிடிப்பதையும்விட*
*இந்த உலகம் விரிவதே இல்லை"*

என்பதுதான் அவர்களது அன்றாடமாக தென்படுகிறது. இது அவர்களது அதிகபட்ச கோபத்தின் தொனியாக இருக்கிறது. சமீபத்திய மணிரத்தினம் இயக்கி வெளிப்படுத்திய 'காற்றுவெளி' சினிமாவின் நாயகி போல ஆண் உலகத்தைக் காலங்காலமாகச் சமாளித்து வருகிறது இந்தப் பெண்ணுலகம். இலக்கியப் பெண்களும் சரி, இலக்கியத்தில் பெண்களும் சரி பெரியளவில் கட்டுக்களை உடைத்தனர் எனத் தெரியவில்லை. அதற்காக நகர்வதாகவும் தெரியவில்லை. அதற்கான சூழலும் பரப்பும் அவர்களுக்காக எப்போதும் பரந்து விரிந்திருத்தும் கூட அமைதியுற்றிருக்கின்றனர். ஆக விடுதலை ஆதல் என்பது எப்போது....?



# பழந்தமிழ் இலக்கியத்தில்

# ஊழ்



■ எஸ்.மல்லிகா

சங்க இலக்கியங்கள் விதியைக் குறிப்பதற்குப் பால் எனும் சொல்லைப் பயன்படுத்தியிருந்தமையை நிறைய இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. வினை, தலைவிதி, விதி என்று இன்று சுட்டப்படுவதற்கு இணையான சொற்களாக பால், முறை, ஊழ் எனும் சொற்கள் பண்டைத் தமிழரிடம் வழக்கில் இருந்திருக்கின்றன. விதியைக் குறிக்கும் பொருளில்வரும்பால்எனும்சொல் காதலைக்கூட்டுவித்தலுக்குத்துணையாக நின்றுள்ளது எனும் கருத்தை மையப்படுத்தும் சங்க அகப்பாடல் ஒன்று காணப்படுகிறது.

ஒரு செயல் மனிதர்களின் துணையின்றி வெற்றியடையும் என்றால், அந்த வெற்றிக்குப்பால்துணை நின்றதாக ஒரு நம்பிக்கை சங்ககால மக்களிடம் இருந்துள்ளது. இவ்வாறு நன்மை செய்த பாலை ச... காலமக்கள் உயர்த்திப் பேசினர். இங்கு தலைவனையும் தலைவியையும் இணைத்து வைத்தபால்நல்லஇயல்பினைஉடையது என்று போற்றப்படுகிறது.


இவன்இவள்ஐம்பால்பற்றவும்இவள்இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறு செரு உறுப மன்னோ
நல்லை மன்றம்ம பாலே மெல்லியல்
துணை மலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் காட்டி இயற்கை காட்டியோயே

(குறுந்தொகை)

தலைவனும் தலைவியும் உடன் போக்கு மேற்கொண்டு பாலை நிலத்தின் வழியே சென்றபொழுது. இவர்களை முன்பு அறிந்தவர்கள் கண்டு தம்முன்னே கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. சிறு வயதில்மனவேறுபாடுகொண்டுஇருந்தவர்கள் பருவகாலத்தில் காதலர்களாக ஒன்று கூடிஉடன்போக்குமேற்கொண்டசெயலுக்குக் காரணமாக இருந்தது "நல் ஊழே" என்றுசங்ககாலமக்கள்நினைத்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.

இதேபோன்று மற்றொரு குறுந்தொகைப் பாடலில் (பாடல் இல. 366). "பால்" என்ற சொல் ஊழ்வினை என்ற விதியின் ஆற்றலைக் குறிப்பதாக வந்துள்ளது.

ஒத்தஅன்பினராகியஆடவரும், மகளிரும் நல்லூழின் தூண்டுதலால் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்ட முதற் காட்சியிலேயே உயிரோரன்னசெயிர்தீர்நட்பினராகி உலகத்தார் அறியத் திருமணம் செய்து வாழ்வர் எனப் படுகிறது.



"பால் வரைந்தமைத்தல் அல்லது
அவர்வயின்
சார்பளந் தறிதற்கு யாஅம் யாரோ?
வேறு யான் கூறவும் அமையாள்,
அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி
யவிழ்ந்த
வள் இதழ் நீலம் நோக்கி, உள்
அகைபு
ஒழுகு கண்ணளாகிப்
பழுதன் நம்மவிவ் வாயிழை துணிவே

செவிலியானவள் தோழியிடம், தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் என்ன என்று கேட்ட போது அதற்கு அவள் பதிலுரைப்பதாகஅமைந்தபாடல்இது. ஆழ்ந்த சுனையின் கண்ணே உள்ள நீலப்பூவைப் பறிக்க முயற்சி செய்து முடியாமல் வருந்திய தலைவிக்கு. அவ்வழியே வந்த ஒருவன் அப்பூவைப் பறித்துக் கொடுத்து உதவினான். அந்தப் பூவைப்பறிக்கஉதவியவனையே தனது உள்ளத்தில் நினைத்துத் தலைவி உடல் வேறுபாடு அடைந்தாள்என்றுதோழிசெவிலியிடம் கூறுகிறாள்.

இங்கு தற்செயலாக நடந்த நிகழ்ச்சி, ஊழின் துணையால் தான் நடந்தது என்று பொருள் கூறப்படுகிறது. தலைவன் தலைவிஇயற்கையாகச்சந்திப்பதற்குத் துணை நிற்பது "பால்" எனும் ஊழ்வினையே எனச் சங்ககால மக்கள் நம்பினர்.

ஒத்த அன்பினராகிய ஆடவரும் மகளிரும் நல்லூழின் தூண்டுதலால் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்ட முதற் காட்சியிலேயே உயிரோரன்னசெயிர்தீர்நட்பினராகிஉலகத்தார் அறியத்திருமணம்செய்துவாழ்வர் எனப்படுகிறது.

இதேபோன்று, ஊழ்தலைவிக்குஏற்றதலைவனைக் கொண்டு வந்து காட்டியதாகவும் அதனால் அந்த ஊழை வாழ்த்துவதாகவும் அமைந்தபாடல்ஐங்குறுநூற்றில்காணப்படுகிறது.

"அன்னை வாழி! வேண்டன்னை புன்னை
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
யென்னை என்றும் யாமே, யிவ்வூர்
பிறிதொன்றாகக் கூறு
மாங்கு மாக்குமோ வாழிய, பாலே

ஏற்கனவேகணவனாகமனதில்ஒருவனை வரித்துக்கொண்ட தலைவிக்கு வேறு ஒருவனை மணமுடிக்கஎண்ணினர். புன்னை மரங்களின் பொன்னிறம் திகழுமாறு மலரும் பூக்களை உடைய கடல்துறையினை உடையவனாகிய ஒருவனை நாங்கள் தலைவன் என்று மனதில் எண்ணிவிட்டோம். ஆனால், இவ்வூரில்வாழும்மக்களோ வேறுஒருவனைத்தலைவனாக்கஎண்ணுகின்றனர்.

தலைவிக்குஏற்றதலைவனைக்கொணர்ந்து கூட்டிய ஊழ் வாழ்க. இவ்வூர் மக்கள் கூறுகின்றபடி வேறு ஒருவனைத் தலைவனாக ஆக்கும் ஆற்றல் உடையதன்று இந்த ஊழ் என்று தோழி கூறினாள்.

உள்ளத்தில் ஒருவனை ஏற்றுக்கொண்டு விட்டால், அவனே அவள் தலைவனாவான். அவனை விடுத்து வேறு ஒருவனைக் கணவனாக ஏற்றுக்கொள்வது முறையர்காதுஎன்றுஅக்காலமக்கள்கருதினர். இந்நிலையில், மரபினைக் காப்பதும் ஊழ்தான்என்றுசங்ககாலமக்கள்நம்பினர். தெய்வசக்திஎன்றுஊழைநம்பியஇவர்கள், அத்தகைய ஊழ் தவறு செய்யாது, மனித சக்தி தவறு செய்ய நினைத்தாலும் "பால்" அவ்வாறான தவறைச்செய்யத் தூண்டாது என்ற ஆழமான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர்.

ஒரு நிகழ்ச்சி நடப்பதற்கு முதற்காரண மாகவும் துணைக்காரணமாகவும் ஊழ் செயற்படும் என்ற நம்பிக்கை இக்கால மக்களிடம் ஆழப்பதிந்திருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. (தொடரும்)

# அகவை 80இலும் அம்பாளின் அடியவராக உயர்ந்து நிற்கும் பெருமகன்

■ நாகமணி கோபாலகிருஷ்ணன்

நயினை மண் தந்த செயற்கரிய சேவையாளன் 80 ஆவது அகவையில் அம்பாளின் அடியவனாய் அன்பர் பணி செய்ய அரவணைத்து நிற்கின்றான்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல் என்ற வள்ளுவன் குறளுக்கு உயிர் கொடுத்து மனித உருவில் நடமாடிய சான்றோர்கள் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவர்கள் அச்சான்றோர்கள் வழி வந்து எந்த இடர் வரினும் எடுத்த காரியத்தை என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் அருள் நெறி நின்று அருந்தொண்டாற்றுகின்ற பெரு நெறியாளர்கள் செயற்கரிய தெய்வீக சேவையாளர்கள் வரிசையில் இன்றும் ஏற்றிப் போற்றப் படும் ஒருவராக செயற்கரிய செய்வார் பெரியர் என்று வள்ளுவன் சொன்னவாறு செயற்கரிய சேவையாளனாக அருள் ஒரு நிமிர்ந்து நிற்கின்ற ஆத்மிகத் தொண்டனாக அடியர்களுக்கு அடியவனாக 80 ஆவது அகவையிலும் முதியவன் என்ற மூப்பின் இடரில் அல்லல் படாமல் அம்பாள் அடியவர்களுக்கு செய்கின்ற அருந்தொண்டே தன் தொண்டு என்ற கொள்கையாளனாக இதனை இதனால் இவன் முடிக்கும் என்ற குறளின் உயிர் நாடியாக இன்றும் செயலில் செயற்கரிய சேவையாளன் என்று அடியவர்கள் போற்றுகின்ற ஒரு சைவப் பெரியார் விஸ்வலிங்கம் சபாநாதன்.

**பிறப்பும் கல்வியும்**

விஸ்வலிங்கம் நாகம்மா தம்பதிகளின் முதல்மைந்தனாய் 1937 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி நயினாதீவில் பிறந்தார் ஆரம்பக் கல்வியை நயினாதீவு கணேசாவில் கல்விபயின்று உயர் கல்வியை நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் பயின்று காணி மேற்பார்வை அதிகாரியாக துணுக்காயில் பணியாற்றினார். அந்தக்காலத்தில் சரித்திரம் பெருமைவாய்ந்த 2300 ஆண்டுகளுக்குமுன் வழிபாடு செய்யப்பெற்று வந்த பூர்வீக ஆலயமான வவுனிக்குளச் சிவாலயத்தின் திருப்பணிச் சபையின் ஆட்சி மன்ற உறுப்பினராக இருந்து அந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும் சிவபுரம் என்ற அந்த ஆலயத்தின் மகிமை சிறப்பை தொண்டர் வாழ் சிவபுரம் கண்டிரண்டாயிரம் தொல்லாண்டு புகழ் பெற்றந்நாள் தூய எல்லாளமக ராசபரி வாரமும் தொழுதோம்பு சிவ ஆலயம் என்று நயினை கவிஞர். ஆ.குராமும் பிள்ளை அவர்களைக் கொண்டு ஆசிரிய விருத்தத்தை இயற்றுவித்து அந்த ஆலயத்தின் பூர்வீக வரலாற்றை விளங்கவைத்தார். நயினைக் கவிஞர் அமரர் ஆ.இராமுப்பிள்ளை அவர்களின் ஆசிரிய விருத்தத்தில் 2300 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிவபுரத்துறை சிவனை எல்லாள மன்னனும் அவன் பரிவாரங்களும் வணங்கிச் சென்ற வரலாறு விளக்கப்பட்டுள்ளது. வன்னி மண்ணின் பூர்வீகத் திருத்தலங்களில் வவுனிக்குளம் சிவாலயமும் பெருமை பெறுகின்றது. வி.சபாநாதன் அவர்களின் தெய்வீகத் திருத்தொண்டு அரச பணி ஆற்றிய காலத்தில் வன்னி மண்ணிலும் விரவியுள்ளது.





அல்லிதேவி

# ‘மருத்துவர்களின் மரணம்’
## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

மறைந்த இராஜநாயகி சிதம்பர திருச்செந்திநாதனின் முதலாமாண்டு நினைவாக இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய ‘மருத்துவர்களின் மரணம்’ என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் பிரதியின் வெளியீட்டு விழா இணுவில் மத்திய கல்லூரியில் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.10 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பொ. இராமநாதபிள்ளை நினைவுச்சுடர் ஏற்ற, அமரரின் புதல்விகளான தி. சிதம்பர வானதி, தி. சிதம்பரபாரதி ஆகியோர் திருவுருவப் படத்துக்குப் பூமாலை அணிவித்தார்கள். வரவேற்புரையினை எழுகலை இலக்கியப் பேரவையின் செயலாளர் ந. மயூரரூபன் நிகழ்த்த தலைமை உரையை பேராசிரியர் க. தேவராஜா நிகழ்த்தினார். அவர் தனதுரையில் நூலாசிரியரைப் பற்றிக் குறிப்பிடுகையில்;

“இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் என்னுடைய மாணவன். அமரத்துவம் அடைந்த அவரது மனைவி இராஜநாயகி கலைமுதற் தேர்வு மாணவியாக இருந்த போதே அவரை நன்கறிந்திருந்தேன். அந்தக் காலத்தில் இருந்து சமீப காலம் வரை இருவரையும் அவதானித்துள்ளேன். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்த தம்பதியினர் அவர்கள்” என்றார். யாழ். மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் நூலின் முதற்பிரதியை வெளியிட்டு வைக்க அண்ணா தொழிலகத்தின் தொழிலதிபர் நடராசா திவாகரன் அதனைப் பெற்றுக்கொண்டார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் வ.மகேஸ்வரன் தனது உரையில் “தெய்வத்துக்கு நிகரான மருத்துவர்களில் சிலர் தமது பணியில் இருந்து ஒரு சிறு தவறினைச் செய்தால்கூட அதன் விளைவுகள் பாரதூரமாகி விடும் எனவும், சிதம்பர திருச்செந்திநாதன் எந்தவித குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் நடந்த சம்பவங்களை அப்படியே ‘மருத்துவர்களின் மரணம்’ என்னும் சிறுகதைத் தொகுதியில் எழுதியுள்ளார் எனவும்” குறிப்பிட்டார்.



கருத்துரை வழங்கிய தி. செல்வமனோகரன், ‘மருத்துவர்களின் மரணம் என்னும் தொகுப்பில் உள்ள ‘அட…!’, ‘இத்தால் சகலரும் அறிய வேண்டியது என்னவென்றால்…’, ஆகிய கதைப்பிரதிகள் அரசியல் பற்றிப் பேசுகின்றன இருந்த போதும் இத்தொகுப்பின் முழுமையும் அரசியல் பேசப்படுகிறது” எனக் குறிப்பிட்டார்.

ஹற்றன் நசனல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சி. சுந்தரரேஸ்வரனும் நிகழ்வில் கருத்துரை வழங்கினார்.

‘‘மருத்துவர்களின் மரணம் சிறுகதையினை நான் அவசரப்பட்டு எழுதவில்லை. கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மருத்துவர்கள், துறைசார்ந்த பேராசிரியர்கள் போன்றோருடன் கலந்துரையாடி ஒரு தெளிவு பெற்ற பின்னரே எழுதினேன். இந்த தொகுப்பினுள் யாரையும் நான் குற்றம் சாட்டவில்லை. நடந்தது என்ன என்பதை மாத்திரம் எழுதியுள்ளேன். கதையை அது தரும் அனுபவத்துக்குள் புகுந்து வாசிப்பவர்கள் புரிந்து கொள்வர்.” எனப் பதிலுரை வழங்கினார் நூலாசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.

கலாநிதி கந்தையா சிறிகணேசனின் நன்றியுரையோடு விழா இனிதே நிறைவடைந்தது.





## வீரசிங்கம் பிரதீபனின் ‘வழிபடுத்தும் இந்துமத வழிமுறைகள்’ நூல் வெளியீடு

வீரசிங்கம் பிரதீபனின் தொகுப்பான ‘வழிபடுத்தும் இந்துமத வழிமுறைகள்’ எனும் நூல் வவுனியா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வீரசிங்கம் பிரதீபனின் கன்னி வெளியீடாக இந்த நூல் பிரதியின் அவை வெளிப்பாடானது வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, திடீர் உயிரிழப்பு தொடர்பான விசாரணை அதிகாரியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவாநாதன் கிஷோர் மற்றும் தமிழ் மொழி அகளங்கன், தமிழருவி சிவகுமாரன், மூத்த ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சிறீனிவாசன், மற்றும் தமிழ் விருட்சத்தின் தலைவர் சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன் மற்றும் கல்விமான்கள், கல்வியற்கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்து மதம் காட்டும் கூட்டு முயற்சியும் ஒற்றுமையும், விருந்தோம்பல் பண்பாடு, இந்து மதத்தின் நடை, உடை, பாவனை போன்ற பல விடயங்கள் இந்த நூலில் உள்ளடக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (402)

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 2 |
| 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 5 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 5 | 1 | 9 | 7 | 8 | 6 |
| 3 | 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 3 | 1 | 4 | 7 |
| 9 | 7 | 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 7 | 6 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 8 | 9 | 6 | 4 | 7 | 5 |
| 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | 2 |
| | | | | | | | 1 | 4 |
| 1 | 3 | | | 5 | | | | 7 |
| | | 5 | 6 | | | | | |
| | 6 | | 2 | 9 | 7 | | 4 | |
| | | | | | 3 | 6 | | |
| 9 | | | | 7 | | | 8 | 1 |
| 4 | 8 | | | | | | | |
| 2 | | | 9 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும்.- இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது..

காய்ந்து வறட்சியாக
இருக்கும் நிலத்தில் ஊற்றும்
நீரைப் போல வறுமையில்
இருப்பவனுக்குக்
கிடைக்கும் பணமும்
விரைவில் செலவாகிப்
போகிறது

நான் அப்படி இல்லைன்னு
சொல்லி சொல்லி
தலைகுனியும்
வாழ்க்கையை விட, நான்
அப்படித்தான்னு
சொல்லிட்டு கெத்தா
வாழர வாழ்க்கையை
வாழணும்!

எவ்வளவு அன்போடு
அணைத்தாலும் கத்திக்கு
வெட்டத் தான் தெரியும்.
அதுபோல்தான் சில உறவும்.
எவ்வளவு அன்பாக நாம்
இருந்தாலும் காயப்படுத்தி
விடுவார்கள்.




## முதல் நாளில் பெரிதாகக் கவராத
# பிக் பாஸ்!

கமலகாசன் நடத்தும் பிக் பாஸ் நிகழ்ச்சி முதல் நாளில் பெரிதாகக் கவரவில்லை.

வெளிநாடுகளிலும் ஹிந்தியிலும் இந்த நிகழ்ச்சி முதல் முறையாக தமிழுக்கு வந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சி மூலம் முதல் முறையாக தொலைக்காட்சிக்கு வந்துவிட்டார் கமலகாசன்.

இந்த நிகழ்ச்சியில் 15 பிரபலங்கள் பங்கேற்றாலும், பெரிய அளவில் சொல்லிக் கொள்ளக்கூடிய நடிகரோ, அரசியல் பிரபலமோ இல்லை என்பதால் முதல் நிகழ்ச்சி சப்பென்று ஆகிவிட்டது. நமீதா தவிர வேறு பெரிய நடிகர்கள் எவருமில்லை.

நிகழ்ச்சியை நடத்தும் கமலகாசனும் இதில் பெரிதாக ஆர்வம் காட்டிய மாதிரி தெரியவில்லை. மோசம் என்று விமர்சிக்கும் அளவுக்குதான் முதல் நிகழ்ச்சி இருந்ததாக பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மேலும் நகைச்சுவையாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு கமல் தனது பாணியில் பேசியவை அவரது ரசிகர்களையேகூட ஈர்க்கவில்லை என்பது பொதுவான கருத்து. இனிவரும் நாள்களிலாவது நிகழ்ச்சி சுவாரஸ்யமாக அமையுமா? பார்க்கலாம்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**இடபம்:** மனதில் உற்சாகம் மேலோங்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** அதிகம் பேசுவதை தவிர்ப்பது நன்மை யளிக்கும். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், இலாபத்துக்கு குறைவிருக்காது. வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கடகம்:** மனதில் இருந்த சஞ்சலம் மறையும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். ஆரோக்கியம் பலம் பெறும். பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**சிங்கம்:** திறமையை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராகக் கிடைக்கும். பழைய நண்பர்களைச் சந்திக்க வாய்ப்புண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.

**துலாம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும். உறவினர்களுடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்மறையான சூழலில் இருந்து விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர். வீடு, வாகன வகையில் மராமத்துச் செலவு உண்டாகும்.

**தனுசு:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். வெளியூர் பயணத்தின் போது விழிப்புடன் இருக்கவும்.

**மகரம்:** மனச்சாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். நண்பர் கேட்ட உதவியை செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** உலக நடப்பு அறிவதில் ஆர்வம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ அருளால், நன்மை மேலோங்கும். தொழில். வியாபாரத்தில் ஆதாயம் கூடும். கூடுதல் சொத்து வாங்க திட்டமிடுவீர்கள்.


**மீனம்:** குடும்பத்தினரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். ஆரோக்கியம் பலம் பெறும்.

"நைட்டு தூங்குறதுக்கு முன்னாடி புக் படிச்சா நல்லா தூக்கம் வரும்னு சொல்லி இருக்காங்க..."
"என்ன புக்கு?"




"பேஸ்புக்..."

கணவன்: அம்மாவுக்கு உடம்பு முடியலையாம். பணம் அனுப்ப சொல்லி போன் பண்ணியிருக்காங்க...
மனைவி: கஞ்சி காச்சி குடிக்க சொல்லுங்க எல்லாம் சரியாகிடும்...



கணவன்: இந்த நீயே உன் அம்மாகிட்ட சொல்லிடு...

இப்பெல்லாம் நீ ரொம்ப மாறிட்ட என்பதன் அர்த்தம்...



நீ முதல் மாதிரி இளிச்சவாயா இல்லயே... என்பதுதான்...

## தவறிவிட்டது

பாலமனோகரி (சண்டிலிப்பாய்) என்பவருடைய அனுமதிப்பத்திரம் கல்வியங்காட்டுக்கும் செம்மணிசுடலைக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. இதை கண்டெடுத்தவர்கள்.

**021205 4236, 077 887 0608**

## விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் கணினி அனுபவமுள்ள பில் கிளார்க் (கணினியில் பில் போடுபவர்) ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு,

**077 526 9182, 021 222 5464**

## CANADA , USA study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 0777 493 436
Office : 0113 020 892

## புதிதாக அமைக்கப்பட்ட காக்கைதீவுப் பொதுச்சந்தை குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2017
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட காக்கைதீவுப் பொதுச் சந்தை யானது 2017.07.15 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 11/07/2017 பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 12/07/2017 பி.ப 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 12/07/2017 பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலி தென்மேற்கு பிரதேச சபை. தலைமைஅலுவலகம்

| இல | சந்தை விவரம் | மீளளிக்கப்படாத மீள்கேள்விப்பத்திரப் பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் மீள்கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர |
|---|---|---|---|---|
| 01 | புதிதாக அமைக்கப்பட்ட காக்கைதீவு பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 460,950.00 |

சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை ஏழு நாட்களுக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2017.06.08 ஆம் திகதிய உதயன் பத்திரிகை யில் 9 ஆம் பக்கத்திலும். தினக்குரல் பத்திரிகையில் 11 ஆம் பக்கத்திலும் மற்றும் தலைமை அலுவலகம். ஆனைக்கோட்டை உபஅலுவலகம் என்பனவற்றில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.கு.சற்குணராசா,**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்**
**28.06.2017**

## திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைமாணிப் பட்டப் படிப்பு (வெளிவாரி)
## அரையாண்டு அடிப்படை 2013/2014

மேற்படி கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பாடத்திட்டத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல், பதிவுசெய்தல் மற்றும் அறிமுகநிகழ்வுகள் கீழ்வரும் ஒழுங்குகளின் பிரகாரம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| விடயம் | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| பாடத்திட்டத் தெரிவுதொடர் பானகலந்துரையாடல் | யூலைமாதம் 01ம் மற்றும் 02ம்திகதி | 8.30 | கைலாசபதிகலையரங்கம். யாழ் பல்கலைக்கழகம் |
| பதிவுசெய்தல் | யூலைமாதம் 03.04.10.11.12.13.மற்றும் 14திகதி | 9.00 - 2.00 | திறந்தமற்றும் தொலைக் கல்விநிலையம் |
| அறிமுகநிகழ்வு | யூலைமாதம் 15ம் மற்றும் 16ம் திகதி | 8.40 | கைலாசபதிகலையரங்கம் யாழ் பல்கலைக்கழகம் |

தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையிலுள்ள வழங்கப்பட்ட தகவல்களின் மேலதிக விபரங்களும் இணையத்தளத்திலும் (www.codl.jfn.ac.lk) மற்றும் முகப்புத்தகப்பக்கத்திலும் (www.facebook.com/uoj.codl) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மேற்படி இணைய முகவரிகளில் வழங்கப்பட்ட மேலதிக தகவல்களின் அடிப்படையில் நிகழ்வுகளில் பங்குபற்றிக் கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
27.06.2017

## புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

**DIPLOMA IN ENGLISH (6 MONTHS )**



16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சிறந்த பாடநெறி (பல்கலைக்கழகத்திற்கு தெரிவான / பல்கலைக்கழக / உயர் கல்வி மாணவர்கள் / வெளிநாடு செல்ல இருப்போர் / அலுவலர்கள்)

**ஆரம்பம் : 01.07.2017**

சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மதியம் 12.30 - 3.00 மணி வரை இந்தப் பாடநெறி இடம்பெறும்.

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**

இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

**Tel : 0212217106 / 0770610271 / 0773400418 / 0774924166**


photography.sai1

கோலாகலமான
திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் ஆனி மாதம்,
16 ஆம் நாள் (30.06.2017), வெள்ளிக்கிழமை
காலை 9.18 - 10.20 வரையான சுபவேளையில் திறக்கப்படவுள்ளது.


**SAI PHOTOGRAPHY**



இங்கனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

**SAI PHOTOGRAPHY**
*The Signature of Happiness*
**WEDDING - BIRTHDAY - PORTRAIT - COMMERCIAL - FASHION**
1010/20, K.K.S Road, Naachimar Kovil, Jaffna, Sri Lanka
www.saiphotography.lk 0773031068 / 0772263864

## மரண அறிவித்தல்



### சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் நேற்று (27.06.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி கல்யாணி சுதர்சன் (கனடா), திருமதி அமிர்தவர்ஷினி உதயகரன் (நோர்வே), திருமதி பாலினி கண்ணதாஸ் (ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் தே. சுதர்சன் (கனடா), பொ. உதயகரன் ( நோர்வே), க.கண்ணதாஸ் (விரிவுரையாளர் இசைத்துறை யாழ். பல்கலைக் கழகம்), சண்முகலிங்கம், திருமதி ஜானகி நாகேந்திரன் (சுவீடன்), சாவித்திரி (ஓய்வு பெற்ற தாதி), வைத்தியகலாநிதி செல்வி கௌரி செல்வரட்ணம் (வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புமாமனாரும் திருமதி இன்பராணி செல்வராசா, திருமதி ஸ்ரீகாந்தி ஆகியோரின் சிறியதந்தையும் க. நாகராசா (நோர்வே) காலஞ்சென்ற க. நாகேந்திரன் (சுவீடன்) மற்றும் க. நவரட்ணம் (லண்டன்), க. நாகேந்திரதாஸ் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சு.துர்க்கா, சு.தீபிகா, உ.கீர்த்தனா, உ.சாகித்தியா, க. இசை நிலவன், க.சுடரோன், க. தமிழ்வேந்தன், ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ் சென்றவர்களான ச. துரையப்பா ச. தம்பித்துரை ச. நடேசர், கணேசர் ச.அம்பாலிகா மற்றும் அம்பிகா, இராதாதேவி (ஓய்வு பெற்ற இசையாசிரியை) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2017) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லமான 203, புங்கன்குளம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள ஏழிசையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**203, புங்கன்குளம் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**க.கண்ணதாஸ் ( மருமகன்)**

## தேவை

இணுவிலில் பிரபல்யமான புடைவைக் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

**021 300 1155, 077 470 5401**

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

இலங்கையின் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிம் அட்டை விற்பனைக்காக விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. O/L தகைமை போதுமானது. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் பெறும்வாய்ப்பு.

**078 5000 580, 078 500 5796**

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு றோல் மேக்கர், ரொட்டி மேக்கர் உடன் தேவை!

தொடர்பு- **075 895 9976**

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T/O) தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பயிலுநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்பு - 076 316 5731
076 316 5730

**E-mail - deconkiri@gmail.com**

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு Bill கிளாக் உதவியாள்கள் உடன் தேவை. உணவு தங்குமிடம் இலவசம்.

**077 3866250**

## வேலையாள் தேவை

செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் இடத்திற்கு ஆண் வேலையாள் தேவை.

- 30 வயதிற்கு உட்பட்ட ஆள் தேவை.
- ஆரம்பசம்பளம் 25,000/= - 30,000/= வரை
- தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு - 021 221 7600

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் நகர பகுதியில் கந்த றோடை வீதியில் ஒரு பரப்பு ஆறு குளி காணி விற்பனைக்கு. தொடர்பு - 077 067 3759


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும்

தோற்றம்
24.11.1930

மறைவு
29.05.2017

அமரர்

### அகஸ்தீன் அருளப்பு




எமது அன்புத்தந்தை 29.05.2017 திங்கட்கிழமையன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் சேர்ந்தார். இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக 28.06.2017 மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெறும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உடனிருந்து உதவிகள் செய்தவர்களுக்கும் தொலைபேசி மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

35/2, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை அரசரட்ணம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - றோயல் கல்லூரி)**

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் தற்போது நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அரசரட்ணம் நேற்று (27.06.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைராசா - அழகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்தியேந்திரன் (நியூசிலாந்து), நிர்மலேந்திரன், இந்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாணி (நியூசிலாந்து), குகலியா, ராஜன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அமிர்தம்மா மற்றும் பேராசிரியர் வே.தர்மரட்ணம் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரரும், கதிரவேலு, கனகேஸ்வரி தர்மரட்ணம், காலஞ் சென்ற துரைராஜா துரைசிங்கம் மற்றும் ராஜபாக்கியம் மகாதேவா (நியூசிலாந்து), ராஜமலர் இராஜலிங்கம் (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும், கீதாஞ்சலி கதிர்காமலிங்கம், சிவசங்கரி கதிர்காமலிங்கம், அபிராமி சத்தியேந்திரன், சிவகாமி சத்தியேந்திரன், மீரா நிர்மலேந்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 30.06.2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5 மணிவரை வைக்கப்பட்டு 01.07.2017 சனிக்கிழமை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ...க்கொள்ளவும்.

**...ராஜேஸ்வரி அரசரட்ணம்**
**...0064 952 86602 (நியூசிலாந்து)**
**... ம்மாள் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**SRT.... முகநாதன் (மைத்துனர்)**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
30 . 03 . 1949



மறைவு
16 . 05 . 2017

### அமரர் செல்வி தேவிசரஸ்வதி சுப்பிரமணியம்

**(ஆசிரியர்)**

*அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் 01.07.2017 சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

***சிறுப்பிட்டி மத்தி, சிறுப்பிட்டி.***
***2120558874 , 076 765 6483***

***குடும்பத்தினர்.***

# பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில்

### மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பம்பிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றன.

இதன்பிரகாரம் நடப்பாண்டில் நிரந்தர பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில் உள்ளதான தகவல் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி யால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 2017ஆம் ஆண்டுக்கான நாணய மாற்றம் மற்றும் நிதியியல் துறை கொள்கைகள் உள்ளடங்கிய தான "2017 வழிகாட்டல்" திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவொன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்வுள்ளது. 2017 ஆம் ஆண்டு பன்னாட்டு மற்றும் உள்ளூர் முதலீடுகளை மேற்கொள்ளவும் அவற்றை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

அந்தவகையிலே இந்த வருடத்தில் நாம் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேணவுள்ளதுடன் 5.5 முதல் 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மற்றும் உலக பொருளாதார நிலைமைகள் காரணமாக வளர்ச்சி வீதத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு ஏப்ரல் மாத உற்பத்தியில் 1.8 வீதமாகப் பதிவு

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடானது 1.8 வீதத்தால் அதிகரித்துள்ளதாக வலை தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாத உற்பத்திகளில் தளபாடங்கள் 27.8 வீதமாகவும், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருள்களின் உற்பத்திகள் 10.4 வீதமாகவும் மற்றும் ஆடை அணிகலன்கள் 10.2 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. உணவு உற்பத்தியானது ஏப்ரல் மாதத்தில் 0.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதேவேளை மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள் 22.3 வீதமாகவும், இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் 9.8 வீதமாகவும் மற்றும் புகையிலை உற்பத்திகள் 8.6 வீதமாகவும் வீழ்ச்சி யைப் பதிவிட்டுள்ளன.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)

| மாதம், வருடம் | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஏப்ரல் - 2016 | 97.0 |
| ஏப்ரல் - 2017 | 98.7 |
| வருடத்தின் வருட மாற்றம் (%) | 1.8 |

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது.

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் வெளிப்படுத்தும் வருடத்தின் மீதான மாற்றங்கள்

2016 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களினதும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களினதும் ஒப்பிடு பல வெளிப்படுத்தல்களைத் தந்துள்ளது.

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின் மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஒகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் பதிவாகிய 121.0 என்ற மாற்றமானது மே மாதத்தில் 121.8 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன்பின்பான மே மாதத்தில் 0.8 சுட்டெண் புள்ளி அல்லது 0.7 சதவீத அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது. உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.43 வீதத்தாலும் மற்றும் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.21 வீதத்தாலும் அதிகரித்துள்ள தன்மைகளே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான காரணங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நடப்பாண்டுக்கான கடன் விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன

### தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு நடவடிக்கை




தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு 2017 ஆம் ஆண்டுக் குரித்தான நிதித் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை பெறுவதற்கான விலை மனுவை கோரியுள்ளதென்பதான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2017 ஆம் ஆண்டுக் குரித்தான திட்டமிடப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மேற்படி ஒரு பில்லியன் அமெரிக்கடொலர்கடன்தொகையை பயன்படுத்த எண்ணியுள்ள தகவலை தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

அபிவிருத்தி திட்டங்களுக்காக 300 தொடக்கம் ஆயிரம் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை அமைச்சரவை ஏற்கனவே வழங்கியுள்ளமை நோக்கத்தக்கது.

மேலும் உள்நாட்டு வங்கிகள், சர்வதேச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பன தற்போது விலைமனுவை முன்வைத்துள்ளதாக அமைச்சின் கீழான வெளிநாட்டு வளத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கடனை செலுத்துவதற்கான கால வரையறை என்பது மூன்று வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நிலையான வட்டி வீதத்தின் குறிகாட்டியானது லண்டன் சர்வதேச வங்கி வட்டி வீதம் மற்றும் தளம்பல் வட்டி வீதத்தில் விலை மனுவை முன்வைப்பதாக அமையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

union assurance

# துல்லியமான அறிக்கையிடலுக்கு கௌரவம்

### யூனியன் அசூரன்ஸ் வெண்கல விருதை பெற்றுக்கொண்டது

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற சிறந்த நிதி அறிக்கைகளுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் நிதியியல் மற்றும் நிதியியல் சாராத அறிக்கையிடலுக்கான கௌரவிப்புகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.


அந்தவகையிலே நிதி அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருந்த 2016/17 நிதியாண்டுக்குரித்தான நிதி அறிக்கை விருது வழங்கலில் காப்புறுதித்துறை சார்ந்து துல்லியமான அறிக்கையிடலுக்கான கௌரவிப்பாக யூனியன் அசூரன்ஸ் வெண்கல விருதினை பெற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள யூனியன் அசூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் நிதி மற்றும் திட்டமிடலுக்கான பொது முகாமையாளர் ஷெரின் காதர்,

"சிறந்த நிதி அறிக்கைகளுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் நாம் தொடர்ச்சியாக பேணி வரும் வெளிப்படைத்தன்மை, சிறந்த மேலாண்மை மற்றும் சிறப்புத்தன்மைக்காக கௌரவிப்பைப் பெற்றுள்ளோம். நிறுவனத்தின் நம்பிக்கை எனும் உறுதிமொழிக்கமைய முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் பெறுபேறுக்குக் கிடைத்த விருதாக இது அமைந்துள்ளது. இந்த விருதை எமது சகல பங்காளர்களுக்கும் உரித்தானதாக்க தீர்மானித்துள்ளோம்" என்றார்

# அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் தொடர்பில் மீளாய்வு

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயங்களை மேற்கொள்வது குறித்தான மீளாய்வுகளை மீண்டும் செய்யவுள்ளதான தகவல் தரலை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.



இதன்படி அரிசி தொடர்பிலான பன்னாட்டு மற்றும் தேசிய மட்டத்திலான விசேட மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தவிர, மேற்படி மீளாய்வுச் செயன்முறைகளின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அரிசிக்காக வழங்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் சிந்தக லொகுஹெட்டி சுட்டிக்காட்டியுள்ளார்.


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

27/6/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -12.15 | 6,703.18 | 6,715.33 |
| S&P SL20 | -5.31 | 3,909.99 | 3,915.30 |
| வியாபாரப்புரள்வு | | 1,754,753,790 | 2,686,024,450 |
| உள்நாடு: கொள்வனவு | | 473,439,328 | 375,174,016 |
| விற்பனை | | 868,825,790 | 632,847,680 |
| வெளிநாடு: கொள்வனவு | | 1,281,314,560 | 2,310,850,560 |
| விற்பனை | | 885,928,060 | 2,053,176,830 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 76.00 | 11,119,471 | 802,162,951 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 179.00 | 1,607,222 | 286,652,362 |
| டோக்கியோ சிமேன் | TKYO.X | 68.50 | 3,449,277 | 234,674,249 |
| சிலோன் ஹோல் ஸ்ரோஸ் | CCS.N | 842.30 | 66,247 | 56,300,452 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி - | COMB.X | 107.50 | 455,048 | 49,136,205 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி - | COMB.N | 139.40 | 244,459 | 34,075,975 |
| டயலொக் | DIAL.N | 11.70 | 2,177,955 | 25,908,286 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 240.00 | 88,226 | 21,477,504 |
| சம்பத் வங்கி | SAMP.N | 286.00 | 71,023 | 20,311,383 |
| ரெக்ஸ்போ பெர்ஷீ | TJL.N | 41.10 | 405,957 | 16,653,976 |

- பங்குலாபம் -

சதோசா மேட்டார் - ரூபா 5:00
சிஐசி ஹோல்டிங்ஸ் - ரூபா. 1:00
சிலோன் காடியன் இன்வெஸ்மென் - ரூபா. 4:00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 245 |
| விலை உழைப்பு | 11.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

## கருணாநிதி...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனும் ஊடக அறிக்கை ஒன்றை நேற்றுக் காலை அனுப்பி வைத்துள்ளார்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமது கட்சிக்குரிய அமைச்சுப் பதவியை இ.ஆனோல்ட்டுக்கு வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு நேற்று முன்தினம் கடிதம் அனுப்பியிருந்தது.
இதன்பின்னணியில் வடக்கு முதலமைச்சர் நேற்று ஊடக அறிக்கை அனுப்பி வைத்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது,
'பத்திரிகையாளர் கேள்வி: கல்வி அமைச்சராக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையா?
பதில்: இதில் எந்தவித உண்மையும் இல்லை. யார் யாரை நியமிப்பது என்பது சம்பந்தமாக என்னால் முடிவெடுக்கப்படவில்லை. நியமனங்களைச் செய்ய வேண்டியவர் முதலமைச்சரே. போரின் பின்னரான காலகட்டத்தின் தேவைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் அமைவாக உரிய செயல்முறைகளுக்கும், செயல் நடவடிக்கைகளுக்கும் அமைவாக உரிய நேரத்தில் குறிப்பிட்ட நியமனங்கள் என்னால் செய்யப்படும். தற்பொழுது பதவி விலகிய அமைச்சர்களின் அமைச்சுக்களை நானே மேற்பார்வை செய்து வருகின்றேன்' என்றுள்ளது. (5)

## முதல்வரின்...

வேண்டும் எனக் கோரும் பிரேரணை அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்வதற்காகப் பேரவைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மீன்பிடி மற்றும் சுகாதார அமைச்சுக்கள் மீது மாத்திரம் விசாரணை நடத்துவதற்கு 4 பேரைக் கொண்ட விசாரணைக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார். இவ்வாறானதொரு நிலையில், அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபையின் 98ஆவது அமர்வில் எடுத்துக் கொள்வதற்காக பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணசபை ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதியால் பேரவைக்குச் சமர்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில், "2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் பற்றி கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் சம்பந்தமாக மாகாண சபையே ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்ற பிரேரணையை நான் முன்மொழிந்திருந்தேன்.
தற்போது முதலமைச்சருக்கும், எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் 'சுதந்திரமானதும் - சட்டபூர்வமானதுமான' விசாரணை நடத்தப்படலாம் என்ற இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதனால்,
வடக்கு மாகாண சபையின் அனைத்து அமைச்சர்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக விசாரித்து சபைக்கு அறிக்கை சமர்பிப்பதற்காக தெரிவுக் குழுவொன்றை நியமிக்கும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்" என்றுள்ளது. (5)

## தெரிவுக்...

மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் இருவரையும் கட்டாய விடுப்பில் இருக்க முதலமைச்சர் தெரிவித்ததைத் தொடர்ந்து, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனால் மாகாண சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. இந்த விவகாரம் இணக்கத்திற்கு வரும்போது, சுகாதார மற்றும் மீன்பிடி அமைச்சர்கள் மீதான விசாரணை, சட்டரீதியான - சுதந்திரமானதாக இருக்கும் என்று முதலமைச்சரால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னைய விசாரணைக் குழுவைப் போன்று இரு அமைச்சர்கள் மீதும் விசாரணை நடத்த புதிய விசாரணைக் குழுவை நியமித்துள்ளார்.
இந்த விசாரணைக் குழு முன்பாக முன்னிலையாகுவீர்களா என்று மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் கேட்டபோது, சட்டரீதியான - சுதந்திரமான விசாரணைக்கே முகம் கொடுப்பேன். அவ்வாறில்லாத எந்தவொரு விசாரணையையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். மாகாணசபை தெரிவுக் குழுவே, சட்டரீதியான - சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை. அதனை நியமிக்க முதலமைச்சர் ஏன் பயப்படுகின்றார், தயங்குகின்றார். தெரிவுக் குழு விசாரணை தவிர்ந்த ஏனைய விசாரணைக் குழு முன்பாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முன்னிலையாக மாட்டேன் - என்றார். (5)

## 27 ஆண்டுகளின்...

திகதி மக்களிடம் மீள ஒப்படைக்கப்படவுள்ளன. 27 வருட இடப்பெயர்வு வாழ்வின் பின்னர் மயிலிட்டி மக்கள் தமது சொந்த மண்ணை மிதிக்கவுள்ளனர்.
மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்படுகின்ற தகவல், யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதியால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நேற்று மாலை தெரிவிக்கப்பட்டுள்ளது.
1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி மயிலிட்டி மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்தனர். தமது துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை விடுவிக்குமாறு கோரி பல்வேறு போராட்டங்களையும் நடத்தியிருந்தனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர், உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்தன. மயிலிட்டிப் பிரதேசத்தில் ஆயுதக் கிடங்கு இருப்பதன் காரணமாகவே அந்தப் பகுதியை விடுவிப்பதில் படைத் தரப்பினர் தாமதம் காட்டி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.
விரைவில் மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்படும் என்று தமக்கு உறுதியளிக்கப்பட்டிருந்ததாக, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில், மயிலிட்டித் துறைமுகம் மற்றும் அதனோடு இணைந்த 54.6 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்க பாதுகாப்புத் தரப்பினர் இணங்கியுள்ளனர். (5-101)

## ஜப்பான்...

பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
வார இறுதியில் இலங்கைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யொயோகி பூங்காவில் இலங்கைத் திருவிழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்விலேயே ஜப்பானியப் பொலிஸார் சிலர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.
இலங்கையர்கள் சிலரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஜப்பானியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
மோதலில் ஈடுபட்டவர்கள் மது போதையில் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.
இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்திடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்த போதிலும் அதற்கான பதில் வழங்கப்படவில்லை. எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக, ஜப்பானிய அயலுறவு அமைச்சு, இலங்கைத் தூதரகத்திடம் பிரச்சினை எழுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## பொனிபஸ்...

தலைவரிடம் கோரியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
வன்னிப் படைகளின் தலைமையகத் தளபதியாகப் பணியாற்றிய இவர், புதிய விகாரைகள், சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் முன்னின்று செயற்பட்டவர் என்று கூறப்படுகின்றது.
இந்த நிலையிலேயே இவரை இராணுவத் தளபதியாக நியமிக்குமாறு அரசுக்கு பிக்குகள் கடும் அழுத்தம் வழங்குவதாகத் தெரியவருகின்றது.
இதேவேளை, இராணுவத் தளபதியாக இராணுவத் தலைமை அதிகாரியாக உள்ள மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரச தலைவரின் தெரிவாக இவரே இருப்பதாகவும் கூறப்படுகிறது.
மகளின் பட்டமளிப்பு விழாவில் பற்கேற்பதற்காகச் சீனா சென்றிருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நேற்று முன் தினம் நாடு திரும்பியுள்ளார்.
புதிய இராணுவத் தளபதியின் நியமனம் தொடர்பான அறிவிப்பு, அரச தலைவர் செயலகத்தி[illegible]ருந்து விரைவில் வெளியாகலாம் எ[illegible]டுகின்றது.
கூட்டுப் படைகளின் தளபதியாகப் பணியாற்றிய எயர் மார்ஷல் கோலித குணதிலக கடந்த ஜூன் 15ஆம் திகதி ஓய்வு பெற்றார். இதையடுத்து, அந்தப் பதவி வெற்றிடமாக உள்ளது.
இந்தப் பதவிக்கு, தற்போது சேவையில் உள்ள முப்படைகளின் தளபதிகளில் மூப்பு நிலையில் உள்ளவரான இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா நியமிக்கப்படவுள்ளார் என்று கூறப்படுகிறது. (த)

## செல்போன்...

ணங்களைப் பயன்படுத்தக் கூடாது என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் உத்தரவிட்டிருந்த நிலையில் நேற்றைய கூட்டத்தில் மேற்படி உபகரணங்களெதுவுமின்றியே அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.
அமைச்சரவைக் கூட்டத்தின்போது சில அமைச்சர்கள் கையடக்கத் தொலைபேசியூடாக "முகப்புத்தகம்' பார்த்தல், குறுஞ்செய்திகளை அனுப்புதல், அழைப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்துள்ளனர். இதனால், அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள் மீது அவர்கள் முழுமையாகக் கவனம் செலுத்தவில்லை.
இதை நெடுநாளாகவே அவதானித்துவந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது (20ஆம் திகதி நடைபெற்ற), "இனிமேல் கூட்டம் நடைபெறும்வேளையில் அறைக்குள் எவரும் செல்போன், ரப் உள்ளிட்டவற்றைக் கொண்டு வரக்கூடாது" எனபணிப்புரை விடுத்திருந்தார்.
இதற்கமையவே அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அறைக்குள் செல்வதற்குள் சில அமைச்சர்கள் கையடக்கத் தொலைபேசிகளை செயலிழக்க வைத்தனர். மேலும் சில அமைச்சர்கள் பாதுகாப்பு ஊழியர்களிடம் கொடுத்துவிட்டே சென்றுள்ளனர். இதனால், நேற்றைய தினம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மீது சகல அமைச்சர்களும் கழுகுப் பார்வை செலுத்தினர் எனக் கூறப்பட்டது. (த)

## ஒக்ரோபர்...

வித்தார்.
தேர்தல்கள் ஆணையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான பிரச்சினை தற்போது முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளது. எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் சில தொழில்நுட்பப் பிரச்சினைகள் காணப்படுவதாகச் சில கட்சிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு மேற்படி சட்டவரைவானது நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே எம்மால் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்கமுடியும். இதனை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்திற்கே உள்ளது.
நாடாளுமன்றத்தில் குறித்த சட்டவரைவு நிறைவேற்றப்படாமல் எம்மால் தேர்தலை நடத்தவே முடியாது. சட்டவரைவு நிறைவேற்றப்பட்டு 75 நாள்களுக்குள் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த ஆணையகம் தயாராகவுள்ளது.
இதேவேளை, செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபரில் ஆயுட்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கான அறிவிப்பை அடுத்த ஒக்ரோபர் 2ஆம் திகதி வெளியிடவும் எதிர்ப்பார்த்துள்ளோம். அதற்கு முன்னர் தேர்தலை நடத்துவதென்றால் நாடாளுமன்றமே தீர்மானிக்கவேண்டும் - என்றார். (த)

## டெங்கு...

ளது. இந்த வருடத்தில் தற்போதுவரை 70 ஆயிரம் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் 25 வீதமானவர்கள் 19 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள். எனவே, உடனடியாக அதிகரித்துள்ள டெங்கு நுளம்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியுள்ளது.
இதன் நிமித்தமே மக்களுடன் இணைந்து இரண்டுவார டெங்கு ஒழிப்புத்திட்டம் இன்று முதல் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. குறித்த திட்டம் அரச தலைவர் மைத்திபால சிறிசேன மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோரின் ஆலோசனைக்கமைய முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்துக்கு நாட்டின் நலன் கருதி அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த)

## கிளிநொச்சிக்கு...

டம் நடத்தும் மக்களுடன் சந்திப்பை நடத்தவுள்ளார்.
போரின் பின்னர் கடற்படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள இரணைதீவை விடுவிக்குமாறு கோரி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது போராட்டங்கள் 58 நாள்களை எட்டியுள்ளது. இந்த நிலையில், இரணைத்தீவை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதற்கும் அந்தப் பகுதி மக்களுடன் சந்திப்பை நடத்துவதற்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன் இரணைமாதா நகருக்கு வருகை தரவுள்ளார். (5)

## மூன்று...

இன்று தொடக்க உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து சாட்சியப் பதிவுகள் இடம்பெறவுள்ளன.
மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடுகிறது.
மாணவி வித்தியா படுகொலை வழக்கின் 9 சந்தேகநபர்களும் அநுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள்.
வழக்குத் தொடுநர் சார்பில் பதில் சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா, பிரதி மன்றாடியார் அதிபதி பி.குமாரரத்தினம் மற்றும் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த் ஆகியோர் தீர்ப்பாயத்தில் முன்னிலையாவர்.
9 சந்தேகநபர்கள் சார்பிலும் தீர்ப்பாயத்தால் அரச செலவில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ஜெயந்தவும் பாதிக்கப்பட்டோர் நலன்சார்பில் ஜே.பி.ரஞ்சித்குமாரும் தீர்ப்பாயத்தில் முன்னிலையாவர்.
மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட இடத்தில் பதிவு செய்யப்பட்ட ஒளிப்படங்கள், காணொலிப் பதிவுகள் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் இன்று தீர்ப்பாயம் முன்னிலையில் காண்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூர்ய வெளிநாடு ஒன்றுக்கு பயணமாகியுள்ள நிலையில் அவரது இடத்துக்குப் பதில் சட்டமா அதிபராக மேலதிக மன்றாடியார் அதிபதி டப்புள்ள.டி லிவேரா நியமிக்கப்பட்டுள்ளார். அதனடிப்படையிலேயே இன்றைய அமர்வில் அவர் தொடக்க உரையாற்றவுள்ளார்.
இதேவேளை, 9 சந்தேகநபர்கள் அழைத்து வரப்படுவதாலும் பதில் சட்டமா அதிபர் வருகை தருவதாலும் யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பின்னணி**

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்கு சென்ற வேளை கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்பு கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார். மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் அரச சாட்சியாக உறுதியுரை செய்தார். மேலும் 2 சந்தேகநபர்கள் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத நிலையில் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
ஏனைய 9 சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் உத்தரவில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்படவுள்ளன. வழக்கில் 23 பேர் சாட்சிகளாக இணைக்கப்படவுள்ளனர்.
இந்த வழக்கை விசாரணை செய்ய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தை தலைமை நீதியரசர் நியமித்தார். (வ)



# சரஸ்வதி சம்பியன்

## சொந்தத் தொடரில் சாதித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் தனது 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் குறித்த அணியே சம்பியனானது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கால்பந்தாட்டத் திடலில் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் இரண்டு அணியினரும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தினர். பந்து அங்கும் இங்குமாக அல்லாடித் திரிந்ததுதான் மிச்சம். இரண்டாம் பாதியிலும் கோலெதுவும் பதிவாகவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் கோலெதுவும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி சம்பியனானது.

(ம-23)

# 18 வயதுப் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக விதுசனா தெரிவு



யாழ். ஜூன் 28

யாழ்ப்பாண மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான தடகளத் தொடரில் 18 வயது பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் என். விதுசனா தெரிவு செய்யப்பட்டார்.

கடந்தசனிக்கிழமை, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை என்று இரண்டு தினங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த சுவட்டு வீரராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எம்.தர்சிகன் சிறந்த கள வீரராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த பி.திலக்சன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் சிறந்த சுவட்டு வீராங்கனையான திருக்குடும்ப கன்னியர்மடத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டி.நேமிகா சிறந்த கள வீராங்கனையாக கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த என்.விதுசனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-422)

## ஸ்பேர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி அரசடி ஸ்பேர்ஸ் அணி சம்பியனானது.

ஞானம்ஸின் மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்பேர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மது 21 ஓட்டங்களையும், ரஜி 12 ஓட்டங்களையும், டெஸ்மன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரகீம் 2 இலக்குகளையும் சுரேந்திரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 56 ஓட்டங்களை மட்டும் பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

(ம-108)

## 800 மீற்றர் ஓட்டப் போட்டி அத்தியார் இந்து. சாதிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாண மாவட்ட இளநிலைப் பிரிவு தடகளத் தொடரில் 20 வயது பெண்களுக்கான 800மீற்றர் ஓட்டத்தில் அத்தியார் இந்துக் கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சாதனி முதலாமிடத்தைப் பெற்று தங்கத்தையும் அதே பாடசாலையைச் சேர்ந்த ஆர். டயானி இரண்டாமிடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் மட்டுவில் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.மதுஜா மூன்றாமிடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## பிரான்பற்று வென்றது தங்கம்



யாழ்ப்பாண மாவட்ட இளநிலைப் பிரிவினருக்கான தடகளத் தொடரில் 16வயதுப் பெண்களுக்கான 800மீற்றர் ஓட்டத்தில் பண்டத்தரிப்பு பிரான்பற்று பாடசாலைக்குத் தங்கப் பதக்கம் கிடைத்துது.

பண்டத்தரிப்பு பிரான்பற்று வித்தியாலய மாணவி கௌ.கிருசாந்தி தங்கப்பதக்கத்தையும், நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவி ஜே.திருட்சிகா வெள்ளிப்பதக்கத்தையும், பிரான்பற்று வித்தியாலய மாணவி எஸ்.கேதா வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். (ம-108)

## இன்றைய மோதல்கள்

**நண்பர்கள் வி.கழக கால்பந்துத் தொடர்**

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை முதல் குறித்த கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இன்றுமாலை4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**கலைமதி வி.க. கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**உதயதாரகையின் கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துபலாலி விண்மீன் விளையாட்டுக்கழக 'பி' அணியும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து கரவைச்சுடர் அணியும் மோதவுள்ளன.

(ம-108,23,422)

# யங்கம்பன்ஸ், விண்மீன் அணிகள் காலிறுதிக்குள்

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் என்பன காலிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழகமும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார் யங் கம்பன்ஸின் நிரோசன். அடுத்த இரண்டே நிமிடத்தில் கலட்டி ஐக்கிய அணியின் நிசாந்தன் பதிலடிகொடுத்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது யங்கம்பன்ஸ் அணி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தில் விண்மீன்வீரர் யூட்கெனடி முதல் கோலை 5ஆவது நிமிடத்தில் பதிவு செய்தார். தொடர்ந்து 10ஆவது, 18 ஆவது நிமிடங்களில் அதே அணி வீரர் டேமியன்மற்றும் நிஷ்ரன் கோல்களை பதிவு செய்ய 3:0 என விண்மீன் முன்னிலையுடன் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பிற்பகுதியிலும் விண்மீனின் ஆதிக்கம் மேலோங்கியது. அமலதாஸ் 35ஆவது, 40ஆவது நிமிடங்களில் இரு கோல்களைப் பதிவுசெய்தார். இறுதியில் 5:0 என்றமுறையில் விண்மீன் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தெரிவானது. அந்த அணி.

(ம-108)

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 27.06.2017 | 2151 | நீலம் |

கும்பம்

வெற்றி இலக்கங்கள்: 07 21 54 58

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி: ரூ. 2, 299, 328/=

30.06.2017 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த
09.07.2016 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
**வைத்தி
சிவராசபதி**
(காந்திய தொண்டர்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை (29.06.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வினோபாஜி வீதி,
போயிட்டி, நீர்வேலி.

குடும்பத்தினர்.

## தேவை

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வரும் ஆங்கில மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை. Pharmacist Certificate உள்ள மருந்தாளர் ஆண்/ பெண் இருபாலரும் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**ஆர்.வி.ஜி மருந்தகம்**
**504 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## SUBRA கல்வி நிறுவனம் - சித்தன்கேணி
### ஆள்கள் தேவை

எமது நிறுவனத்தின் நிர்வாக அலுவல்களை மேற்கொள்ள பெண்பிள்ளைகள் தேவைப்படுகின்றனர். சுயவிவரங்களை 30.06.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
**077 715 7779**
**071 847 4320** - நிர்வாகி -

தரம் 01 முதல் 05 ஆம் வகுப்பு வரையான பாடங்கள் நடைபெறவுள்ளன.
30.06.2017 இற்கு முன்னராகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.
**077 715 7779**
**071 847 4320** - நிர்வாகி -

## SUBRA கல்வி நிறுவனம் - வட்டுக்கோட்டை

தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
30.06.2017 ஆம் திகதிக்கு முன்னராக பதிவுகளை மேற்கொள்ளவும்.
**077 715 7779,**
**071 847 4320,**
**077 852 2949** - நிர்வாகி -

## மாவட்டச்செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விவரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | மதிப்பீடுத் தொகை | வேண்டப்படும் ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D11/Edu/KNV 329-2 | கிளி/ கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் வகுப்பறை நிர்மாணம் | 4.28மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or C7 building | ரூபா 43,000.00 வங்கிப் பிணை 17/10/2017வரை | ரூபா 2,000.00 |
| 2 | KN/DPS/D11/Edu/TGTM/329-6 | கிளி/ தர்மக்கேணி அ.த.க பாடசாலை வகுப்பறை நிர்மாணம் | 4.28மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or C7 building | ரூபா 43,000.00 வங்கிப் பிணை 17/10/2017வரை | ரூபா 2,000.00 |
| 3 | KN/DPS/D11/Edu/St.Th 329.- 7 | கிளி/சென் தெரேசா பெண்கள் கல்லூரி வகுப்பறை நிர்மாணம் | 4.28மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக | C8 or C7 building | ரூபா 43,000.00 வங்கிப் பிணை 17/10/2017வரை | ரூபா 2,000.00 |
| 4 | KN/DPS/D11/Edu/St.Ant 329-8 | கிளி/சென் அன்ரனிஸ் RCTMS வகுப்பறை நிர்மாணம் | 4.28மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக | C8 or C7 building | ரூபா 43,000.00 வங்கிப் பிணை 17/10/2017வரை | ரூபா 2,000.00 |
| 5 | KN/DPS/D16/ONU/ID/467/PHP-01 | கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் வகுப்பறை நிர்மாணம் | 4.28மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக | C8 or C7 building | ரூபா 43,000.00 வங்கிப் பிணை 17/10/2017வரை | ரூபா 2,000.00 |
| 6 | KN/DPS/D16/ONU/ID/467/KMV-02 | கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் வகுப்பறை,மலசலகூடம் நிர்மாணம் | 12.75மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக | C6 and C5 building | ரூபா 128,000.00 வங்கிப் பிணை 14/11/2017வரை | ரூபா 3,500.00 |
| 7 | KN/DPS/D06/FB 199 | தீயணைப்பு நிலைய கட்டட நிர்மாணம்,கிளிநொச்சி | 20.051மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக | C6 and C5 Building, C9 or above Highway | ரூபா 201,000.00 வங்கிப் பிணை 14/11/2017வரை | ரூபா 3,500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/ CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.
II. இக்ராட் (ICTAD/ CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்கவேண்டும்.
III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்திற்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
IV. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல.: 021 228 5357, பக்ஸ் இல.: 021 228 3966)
3. கேள்வி ஆவணங்களை 29.06.2017 ஆம் திகதியிலிருந்து 17.07.2017 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற் பகல் 3.00 மணிவரை வேலை நாள்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 18.07.2017 ஆம் திகதி முற்பகல் 02.30 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 11.07.2017 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## WIN Repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/Cகளும் வீடுகளுக்கு வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648 942

## கணக்கீடு → A/L 2018 & A/L 2019

(புதிய பிரிவுகள் ஆரம்ப அலகில் இருந்து)
**MR. BALAKAJEN**
**KBK Accounting Centre**
(பிரத்தியேக மற்றும் குழுவகுப்புக்கான நிலையம்)

| கந்தர்மடச்சந்தி யாழ்ப்பாணம். | கொழும்புத்துறை |
|---|---|
| Thu, Fri - 4 - 6 p.m | Sat, Sun - 2 - 6 p.m |

## வணிகக்கல்வி

**மாணவர்களிற்காக தொடர் கருத்தரங்கு**

இடம் - பொருளியற் கல்லூரி
யாழ்.நகர்
காலம் - **July** 03/04/06/07

| ஆசிரியர் : | நேரம் |
|---|---|
| சக்திவடிவேல் பிரதீபன் | பி.ப. 1.30 - 5.30 |

தொடர்புகளுக்கு - 077 4659 133

## SHAMROCK
ஈச்சமோட்டை

A/L 2019 2018

**வணிகக்கல்வி**
C. சிவராஜா
Tue, Wed
4-6 P.M

## SPOKEN ENGLISH
### WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர் யுவதிகள், தொழில்தேடுவோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் 3 மாதங்களிலேயே தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.

3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.07.2017

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.ப | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் வகுப்புகள் (திங்கள் மற்றும் புதன்)
1.காலை 08-10 2.காலை 10-12 3.மாலை 03-05

நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## பதவி வெற்றிடங்கள்

பல்தேசிய கம்பனியின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய புதிய 10 மேலதிக கிளைகளுக்கான முகாமைத்துவ பயிற்சியுடன்கூடிய பதவி வெற்றிடங்கள்.
பயிற்சியின்போது 15000/= -18000/=, பயிற்சியின் பின்னர் 60000/=,
அனுபவம் தேவையில்லை, வயது 18-30, O/L தகைமை போதுமானது.
தங்குமிடவசதி, மருத்துவம் இலவசம்.
மட்டுப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடங்களே! உடன் அழைக்குக.

**GMI Group**
077 802 1371, 077 999 4807
No.423, Stanly Road, Jaffna.

## அரியதோர் வாய்ப்பு

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் அமெரிக்க நிறுவனமானது இலங்கையில் இறக்குமதி மற்றும் மொத்த வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றது.
இந் நிறுவனமானது இலங்கையின் வடபகுதியில் 05 புதிய கிளை நிறுவனத்திற்காக 35 பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்வுள்ளன.

**கல்வித்தகைமை + வேலை**
**10 - O/L படித்தவர்கள் -** விற்பனை பிரதிநிதிகள்
மேற் பார்வையாளர்கள்
**A/L படித்தவர்கள் -** அலுவலகர்கள்
உதவி முகாமையாளர்கள்
**Diploma மற்றும்**
**மேலதிக கல்வித்தகைமை -** முகாமையாளர்கள்

தொடர்புகளுக்கு:
077 517 9034, 076 864 3505, 021 722 3317

## நியத வாசனா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 577 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 27.06.2017

வெற்றி இலக்கங்கள்: 09 22 42 65 T

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 29,596,699/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

## கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 155
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 27.06.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 91,909,628/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: Z 12 22 67 78

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.